# நாயக்க மாதேவி

வித்துவான் கா. மாயாண்டி பாரதி

தமிழ் விரிவுரையாளர்: தூய யோவான் கல்லூரி,
பாளையங்கோட்டை

MADURAI UNIVERSITY LIBRARY
4 AUG 1970
MADURAI.

பழனியப்பா பிரதர்ஸ்

சேப்பாக்கம் :: தெப்பக்குளம்
சென்னை-5 :: திருச்சி - 2

முதற் பதிப்பு: 1955.
இரண்டாம் பதிப்பு: 1963.
உரிமை பதிப்பகத்தார்க்கே.

விலை ரூ. 2-25

குமுதம் அச்சகம், சென்னை - 2.

# முன்னுரை

இன்றைய தமிழகத்தில் நாட்டின் வரலாறுகளும், பெருமக்கள் வரலாறுகளும் மின்னல் வேகத்தில் வெளிவந்துகொண்டிருப்பதை யாம் அறிவோம். அதற்குக் காரணம் என்னை? வரலாறு ஒரு நாட்டின் முன்னேற்றத்தை அளவிடும் கருவி எனவும், வாழ்க்கையென்னும் வழுக்கு நிலத்தில் ஊன்றிச் செல்ல உதவும் உறுதியான கோல் எனவும் அறிஞர் பலரும் தெள்ளிதிற் கண்ட உண்மையேயாம். இவ்வுண்மையைக் கருத்திற் கொண்டே பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த மாதரசி மங்கம்மாளின் வரலாற்றை **"நாயக்க மாதேவி"** என்ற பெயரமைப்பில் யான் எழுதப் புகுந்தேன்.

காசியிலிருந்து கன்னியாகுமரி வரை கணக்கில்லாத அறச்செயல்களைப் புரிந்து கவின் புகழ் கொண்ட மங்கம்மாளின் வரலாறு இதுகாறும் தமிழ் நாட்டில் விரிந்த தனி நூலாக வெளிவராமலிருந்தது பெருங் குறையே. 'அக் குறையைப் போக்குதல் உன் கடன்' என்று ஆணையிடுவது போன்ற உணர்ச்சி ஒரு நாள் என் உள்ளத்தே உண்டாயிற்று! அவ்வுணர்வால் உந்தப்பட்டு என் சிறு முயற்சியால் கொணர்ந்ததே இந் நூல்.

இதன்கண் அம்மையாரின் அறக்கொடை, அரசியல் திறம், சமத்துவப் பண்பு, சமாதான நோக்கு, இறையன்பு, நீதிமாண்பு முதலியன விளங்க வரையப்பட்டுள்ளன. மங்கம்மாளின் மாட்சியினைத் தெரிவிக்கச் சங்கப் பெண்மணிகள், சைவ நன்மணிகள் ஆகியோரின் வரலாறுகளும் எடுத்தாளப் பட்டுள்ளன. ஆதாம் கால முதல் அனுக்குண்டு காலம் வரையுள்ள இடைக்காலத்தில் ஆட்சி புரிந்த பெண்ணரசியர் சிலர் வரலாறுகளும் அம்மையின் ஆட்சித் திறனை விளக்குதற்கு ஒப்பு நோக்கி ஆராயப்பட்டுள்ளன. இந்நூலினைப் பயிலும் அனைவரும் அறம் பிறழா நெறி நின்று பெண்ணுக்குரிமை தந்து தம்முரிமை காத்துத் தண்கடல் நிகர்த்த அன்பால் ஒத்த நிலையினராக வாழ்ந்து நாட்டின் பெருமையை நிலை நிறுத்துவர் என்று எண்ணுகின்றேன். அன்றியும், இலக்கியச் சுவையுடைய உண்மை வரலாறுகளில் ஒன்றாகக் கருதித் தமிழ் மக்கள் வரவேற்றுப் போற்றுவர் என்றும் நம்புகின்றேன்.

இந்நூலினை எழுதுதற்கு வேண்டும் கருவி நூல்கள், குறிப்புகள் கூறி யுதவிய திருநெல்வேலி இந்துக் கலாசாலை வரலாற்றாசிரியர் உயர்திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு பி. ஏ., எல். டி., அவர்கட்கும், யான் அனுப்பிய கையெழுத்துப் படியை அன்பு கூர்ந்து ஆய்ந்து செம்மைப் படுத்திச் சிறந்ததோர் அணிந்துரையும் வரைந்தருளிய

மைசூர்ப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் சித்தாந்த வாசகமணி உயர்திரு. எஸ். ருத்திரபதி எம். ஏ., அவர்கட்கும், இம் முயற்சியில் ஈடுபடுமாறு கூறி, ஆக்கமும் ஊக்கமும் தந்துதவியவர்களாகிய பாளையங் கோட்டைத் தூய யோவான் கல்லூரி முதல்வர் உயர்திரு. ஜே. வேதசிரோன்மணி எம். ஏ., பி. எல்., அவர்கட்கும், பெங்களூர்ப் புதிய கல்லூரிப் பௌதிகப் பேராசிரியரும் எனது மைத்துனருமாகிய உயர்திரு. எம். மலையாண்டி எம். எஸ்ஸி. அவர்கட்கும் என் அன்புகலந்த வணக்கமும் நன்றியும் என்றும் உரியது.

இந் நூலினை நன் முறையில் பதிப்பித்து என்னை மேன்மேலும் தமிழ்ப் பணியில் ஊக்குவிக்கும் பழனியப்பா வெளியீட்டாருக்கும் என் உளங்கெழுமிய நன்றி உரியதாக.

இப்பணியினை முட்டின்றி முடிக்கத் துணையாய் நின்ற தமிழணங்கின் தண்ணளிக்குத் தலைவணங்குகின்றேன்.

பாளையம்பதி
18—11—1955 } கா. மாயாண்டி பாரதி.

# அணிந்துரை

வித்துவான் திரு. கா. மாயாண்டி பாரதி அவர்களால் வரையப்பெற்ற 'நாயக்க மாதேவி' யென்னும் விழுமிய சரித நூல் வரப் பெற்று முழுதும் படித்துப் பார்த்தேன். தெளிந்த தமிழ் நடையில் எழுதப்பட்டுள்ளது. பதினேழாம் நூற்றாண்டில்வாழ்ந்து அரசாட்சி புரிந்து என்றும் அழியாப் புகழ் படைத்த மாதரசி மங்கம்மாளின் வாழ்க்கை வரலாறு நம் நாட்டுப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் அறத்தாறிதுவென வறிந்தொழுகுதற்கும், ஒல்லும் வகையான் அறவினை ஓவாது செல்லும் வாயெல்லாம் அறஞ் செய்து ஒழுக வேண்டு மென்பதற்கும், சமயப்பொறை யின்றியமையாத தென்பதற்கும், கடவுளை நம்பினோர் கைவிடப்படார் என்பதற்கும் உரிய பல சான்றுகள் அறியப் பெற்று மகிழ்வூட்டு மென்பதில் எட்டுணையும் ஐயமில்லை.

ஆசிரியர் புறநானூறு, சிலப்பதிகாரம், திருக்குறள் முதலிய நூல்களினின்றும் அரச நீதிகளையும், அரசர் ஒழுகலாற்றினைப் பற்றிப் புலவர் கூறுவனவற்றையும் ஆங்காங்கே எடுத்துக் காட்டியிருப்பது படிப்போர்க்கு இன்ப மூட்டு மென்பது என் நம்பிக்கை. பெண்ணின் பெருமையை நன்கு எடுத்துக் காட்டியுள்ளது நாம் பாராட்டத்

தக்கது. தமிழ் நாட்டுச் சரிதத்தை ஆசிரியர் நன்கு நுணித்தறிந்துளார் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன. 'சரித்திரம் படிப்பதால் மாந்தர்கள் கூரிய அறிவு பெறுகின்றனர்' என்று ஓர் ஆங்கிலப் பேரறிஞர் கூறுகின்றார். அவ் வுண்மை இந்நூல் படிப்போர்க்கு நன்கு விளங்கும். கற்புக்குக் கண்ணகியையும், அறிவுக்கு அவ்வையாரையும், அறத்திற்கு அரசியார் மங்கம்மாளையும் எடுத்துக் கூறி இந்நூலை முடித்திருப்பது மிகவும் போற்றற்குரித்து. தொடக்கத்தில் பெண்ணின் பெருமையைப் பேசத் தொடங்கிய ஆசிரியர் முடிவிலும் பெண்ணின் பெருமை கூறி முடித்திருப்பது,

"ஆதாரம் சக்தி யென்றே அருமறைகள் கூறும்,"
"சக்தியாய்ச் சிவமாய்,"

என்ற வுண்மைகளை நினைவூட்டுகின்றது. இத்தகைய தமிழ் நாட்டுப் பெருமையைக் கூறும் சரித சம்பந்தமான பல நூல்கள் வரைந்து தமிழ்த்தாய்க்குத் தக்கதொரு பணிபுரியுமாறு இறைவன் இந் நூலாசிரியருக்கு எல்லா வசதிகளையும் அருளுமாறு அவன் திருவடிகளை மனமொழிகளால் இறைஞ்சுகின்றேன்.

மத்தியக் கல்லூரி,
பெங்களூர்
27—9—'55

எஸ். ருத்திரபதி,
தமிழ்த் துறைத் தலைவர்,
மைசூர்ப் பல்கலைக் கழகம்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI

# உள்ளுறை

முன்னுரை ... i

அணிந்துரை ... vi

1. தோற்றுவாய் ... 1
2. உலகில் பெண்குல ஆட்சி ... 6
3. நாயக்க அரசின் தோற்றமும் வளர்ச்சியும் ... 14
4. மங்கம்மாள் பிறப்பும் மணவினைச் சிறப்பும் ... 42
5. மங்கம்மாள் மகப்பேறும் மாதேவிப் பட்டமும் ... 64
6. மங்கம்மாள் அறமும் அரசியலும் ... 94
7. அம்மையாரின் அருங்குணங்கள் ... 124
8. அம்மையாரின் மறைவு ... 146

MADURAI UNIVERSITY LIBRARY

# நாயக்க மாதேவி

## 1. தோற்றுவாய்

கைபுனைந்தியற்றுக் கவின்பெரு வனப்புடையது இவ் வையம். அதன் அழியா அழகையே இயற்கை என்று சொல்லுவர். அந்த இயற்கையினைத் தெய்வக் காட்சியாகக் கண்டனர் ஆன்றோர். உயர்ந்த மலையும், பரந்த கடலும், ஓங்கிய வானும், ஓடும் ஆறும் கடவுட் கோலமாகக் கருதப்பட்டன. அவற்றைப் பெண் ணாகவே பெயரிட்டு வழிபடும் தெய்வங்களாக்கினர் புலவர் பெருமக்கள். மலைமகள் அலைமகள் என்றும், கலைமகள் திருமகள் என்றும் எப்பொருளையும் பெண் ணுருவாகவே கண்டனர். வையை என்னும் பொய் யாக் குலக் கொடி என வாழ்த்தினர் வண்டமிழ்ப் பாவாணர். காவிரியைப் பெண்ணாக்கிக் கானல் வரி பாடுகின்றார் கவியரசர் இளங்கோ. கங்கையைத் தெய்வ மங்கையாய்க் கவினுறக் கொண்டனர் சிவனார். முப்பெருந் தொழில் செயும் வித்தகக் கடவுளார் மூவரும் நாவிலும் மார்பிலும் தோளிலும் பெண்களைக் கொண்டுள்ளனர். பிரமன் நாவிலே கலைமகளைக் காட் டினர் கலைஞர். திருமால் மார்பிலே திருமகளைத் தீட்டி னர் ஓவியர். சிவபிரான் கூற்றிலே உமையை வார்த் தனர் சிற்பிகள். இவையனைத்தும் ஒரு சிறந்த உண் மையை வெளிப்படுத்துவது காணலாம். அதுதான் இயற்கைப் பொருள்கள் யாவும் பெண்மை வடிவே

என்பது. ஆகவே, பெண்மையே உலகம்; பெண்மையே சக்தி; பெண்மையே அழகு; பெண்மையே தெய்வம்; பெண்மையே பேரின்பம்; பெண்மையே எல்லாம் என்று கருதிய பெருமை மிகு நாடல்லவா நம் நாடு? நாட்டையும் மொழியையும் பெண்ணாக்கி அன்னையாகப் போற்றும் தமிழ் மரபு வியக்கத் தக்கதேயாம்.

இலக்கியங்கள் பெண் குலத்திற்கே பெருமை தந்து பேசுவதைக் காண்கின்றோம். கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வம் கண்ணகி பெண்ணுலகிற்கே பெருமை தந்து நிற்பதைச் சிலம்பில் காண்கின்றோம். அமுதசுரபி ஏந்திய அறக்கடவுளாம் மணிமேகலை நங்கையர் நாயகமாய் இலங்கிப் பெருமை நல்குவதைத் தண்டமிழாசான் ஒண்டமிழ்ப் பாக்களில் காண்கின்றோம். 'பெண்ணிற் பெருந்தக்க யாவுள' எனப் பெருமிதத்தோடு கேட்கும் வள்ளுவர் குறளைக் காண்கின்றோம். பெண்ணினல்லாளொடும் பெருந்தகை யிருந்ததை வியந்து உருகிப் பாடும் தேவாரப் பாடல் பெண்ணைத் தெய்வமாகக் கண்டு பெருமை வழங்குவதைக் காண்கின்றோம். பெண்பாலுகந்தான் பெரும் பித்தன் என்று பெண்மைக்கு முதன்மை தந்து பேசும் மணிவாசகனாரின் திருவாசகத்தைக் காண்கின்றோம். பெண்ணின் பெருமையைக் குறித்துப் பேசாத நூல்களோ, பாடாத புலவர்களோ இல்லை என்னலாம்.

இடைக் காலத்தில் பெண்ணினம் ஊமைத் தன்மையாக்கப்பட்டிருந்தது. ஆட்சி புரிவதும் மாட்சி பெறுவதும் ஆடவரே என்ற அகந்தை மிகுந்தது.

அதனால் ஆணுக்கொரு நீதி பெண்ணுக்கொரு நீதி வகுத்து அடிமைப்படுத்தினர் ஆடவர். வாழ்விலே உள்ள உரிமை யனைத்தையும் வலுவில் பறித்தனர் அன்னார். 'அடுப்பூதும் பெண்டிர்க்குப் படிப்பேது' என்ற அறியாமை மொழியை ஊட்டினர். பெண் இனத்தைச் சிறகிழந்த பறவைபோல ஆக்கினர்; மண்ணினும் கேடாக மதித்தனர். இந்த நிலையை எத்தனை காலங்கள் பொறுத்திருப்பர்? ஒரு விலங்கும் தன் உரிமையை இழக்காது வாழ விரும்புவதைப் பார்க்கும் பெண் குலம் வாளாவிருக்குமோ?

மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று ஆர்ப்பரித்தது பெண் இனம். சட்டங்கள் செய்வதும் பட்டங்கள் ஆள்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்; எட்டுணையும் ஆணுக்கு இளைப்பில்லை என்று கும்மியடித்துக் குரல் எழுப்பியது பெண்ணினம். பெண்ணினமும் ஆணினமும் கண்களும் அவற்றின் ஒளியும் போன்றது; கவின் மிக்க மலரும் அதன் நறுமணமும் போன்றது. இரு வகைப் பட்ட இனமும் தண்கடல் நிகர்த்த அன்பால் சரிநிகர் சமானமாக இந்த நாட்டிலே வாழ்வோம் என்று சமத்துவ முரசை முழக்கின. பெண்ணினத்தை அடிமையாக வைத்திருக்கும் எந்த நாடும் மண்ணுலகில் விடுதலைப் பண் பாடமுடியாதல்லவா? ஆகவே, பெண்ணடிமை தீருமட்டும் மண்ணடிமை தீர்தல் முயற்கொம்புதான் என விண் முட்டப் பண் பாடியது ஆணினம். பெண்ணைத் தாயாகப் பேணும் கடமையுணர்ச்சி கொண்டது ஆணினம். தொட்டிலாட்டுங் கை தொல்லுலகை ஆளுங் கை, செங்கோல்

தாங்கி மங்கா அறம் வளர்க்குங் கை என்பதை ஒப்புக் கொள்ள முடிந்தது. பெண்குல மின்றேல் அற மெங்கே? ஆன்ற அறிவெங்கே? மாண்புடை மக்க ளெங்கே? மதிமிகு மன்னன் எங்கே? எல்லாவற் றிற்கும் அடிப்படையாக இருப்பது மாதர் குலமன்றோ? 'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய் திடல் வேண்டும்; பங்கயக் கைநலம் பார்த்தல்லவோ இந்தப் பாரில் அறங்கள் வளரும்' எனப் பாடும் கவிமணி தேசிகனாரின் மொழிகள் பெண்குலத்தின் தலைமைக்கும் பெருமைக்கும் சான்றாகும். பிறவியில் அரிது பெண் பிறவிபோலும்!

அரிதாகிய பெண் பிறவியினை நன்கு அறிந்தவர் பண்டைப் பெருமக்கள். பெண் பிறப்பின் தன்மையை உணர்ந்து உரிமையும் கல்வியும் அளித்துப் பெரு மைப் படுத்தினர். தமிழ் உருவெடுத்த ஔவை மூதாட்டியின் ஒல்காப் பெரும் புலமையை யாவரே அறியாதார்? ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியன் தன் கோப்பெருந்தேவிக்கு அவைக்கண் அமரும் உரிமையும், அரசியல் கருத்துக்களை ஆராயும் பெரு மையும் வழங்கிச் சிறப்பித்தான் என்பது வெள்ளிடை மலை. இமயவரம்பனின் இளவல் செங்குட்டுவன் தன் கோப்பெருந்தேவி யிடத்து ஆராய்ந்த பின்னரே கற்பிற் கரசியாம் கண்ணகிக்குப் பொற்கோவில் எடுத்து வழிபட்டான் எனக் காண்கின்றோம். அறி விலும் ஆட்சியிலும் ஆடவரும் பெண்டிரும் ஒத்த உரிமை கொண்டிருந்தனர் என்பதற்கு வேறு சான்று கூறவேண்டுமோ?

பெண் பிறப்பின் அருமையை அறிந்த புலவர் அதன் அருட் பண்பையும் கண்கூடாகக் கண்டனர்; பெண்ணாலேதான் இந்த மண்ணுலகம் அழியாது நிலைபெற்றுள்ளது என்று கருதினர்; ஆதலால், பெண்ணின் மேல் ஒரு சிறு துரும்பு பட்டாலும் தம் கண்ணிற் பட்டது போல் கருதிவந்தனர்; பெண்ணை இகழ்வோரைக் காணவும் நாணினர்; பெண்ணிற் கிரங்காரைப் பேயர் என்றெண்ணினர்; பெண்கொலை புரிந்தோரைத் தம் வாணாள் உள்ளளவும் காணவும் போற்றவும் கூசினர்; அவர்தம் குலத்தையே புலவரினம் பாடாது ஒழிக என வரையறைப்படுத்தினர். நன்னன் என்பவனால் பெண்கொலை ஏற்பட்டுத் தமிழகத்திற்குத் துடைக்க முடியாத பழி வந்ததைக் கண்ட புலவர் இனம் அவனையும் அவன் மரபையும் பாடா தொழிந்த வரலாறு ஒன்று பெண்குலம் மதிக்கப்பட்டமைக்குத் தக்க சான்றாகும். ஆலமர் செல்வற்கு அரிய கலிங்கம் நல்கிய ஆய் வள்ளலின் அரண்மனைப் பெண்டிர் பரிசிலர்க்குத் தங்கள் அணிகலன்களை யெல்லாம் அளித்து அருட் பண்பில் தலை நின்றதும் இங்கு நினைத்தற் குரியதாம். பெண்களின் கண்களிலே கண்ணீர் சிந்தவும் காணப் பொறுத புலவருள்ளத்தைப் பேகன் மனைவி கண்ணகியின் வரலாற்றால் காண்கின்றோம். சங்ககாலப் பெண்மணிகளும் சைவ நன்மணிகளும் ஆண்டாள் முதலிய அருள் மணிகளும் பெண்குலத்தின் மங்கா விளக்குகள். ஆகவே, பெண்களே இவ்வுலகின் கண்கள் என்பதில் சிறிதும் ஐயமில்லையல்லவா?

# 2. உலகில் பெண் குல ஆட்சி

முந்திய பகுதியில் பெண்களின் மாட்சியினைக் கண்டோம். இலக்கிய வரலாற்றிலே பெண்களின் ஆட்சி அருகியே காணப்படுகின்றது. ஆடவரும் பெண்டிரும் ஆளும் உரிமையுடையவரே; எனினும், ஆடவரே வழிவழி உரிமையுடையவராய் ஆட்சி செலுத்தும் பொறுப்பை ஏற்று விளங்கினர். பழந் தமிழகத்தில் பெண்கள் இருவர் ஆட்சி புரிந்ததைப் புராணத்தால் அறியலாம்.

பாண்டி நாடே முதன் முதல் பெண்களுக்கு ஆளும் உரிமை தந்து பெருமை பெற்றது. அல்லி என்னும் பெயர் தமிழகப் பெண்டிர்க்குத் தெரியாதது அன்று. அவ் அம்மை 'ஆயிரம் பாண்டியர்க்கு ஓர் அல்லி' எனச் சிறப்பிக்கப் பெற்ற பெண்ணரசியாவார். மதுரை மாநகரைத் தலைநகராகக் கொண்டு சைவமும் தமிழும் வளர்த்த பாண்டியர் மரபில் வந்தவர்; சித்தி ராங்கத பாண்டியனின் செல்வ மகள்; விற்கலையிலும் வல்லவளாக விளங்கினாள். வடநாட்டில் அரசமரபில் தோன்றியவன் அருச்சுனன். பாண்டவர் ஐவருள் ஒருவன்; வில்லில் அவனை வெல்வார் எவருமில்லை என்னும்படியான வீரன்; தீர்த்த யாத்திரையின் பொருட்டுக் கன்னியா குமரிக் கடலாடச் சென்றவன் மதுரையில் தங்கினன்; பாண்டியன் மகள் சித்திராங் கதையைக் கண்டு காதல் கொண்டான். இருவரும் மணம் புரிந்து கொண்டனர். நீராடி வருங்கால் அழைத்துப் போவேன் என்று கூறித் தம் நாட்டிற்கே

சென்றுவிட்டான். அந்தச் சித்திராங்கதை தந்தைக் குப் பின் முடி சூட்டப்பட்டு ஆட்சி புரிவாளானாள். அவ் வம்மையார் ஆட்சியில் அன்பும் இன்பமும், அமைதியும் அருளும் குடிகொண்டிருந்தன. அப் பெண்ணரசியே அல்லி என்னும் மாதரசியார் !

பிறிதொரு பெண்ணரசியாரும் பாண்டிப் பழம்பதி யில் ஆட்சி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. மலையத் துவச பாண்டியன் மகப்பேறு இல்லாமல் மனம் வருந்தி வேள்வி செய்தான். சிவபிரான் அருளால் வேள்வியில் தோன்றியவரே தடாதகைப் பிராட்டியார். ஒரே மகளைப் பெற்ற பாண்டியன் கண்போல் பேணி வளர்த்தான்; உரிய பருவம் வந்ததும் பாண்டிய நாட்டிற்கே அரசியாக முடி சூட்டினான். பல்கலையும் ஒருங்கே கற்ற மாதரசியார் செங்கோல் செலுத்தி உலகையெல்லாம் வென்று புகழ் பெற்றார். பகைவர் தம் திறைப் பொருளைத் தவறாது செலுத்தினர்; திருக்கைலாயம் சென்று நந்தி கணங்களுடன் போர் செய்து தோற்றோடச் செய்தனர். நந்தி கணங்களின் தலைவராகிய சிவபெருமான் போருக்கு வந்தனர். அம்மையார் அப்பெருமானைக் கண்டதும் போர் செய்ய இயலாது நாணி நின்றனர். அவ் விறைவனே சோம சுந்தர பாண்டியனாகத் தோன்றவும் அவரையே மணந்து மதுரை மாதேவியாக அமர்ந்து ஆட்சி புரிந் தார். அவ்வம்மையே மதுரை மீனாட்சி என்ற பெண் ணரசியாவார் !

இனி, உலக நாடுகளில், பெண்கள் அரசு பெரு மிதத்தோடு விளங்கியவை பல. ஐரோப்பிய நாடு

களில் சில, பெண்களுக்கு ஆளும் உரிமை இல்லை எனச் சட்டம் செய்தன. இத்தாலி, பிரெஞ்சு முதலிய நாடுகள் இன்றுவரை பெண்களுக்கு அரசுரிமை வழங்காது வருவனவாகும். அந் நாட்டினர் தங்கள் நாட்டினைத் தாய்நாடு என்று அழைக்காமல் தந்தையர் நாடு என்றே அழைத்து மகிழ்வர். உலகில் பெண்ணரசு பெருமிதமுற்றது இங்கிலாந்து நாட்டிலேதான் என்று கூறுவது மிகையன்று. வேறு எந்த நாடும் இந்த அளவு பெண்களைப் போற்றவில்லை. இங்கிலாந்து நாட்டை அரசு புரிந்த பெண்மணிகளாக இன்றுவரை அறியப்படுவர் ஐவர். அவர்களுள் மேரி அம்மையார், முதலாம் எலிசபெத்து, விக்டோரியா மகாராணி, இரண்டாம் எலிசபெத்து எனும் நால்வரும் குறிப்பிடத் தக்கவர்கள். இங்கிலாந்து சரித்திரத்திலே முதல் பெண்ணரசியாகும் பேறு பெற்றவர் மேரி அம்மையார். ஐந்து ஆண்டுகளே ஆட்சி நடைபெற்றன. நாட்டுப் பற்றுக் கொண்ட அம்மையார் பிரெஞ்சு மன்னன் இரண்டாம் பிலிப் என்பவரை மணந்து இரு நாடுகளின் ஒற்றுமைக்கும் பாடுபட்டார். எனினும், அந்நாட்டில் இடையறுது தொடர்ந்த மதப் போரால் வெற்றி பெற முடியவில்லை. பிரெஞ்சு மன்னனேடு நிகழ்த்திய போர் ஒன்றே அம்மையாரின் ஆட்சியில் குறிக்கத் தகுந்ததாகும்.

அடுத்தாற்போல இங்கிலாந்து அரசியாக முடிசூட்டிக் கொண்டவர் எலிசபெத்து அம்மையார். எட்டாம் ஹென்றியின் மகளார்; பல மொழிகள் கற்றவர்; எல்லா வகைப்பட்ட கலைகளிலும் வல்லவர்; இங்கி

லாந்தின் அரசியருக்குள் பெருமை வாய்ந்தவர்; ஆடம்பர வாழ்வும், அளவில்லாத் திறனும், அசையா நம்பிக்கையும் உடையவர்; அரசுரிமை முழுவதையும் தானே கொண்டு ஆளவேண்டும் என்ற கருத்தினால், மணமுடித்துக் கொள்ளாமலே வாழ்ந்தவர்; கன்னிப் பெண்ணரசியாகவே கடைசிவரை யிருந்து நாற்பத்தைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்து மிக்க புகழ் பெற்றவர். இங்கிலாந்தின் சரித்திரத்தில் எலிசபெத்து அம்மையாரின் காலத்தைப் 'பொற்காலம்' என்று போற்றிப் புகழ்வார்கள். அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் குறிப்பிடத்தக்கது ஸ்பெயின் நாட்டுடன் நடத்திய பயங்கரக் கப்பற் போர். இப்போர் நிகழ்ந்தது 1588-ஆம் ஆண்டிலாகும். இங்கிலாந்தின் தலைவிதியை முடிவுகட்டிய போர்; இங்கிலாந்து நாட்டின் வளர்ச்சிக்குக் காரணமான போர்; எலிசபெத்து அரசியாரை உலகப் புகழ் பெறச் செய்த போர்! இலக்கிய மன்னன் ஷேக்ஸ்பியர் முதலிய பெருங்கவிஞர்கள் தோன்றிய காலமும் அதுவே. இலக்கிய மறுமலர்ச்சிக் காலமென வரலாற்றிலே புகழ்ந்து பேசப்படுவது அம்மையாரின் காலமேயன்றோ!

இங்கிலாந்தின் வரலாற்றிலே நீண்டகால ஆட்சி செலுத்தியவர்களுள் விக்டோரியா அம்மையாரே முதன்மை யாவார். நான்காம் வில்லியம் அரசனுக்குப் பின் பட்டம் பெற்றார். பதினெட்டு வயதிலே முடி சூட்டப் பெற்றவர்; எண்பத்திரண்டு ஆண்டுகள் வாழ்ந்து பெரும்புகழ் பெற்றவர். பொன் விழா, வைரவிழாக்களைக் கண்ட பேரரசியார் அவர் ஒருவரே.

இவ் வம்மையார் ஆட்சிக் காலத்தில் இங்கிலாந்து நாட்டிற்கும் ருசிய நாட்டிற்கும் நடைபெற்ற போரும் இந்திய சுதந்தரப் போராட்டம் என்று சொல்லப் படும் சிப்பாய்க் கலகமும், இங்கிலாந்திற்கும் ஆலந் திற்கும் நிகழ்ந்த தென்னுப்பிரிக்கப் போரும் குறிப் பிடத் தக்கனவாம். இவ் வம்மையார் காலத்தில் பாமர்ஸ்டன், டிஸ்ரலே, கிளாஸ்டன் போன்ற பெரு நாவலர்கள் பாராளுமன்றத் தலைமை அமைச்சர்களாக விளங்கினர்கள். சிப்பாய்க் கலகத்திற்குக் காரணமாக இருந்த கிழக்கிந்தியக் குழுவினர் ஆட்சி நீங்கியது. இந்தியர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் திட்டங் கள் அடங்கிய அறிக்கை அம்மையாரால் வெளியிடப் பட்டது. இந்தியப் பேரரசியாகவும் முடி சூட்டிக் கொண்டார். விக்டோரியா காலத்திலேதான் இலக் கியம் இணையின்றி வளர்ந்தது; விஞ்ஞானம் விரைந்து முன்னேறி நாகரிகத்தை உண்டு பண்ணியது; கவிஞர் மன்னன் டென்னிசன், கீட்ஸ், ஷெல்லி போன்ற புலவர் மணிகள் உருவாயினர். நாவலாசிரியர் தாக்கரே, உரைநடை மன்னன் டிக்கன்ஸ், நாடக வேந்தர்கள் கால்ஸ்வொர்தி, பெர்னட்ஷா முதலி யோர் தோன்றி இலக்கியப்பணி புரிந்தனர். இலக்கியம் மின்னல் வேகத்தில் வளர்ந்த காலம் இப் பெண்ணரசி யாரின் காலமேயாம்.

இங்கிலாந்தின் அரசியாக இன்று விளங்கும் எலிசபெத் அம்மையார் ஆட்சியும் சிறப்புறும் என்ப தற்குரிய அறிகுறிகள் காணப்படுகின்றன. ஆரும் ஜார்ஜ் மன்னர் நோய்வாய்ப்பட்டு உயிர் நீத்ததால், இங்கிலாந்தின் அரசிற்கு ஆண்மக்கள் இல்லை.

ஆகவே, மீண்டும் பெண்ணரசு ஏற்பட்டது. அழகுத் தெய்வமாக விளங்கும் அம்மையாருக்கு முடிசூட்டு விழா நடைபெற்றது. இந்தியா போன்ற பெரு நாடுகள் விழாவில் கலந்து கொண்டன. பாராளு மன்றத் தலைமை அமைச்சர் சர்ச்சில் என்பவர்; இரண்டாவது உலகப் போரிலே ஹிட்லரால் ஏற்பட்ட அழிவைக் கண்டு அஞ்சாது படைத் தலைமை பூண்டு வெற்றிபெற்றவர்; இங்கிலாந்தின் சரித்திரத்திலே என்றும் மறக்க முடியாத தனிப்பெரும் வீரர் என்று குறிக்கத் தகுந்தவர்; போர் நினைவுகளைக் குறித்து மிக விரிவான வரலாற்றை எழுதி உலகிற்கு அளித்ததால் இலக்கியப் பேரறிஞர் என்ற பட்டமும், நோபல் பரிசும் பெற்றவர்.

எலிசபெத்து அம்மையாரின் முடி சூட்டு விழாவன்று உலக வரலாற்றிலே இடம்பெறத் தக்க வெற்றி நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அது தான் வானளாவ ஓங்கிய இமயப் பெருமலையின் சிகரத்தினைக் கில்லாரியின் தலைமையிலே சென்ற டென்சிங் என்ற இந்திய வீரன் முதலிலே கால் வைத்து வெற்றிக் கொடி நாட்டியது ஆகும். அந்த நற்செய்தி அம்மையாரின் முடி சூட்டு விழா அன்றே உலகெங்கும் அறிவிக்கப்பட்டது. வெள்ளிப் பனி மலையின் உச்சியைக் கண்ட வியப்புறு செய்தியைக் கேட்ட எலிசபெத்து அம்மையார் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவுண்டோ? உலகமே அவ் வீரனைப் பாராட்டி வியந்தது! இந்த வெற்றிச் செய்தி ஒன்றே இங்கிலாந்து அரசியின் வருங்காலம் சிறப்புறும் என்பதற்கு அறிகுறியாகுமல்லவா?

இந்திய நாட்டை ஆங்கிலேயர் ஆட்சி புரிந்த 1857-ஆம் ஆண்டில் ஒரு குறிப்பிடத் தகுந்த நிகழ்ச்சி நடைபெற்றது. அதுதான் இந்திய சுதந்திரப் போராட்டம் என்று கூறப்படுகின்ற சிப்பாய்க் கலகம். ஆங்கிலேயர்கள் இந்தியர்களின் மதம், இனம் முதலிய வற்றின் பண்பாட்டை அழிக்கச் சூழ்ச்சி செய்தனர் என்பதே அப்போராட்டத்திற்குக் காரணம். ஜான்ஸி ராணி அம்மை இலக்குமிபாய் இணையில்லா வீர மிக்கவர்; ஒரு படையினைத் திரட்டித் தாமே ஆண் உடை தரித்துத் தளபதியாக வந்தார்; வீரவுணர்ச்சி யோடு ஆங்கிலப் படையுடன் போரிட்டார்; வீர மரணம் எய்தினார். இந்தப் போரின் விளைவால் இந்தியர்கள் தங்கள் உரிமைகளில் சிலவற்றைப் பெற் றார்கள். எனினும், இந்தியா முழுச் சுதந்திரம் அடை யும் வரை போராடியே தீருவோம் என்ற எண்ணம் இந்தியர்களுக்கு அன்றே தோன்றியது. அதனாலே தான் ஜான்ஸிராணி இலக்குமிபாயை இந்திய சுதந் தரப் போராட்டத் தாய் என்று மக்கள் போற்றுவா ராயினர்.

உலக முழுவதும் பெண்ணரசியார் வீரமிக்க வர்களாக விளங்கியமைக்குச் சான்றுகள் உள்ளன. எகிப்து நாட்டிலே கிளியோபட்ராவும், ருசிய நாட் டிலே கேதரினும், ஆலந்து நாட்டிலே ஜூலியானா, வெல்ஹெல்மினா என்பவர்களும், இங்கிலாந்து நாட் டிலே மேரி முதலானவர்களும், இந்திய நாட்டிலே ஜான்ஸிராணி, சுல்தான் ருசியா, சாந்த்பீபி, பீகம் என்பவர்களும் வெற்றியுடன் அரசோச்சினர். அவ் வாறே பாண்டி மண்டலத்திலே நாயக்க மாதேவி

மங்கம்மாள் செங்கோல் ஓச்சி மங்கா அறம் வளர்த்துப் புகழ் கொண்டனர். உலகப் பேரரசியர்களின் வரலாற்றை இங்கே சுருக்கமாகக் கூறியது மங்கம்மாள் அம்மையின் மாட்சியை ஒப்பிட்டு உணர்வதற்கே யாகும். அவ் வம்மையாரும் உலகில் ஆட்சி புரிந்த பெண்டிருள் சிறந்தவர் என்பதைக் காணுமுன், அவர் தம் முன்னோர் ஆட்சி அமைப்பைக் கூறவேண்டுவது இன்றியமையாததல்லவா ?

# 3. நாயக்க அரசின் தோற்றமும் வளர்ச்சியும்

உலகில் பெண்குல ஆட்சி சிறந்து விளங்கிற்று என்பதை முன்னர்க் கண்டோம். அப் பெண்ணரசிய ரோடு ஒத்து மதிக்கத் தகுந்த நாயக்க மாதேவி மங்கம்மாளின் முன்னோர் வரலாற்றைச் சுருங்கக் காண்போம்.

அல்லாவுதீன் கில்ஜி என்பவர் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்த முகம்மதிய மன்னர். இவருடைய படைத் தலைவர் மாலிக் காபூர் என்பவர்; தென்னாட்டின் மீது படை யெடுத்து பல அரசர்களையும் வென்று கப்பம் கட்டச் செய்தவர்; இந்துக்களை இஸ்லாம் மதத்தை மேற்கொள்ளுமாறு வற்புறுத்தினார்; இணங்காத இந்துக்களைக் கொடு மைப் படுத்தினார்; இராமேசுவரம் வரையிலும் சென்று வெற்றிக்கொடி நாட்டினார். இந்தக் கொடுமையிலிருந்து இந்துக்களை வாழ வைக்கும் நோக்கத்துடன் தோன்றியதே விஜயநகர அரசாகும். தென்னாட்டு மன்னர்களை யெல்லாம் ஒன்று சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் பிறந்தது. முகம்மதிய அரசர்களின் அடிபட்டுக் கிடந்த இந்து அரசர்களை யெல்லாம் விடு வித்தனர். தென்னாடு முழுவதையும் இந்து அரசாக அமைத்த பெருமை விஜயநகர அரசர்களுக்கே உரிய தாகும். அவ்வரசர்களுக்குள் இணையற்றவராக விளங் கியவர் கிருஷ்ணதேவராயர் என்பவர். இப் பேரரசர்

ஆட்சி புரிந்தது பதினறுவது நூற்றுண்டில் ஆகும். அதே காலத்தில் பாண்டிய நாட்டை அரசு புரிந்தவர் சந்திரசேகர பாண்டியன் என்பவர். சோழநாட்டைச் சிறப்புடன் செங்கோல் செலுத்தியவர் வீரசேகர சோழன் என்பவர். சோழன் பெரும் படையுடன் மதுரை சென்று பாண்டியனைத் தோற்கடித்தான். பாண்டியன் விஜயநகரப் பேரரசின் ஆட்சிக்கு உட்பட்டவன். ஆதலால், கிருஷ்ணதேவராயரிடம் சென்று உதவுமாறு முறையிட்டான். இராயர் மிகுந்த இரக்கமும் கோபமும் கொண்டார். அவருடைய அமைச்சரும் தளபதியுமாகிய நாகம நாயக்கரைப் பாண்டியனுக்கு ஆட்சியுரிமையை மீட்டுத் தருமாறு ஆணையிட்டார். அரசரின் ஆணையை ஏற்றுப் பெரும் படையுடன் நாகமர் தென்னுடு சென்ருர்; சோழ நாட்டு அரசன் வீரசேகரனை எதிர்த்து வெற்றி பெற்ருர். சோழன் தோல்வியடைந்து தம் நாட்டிற்கே திரும்ப ஓடிவிட்டான். நாகமர் திரும்பக் கைப்பற்றிய நாட்டைப் பாண்டியனிடம் ஒப்புவிக்கவில்லை. அவனுக்கு ஆளுந் திறமையில்லை என்று கருதியதால் தாமே ஆட்சி செலுத்தலானுர். அதன் காரணமாக இராயரின் ஆணையை மீறியவரானுர். பாண்டியன் விஜயநகரத்திற்கு விரைந்து சென்ருன். நாகமரின் செயலை விளங்கக் கூறி ஆட்சியுரிமை கிடைக்க அருளுதல் வேண்டும் என்று முறையிட்டான். 'நம் ஆணையை மதியாத நாகமர் தலையைக் கொய்தலே தக்கது. அவர் தலையைக் கொணர்வார் யாவர்?' என அவையோரைக் கேட்டார் இராயர். அனைவரும் அச்சடித்த பதுமைகள் போல் அமர்ந்திருந்தனர்.

நாகமரின் அருந்தவக் குரிசில் விசுவநாதர் எழுந்தார், 'யானே கொணர்வேன். அனுமதி தருக' எனப் பணிந்து நின்றார். அவையோர் அனைவரும் திடுக்கிட்டனர். இராயரோ தந்தையோடு சேர்ந்து விடுவானோ என்ற ஐயத்தால் சிறிது நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருந்தார். அறிவும் ஆற்றலும் கொண்ட அமைச்சர் அரியநாத முதலியார் அப்பொழுது அமைச்சராக விளங்கினாரல்லவா ? அவரையும் விசுவநாதருடன் செல்லுமாறு பணித்தார் அரசர். இருவரும் பெரும் படையுடன் பாண்டி நாட்டின் தலைநகரை அண்மினர். வருகையை அறிந்த நாகமர் தம் மைந்தனைத் தம் வலையில் அகப்படுத்தப் பல வழிகளைப் பின்பற்றினார். யாவும் பயனில்லாது போயின. இரு படைகளும் போர்க்களம் புகுந்தன. போர் தொடங்கி மிகக் கடுமையாக நடைபெற்றது. இரு பக்கத்திலும் வெற்றியும் தோல்வியும் வருவன போல் தோன்றினும் இறுதியில் விசுவநாதரே வெற்றிக் கொடி நாட்டினர். நாகமர் விலங்கிடப்பட்டு இராயர் முன் கொண்டுவந்து நிறுத்தப்பட்டார். அரசர், விசுவநாதரின் வீரத்தையும் உண்மைப் பணியையும் கண்டு வியந்தார் ! அவரின் உண்மைக்காக நாகமரை மன்னித்தார் ; மீண்டும் பதவியிலிருக்குமாறு வேண்டினார். நாகமரோ உடைந்த உள்ளமுடையவராய் ஒப்புக்கொள்ள நாணினார். எனினும், அரசரின் சொல்லைக் கடக்க முடியாது தவித்தார். அன்புக் கயிற்றை அறுத்தல் ஒல்லுமோ ? இராயர் சிற்றரசர்களை மேற்பார்த்து வருவதற்காக ஒவ்வொரு மண்டலத்திலும் ஒவ்வொரு அதிகாரியைப் பொறுப்பாக

அமைந்திருந்தது போலவே தமிழ்நாட்டுச் சிற்றரசர் களை மேற்பார்க்கும் பெரும் பணியை நாகமருக்கு அளித்தார். ஆதலால், நாகமர் 'மஹா மண்டலேஸ் வரர்' என்று அழைக்கப்படும் சிறப்பைப் பெற்றார். விசுவநாதர் கடமையின் காவலராக விளங்கியதால் விஜயநகரப் பேரரசரின் உள்ளக் கோவிலில் உறை யும் தெய்வமாகிவிட்டார் என்றே சொல்லலாம்!

சந்திரசேகர பாண்டியன் விசுவநாதரால் மீண் டும் அரியணை அமர்ந்து ஆட்சி புரிந்தானல்லவா? அப்பொழுது விசுவநாதரைத் தன் மனத்துள் மிகவும் போற்றி வைத்திருந்தான். அவரது கடமை யுணர்ச்சி யும், உண்மைப் பண்பும் பாண்டியனைக் கவர்ந்து விட்டன. பாண்டி நாட்டு மக்களும் விசுவநாதரை மிகவும் மதித்துப் பாராட்டத் தொடங்கினர். பாண் டியன் தனக்குப் பின் ஆட்சியுரிமை பெறுவதற்குத் தகுதியுடையவர் விசுவநாதரே என்று எண்ணி யிருந் தான்; அதன்படியே கிருஷ்ணதேவராயருக்குத் தன் கருத்தைத் தெரிவித்திருந்தான். திருமுகங் கிடைக்கப் பெற்ற இராயரும் விசுவநாதருக்கு வரும் பெருமையை நினைந்து மகிழ்ந்திருந்தார். இந்தச் சமயத்தில் யாவரும் வருந்துமாறு கூற்றுவன் இராயர் உயிரைக் கவர்ந் தான். விஜயநகரப் பேரரசு தாமரையில்லாத் தடாகம் போன்றிருந்தது! அரச உரிமையை அவர் தம்பி அச்சுதராயர் ஏற்றனர். அச்சுதராயர் அரசரானதும் பாண்டி நாட்டார் விருப்பத்தை நிறைவேற்ற முனைந் தார். அரசனும் மக்களும் ஒருசேர விரும்பும் விசுவநாத ரைப் பாண்டி நாட்டிற்கு அனுப்பி வைத்தார். மதுரைத்

தலைநகரை அடைந்ததும் மகிழ்வோடு வரவேற்றனர். அவருக்கு முடிசூட்டி வாழ்த்தினர். பாண்டி நாட்டு அரசராக விசுவநாதரும், அமைச்சராக அரியநாதரும் ஒருங்கே அமைந்தது இந்துவும் இரவியும் இணைந்து தோன்றியது போலிருந்தது! அன்று முதல் பாண்டியர் ஆட்சி நீங்கியது. நாயக்கர் ஆட்சி தொடங்கியது. நாயக்க அரசைத் தோற்றுவிக்கும் பெருமை முதன் முதலில் விசுவநாத நாயக்கருக்கே கிடைத்தது !

பாண்டி நாட்டில் நாயக்க அரசு பதினாறுவது நூற்றாண்டில் தொடங்கியது. அந்த மரபில் வந்த அரசர்கள் பதின்மூன்று பேராவர். அவர்களுள் பெண் பாலார் இருவராவர். நாயக்க மன்னர்கள் ஏறக் குறைய இருநூறாண்டுகள் பாண்டி மண்டலத்தை ஆண்டனர். அங்ஙனம் ஆட்சி புரிந்த அரசர்களுள் மிகுந்த புகழுடன் விளங்கியவர் மூவராவர். நாயக்க அரசைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கர், திருமலை நாயக்கர், இராணி மங்கம்மாள் ஆகியோரே அம் மூவர். அவர்கள் நாயக்க அரசின் தோற்றம், வளர்ச்சி, புகழ் முதலியவற்றிற்கு எவ்வாறு காரணமாவார்கள் என்பதைச் சுருக்கமாகக் காண்போம்.

**விசுவநாத நாயக்கர்**

விஜய நகரப் பேரரசின் மதிப்பிற்குரிய 'மஹா மண்டலேசுவரர்' நாகம நாயக்கர். பிள்ளையில்லாப் பெருங் குறையால் காசிப்பதி சென்று வழிபாடு செய்தார். அதன் பிறகு பிறந்த ஒரே மைந்தன் தான் நாயக்க மரபைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கர். பாண்டிநாட்டு மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கி

மதுரை மன்னராக முடிசூட்டிக் கொண்டாரன்றோ? அக்காலை பாண்டிநாடு பெருங் குழப்பத்தில் மூழ்கிக் கிடந்தது. அமைதிக்கு வழியில்லை. அளவிலாத் தொல்லைகள் வந்துகொண்டே யிருந்தன. ஒருபுறம் 'பஞ்சபாண்டியர்' என்பார் தங்கட்கே பாண்டிநாட் டுரிமை உடையது என்று கூறி மக்களிடையே கிளர்ச்சி செய்து வந்தனர். இந்தச் சூழ்நிலையிலேயே விசுவநாத நாயக்கர் பாண்டிநாட்டு மன்னராக முடிசூட்டிக் கொண்டார். அவருக்கு உறுதுணையாக இருந்தவரே தளவாய் அரியநாத முதலியார். மதிநலம் சான்ற அமைச்சர்; எஃகுள்ளம் படைத்த படைத் தலைவர். இருவரும் நாட்டின் நலத்திலே கருத்துக் கொண்டனர்; அல்லல் நிலையை அகற்ற ஆராய்ச்சி யில் இறங்கினர்; ஒரு சிறந்த முடிவிற்கு வந்தனர். உடனடியாகச் செய்யப்படும் சில செயல்களினாலே தான் மக்களின் குறைகளை அறவே நீக்கமுடியும் என்று கண்டனர். அவ்வாறு இருவரும் சூழ்ந்து செய்த சிறந்த முறைகளை அறியவேண்டுவது இன்றி யமையாததாகும் அன்றோ?

அரசன் எத்துணைத் திறம் படைத்தவனாயினும் மக்கள் மனநிலை யறிந்து ஆட்சியை நடத்தவில்லை யெனில், அவன் புகழ்பெறுதல் அரிதாகும். குடிகளைத் தழுவிச் செங்கோல் செலுத்தும் மன்னனை யன்றோ மக்கள் அடி தொழுது ஏத்துவர். அவ் வுண்மையை நன்கு அறிந்து செயலாற்றினர் அரசரும் அமைச்ச ரும். முதலாவதாக, உழவுத் தொழில் சிறப்படைய வையைப் பேராற்றில் இரண்டு அணைகளைக் கட்டினர். அவையே சிற்றணை என்றும், பேரணை என்றும்

சொல்லப்படுவன. பல இலட்சக்கணக்கான பொருட் செலவில் கட்டப்பட்டதால், பரந்துபட்ட நிலங்களை வளம் கொழிக்கும் நிலங்களாக மாற்றின. நாட்டின் உயிர்த்தொழில் உழவு என்று சொல்வதை யாரே அறியார்? ஏரினையுடைய உழவர்களைப் பாதுகாப்பது தான் அரசன் தன்னைப் பாதுகாக்கும் வழி என்பதை ஆன்றோர் அறிந்துரைத்தனர். விசுவநாதர் செய்த இந்தப் பெரும்பணி எல்லா மக்களின் உள்ளத்தையும் இன்புறச் செய்தது. விசுவநாதரை அரசராக மதித்த மக்கள் அவரே கண்கண்ட கடவுள் எனவும் வியந்து போற்றினர்!

இரண்டாவதாக, மக்களின் சமய வுணர்வை நன்கு அறிந்து அத்துறையில் சில செயல்கள் ஆற்று வதற்கு முற்பட்டார். சோழ நாட்டிற்குத் தலைநகராக விளங்கிய தஞ்சையில் விஜயநகரப் பேரரசராகிய அச்சுதராயரின் உறவினர் செவ்வப்ப நாயக்கர் என் பவர் ஆட்சிபுரிந்து வந்தார். விசுவநாதர் நேரிலே சென்று அவரைக் கண்டு உரையாடினர். இருவரும் நிகழ்த்திய பேச்சின் வாயிலாக ஓர் ஒப்பந்தம் நடை பெற்றது. அஃதாவது, சோழனுக்கு உரிமையாக இருந்த திருச்சிராப்பள்ளியைப் பாண்டியனும், பாண்டியனுக்குச் சொந்தமாக இருந்த வல்லம் கோட்டையைச் சோழனும் தங்கள் நாட்டோடு சேர்த் துக் கொள்வதாகும். அந்த ஒப்பந்தப்படியே திருச் சிராப்பள்ளியைச் சேர்த்து எல்லை வரையறை செய் தார். திருச்சிமாநகரைப் பாதுகாப்பதற்கு இரண்டு பெரிய மதில்களைச் சுற்றிலும் எழுப்பினர். இன்றும் பீடுடன் திகழும் மலைக்கோட்டையைப் பெட்புற

அமைத்தவர் அவரே. மலையின் உச்சியில் அமைந் துள்ள தாயுமானவர் கோவிலுக்குத் திருப்பணி செய்தார். திருவரங்கத்தில் உள்ள அரங்கநாதர் கோவில் பழுதுபட்டுக் கிடந்தது. அதனை யறிந்து கோவிலைச் செப்பம் செய்து பெரிதாகக் கட்டினார். மண்டபங்கள், திருச்சுற்றுகள், குடியிருப்பு மனைகள் முதலியவற்றை ஒழுங்குபட அமைத்தார். மக்களையும் குடிபுகச் செய்து வேண்டும் உதவிகளும் செய்தார். திருவரங்கப் பெருங்கோவில் திருப்பணிக்கு அவர் செலவிட்ட பொன் மூன்று இலட்சம் எனில், அவர் ஆர்வத்தை என்னென்பது? அவருடைய பரந்த உள்ளங் கண்டு தொழாதார் எவரே? இவ்வரிய செயலால், மதுரைக்கு வடக்கே யுள்ளா ரனைவரும் மன்னராக விசுவநாதர் தமக்கு வாய்த்தார் என எண்ணி எண்ணி இறும்பூது எய்தினர்!

அதன் பிறகு மதுரைமா நகர மக்களையும் தம்பால் அன்புகொள்ளுமாறு சில செயல்களைச் செய்தார். மதுரையின் பழம் பெருமையை மீண்டும் நிலைபெறு மாறு செய்யவேண்டும் என எண்ணினார். முகம்மதியப் படையெடுப்பால் பாழ்பட்டுக் கிடந்த கோட்டைகள், கோவிலின் மதில்கள், கோபுரங்கள், குடிமனைகள் முதலியவற்றைக் கண்டார். அவர்களின் கலையுணர்ச்சி யில்லாச் செயல் கண்டு மனம் வெதும்பினார். மதுரை நகரைச் சுற்றிலும் மாபெருங் கோட்டை மதில்களை அமைத்தார். அதனுள் எழுபத்திரண்டு கொத்தளங் களை ஏற்படுத்தினார். தம் தந்தையார் தேடிவைத்த பொருளையெல்லாம் கோவில் திருப்பணிக்கே செல

விட்டார். தந்தை தமக்குச் சேர்த்துவைத்த பெருஞ் செல்வத்தை மதுரை மீனுட்சியம்மை கோவிலுக்குப் பயன்படுத்திய அவருடைய பேருள்ளம் கண்டு போற்றினர் மக்கள். விசுவநாதர் ஆட்சி ஏற்ற காலத்தில் சிறிது வெறுப்புக்கொண்டிருந்த பாண்டிநாட்டார் சிலரும் உள்ளம் மாறுபட்டனர். உவகை மீதூரப் பெற்றனர். அரசரேயன்றி அமைச்சராக விளங்கிய அரியநாதரும் தம் செல்வமனைத்தையும் பொதுநலப் பணிக்கே பயன்படுத்தினுர் என்பதை அறிகின்ருேம். இன்றும் அங்கயற்கண்ணியின் ஆலயத்தோடு இணைந்த ஆயிரக்கால் மண்டபம் அவர்தம் அரிய முயற்சியால் எழுப்பப்பட்டதன்ருே? அவர் செய்த அருந் தொண்டை மறவாத பாண்டி நாட்டார் அரியநாத முதலியாரின் உருவச்சிலையை அம் மண்டபத்தின்கண் அமைத்துப் போற்றுவதே தக்க சான்ருகும். அரசரும் அமைச்சரும் உள்ளத்தால் ஒருவரேயாகிச் செய்த திருப்பணிகளே மதுரை மாநகரத்து மக்கள் உள்ளத்தை மாற்றி மதிக்கச் செய்தன என்று சொல்லலாம். அன்றியும், திருவிழாக்கள் மாதந் தோறும் நிகழ்ந்துவரச் சிற்றூர்கள் சிலவற்றைத் தேவதானமாக அளித்தார். பூசை நாடோறும் நடைபெறுவதற்கும், மக்கள் வழிபாடு செய்து வருவதற்கும் ஏற்பாடுகள் செய்தார். இந்தச் செயல்களை விந்தைக்குரியதாக எண்ணிச் சிந்தை குளிர்ந்தனர் செந்தமிழ் நாட்டார். விசுவநாதர் தம் அரிய தொண்டுகளால் எல்லா மக்களையும் வென்றுவிட்டார். எனினும், அவருக்குப் பகைவர் சிலரும் இருந்தனர். அப் பகையினை வென்று விளங்கிய திறனைக் காண்போம்.

விசுவநாத நாயக்கர் ஆட்சிக்கு வந்ததை எதிர்த்துப் பகைமை கொண்டிருந்தவரே பஞ்ச பாண்டியர் என்பார். அவர்கள் தென்பாண்டி நாட்டிலுள்ள கயத்தாறு என்ற ஊரினை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்து செல்வாக்குப் பெற்றிருந்தனர்; வலிமை பொருந்திய படை ஒன்றை அமைத்து விசுவநாதர் ஆட்சியை ஒழித்துவிட முடிவு செய்திருந்தனர்; தமிழ் நாட்டில் வடுகர் ஆட்சி புரியத் தமிழர் கைகட்டி வாழ்வதா என்று மக்களிடையே உணர்ச்சியை எழுப்பினர். பல்லாயிரங் காளையர் படையில் வீரர்களாகப் பதிவுசெய்து கொண்டனர். நாட்டுப் பற்றும் உரிமை வேட்கையும் விஞ்சிய வீரர்கள் போரை நோக்கிய வண்ணம் இருந்தனர். இவ்வாறு கிளர்ந்தெழுந்த வீரர்களின் வேட்கையை எளிதிலே அடக்க முடியுமோ? அதனால், முதலில் நாயக்க அரசர் பஞ்ச பாண்டியர்க்குத் தூது விடுத்தனர். தூதுவர் பாண்டியரிடம் நாயக்க அரசர்க்கு அடங்கி வாழவேண்டும் என்று தெரிவித்தனர். உரிமையைப் பெற்றல்லது பணியும் வழக்கம் எங்கள் பாண்டிய மரபினர்க்கு இல்லை என்று மார்தட்டி மறுத்துக் கூறினர். தூதுவர் வாயிலாக அரசர்க்குச் செய்தி எட்டியது. அரியநாதர் பெரும் படையுடன் போர்புரிய வந்தனர். மூன்று மாதங்கள் இடைவிடாத போர் நிகழ்ந்தும் பயன் ஒன்றும் இல்லை. எண்ணற்ற இளங் காளைகள் மண்ணில் புதையுண்டனர். பஞ்ச பாண்டியரை வெல்லுதல் எளிதன்று. அவர்கள் தாம் வணங்கி வாழ்வதைப் பிண வாழ்வென்று எண்ணுபவரன்றோ? விசுவநாதரும் படையுடன் அரியநாதருக்கு உதவும்

பொருட்டு விரைந்து வந்தார். இரு சாராருக்கும் மீண்டும் கடும் போர் நடைபெற்றது. வெற்றி என்பது அருமையாகி விட்டது. போர் ஆறு மாத காலமாக நடைபெற்றும் நாயக்க மன்னர், பஞ்ச பாண்டியரை வெல்ல முடியவில்லை. நாட்டுணர்ச்சி கொண்ட அவர்களை அவ்வளவு எளிதில் அழிக்க முடியுமா? ஆதலால், அரசரும் அமைச்சரும் ஆராய்ந்தனர். சிந்தனைக் களஞ்சியம் அரியநாதர் என்று சொல்லுவது உண்மையாயிற்று! விசுவநாதரும் பஞ்ச பாண்டியரும் ஒப்புக்கொள்ளத் தக்க அரிய முடிவை அவர் வெளியிட்டார். அம்முடிவை இருவரும் ஒருங்கே ஒப்புக் கொண்டனர். கயத்தாற்றில் கோவில் கொண்டிருக்கும் பெருமாளே பஞ்ச பாண்டியர் வழிபடும் தெய்வம். விசுவநாதரும் வைணவ சமயத்தைச் சேர்ந்தவர்; திருவரங்கப் பெருங் கோவிலை அழகுற அமைத்தவர்; திருமாலிடத்துக் குறைவிலா அன்பு பூண்டவர். ஆகவே, இருவரும் பெருமாள் பக்தர்கள் என்பது விளக்கமாம். ஒப்பந்தப்படி இருவருடைய சார்பிலும் ஒவ்வொரு வீரர் வந்து பெருமாள் திருமுன்பில் மற்போர் புரியவேண்டும். வெற்றிபெற்ற வீரர் எப்பக்கத்தவரோ அவரே பாண்டி நாட்டை ஆட்சி செய்யும் உரிமையுடையவர். அம் முடிபே பெருமாளின் திருவுளமாகும். அரியநாதரின் அகத்தே எழுந்த இக் கருத்தினை என்னென்பது! விசுவநாத நாயக்கர் ஒரு வீரர். பஞ்ச பாண்டியர் சார்பில் இணையிலாப் பெருவீரன் தென்பாண்டி வீமன் ஒருவன். இருவரும் பெருமாளை நினைந்து போர் தொடங்கினர். வெற்றியோ தோல்வியோ இல்லாமல்

நெடுநேரம் போர் புரிந்தனர். இரு சார்பினரும் போரினை ஆர்வத்தோடு கண்டு நின்றனர். ஒரு முடிவும் ஏற்படவில்லை. மற்போரை நிறுத்திவிட்டு வாட்போர் தொடங்கினர். மார்பிலும் தோளிலும் முகத்திலும் காலிலும் புண்கள் பல ஏற்பட்டன. இருவரும் சோர்ந்து தரையிலே வீழ்ந்து கிடந்தனர். எனினும், விசுவநாதர் சின்னேரத்தில் எழுந்து விட்டார். வீமனோ எழவே இல்லை. வெற்றி விசுவநாதருக்கே ஆயிற்று ! வாய்மை குன்றாத பஞ்ச பாண்டியர் கயத்தாற்றுச் சீமையையும் நாயக்கரிடம் ஒப்புவித்து விட்டுப் பொதியமலைச் சாரலை நோக்கிச் சென்று விட்டனர்! இச் செய்தி விசுவநாதரின் புகழை மலை மேலிட்ட விளக்காக்கியது !

விசுவநாதர் ஆட்சிக் காலத்தில் பாண்டிய நாடு திருச்சிராப்பள்ளியிலிருந்து திருநெல்வேலி வரை பரவியிருந்தது. இத்துணைப் பரப்புடைய நாட்டைத் தாமே அமைதியுடன் ஆட்சி செலுத்துதல் இயலாது என்பதை உணர்ந்தார். கொங்கு நாடு, சேர நாடு, சோழ நாடு முதலியவற்றிலும் சில பகுதிகளை வென்று தம் நாட்டுடன் சேர்த்திருந்தார். அதனால், அரசரும் அமைச்சரும் நாட்டை அமைதி நிலவும்படி ஆட்சி புரிவது எவ்வாறு என ஆராய்ந்தனர். இறுதியில் இரண்டு சிறந்த திட்டங்களை வகுத்தனர். நாட்டின் பரப்பும், நாட்டிலுள்ள வேறுபட்ட இனங்களுமே இத் திட்டங்களைத் தீட்டுவதற்குக் காரணங்களாகும். பாண்டியர் ஆட்சிக் காலத்தில் அரசாங்கப் பதவிகள் வகித்தோர், படைத் தலைமை பூண்டோர் முதலியோர்

சில ஊர்களையும் கோட்டைகளையும் கைப்பற்றிச் சிற்றரசர்களாக அமைந்து விட்டனர். அவர்களைப் பாண்டியன் சந்திரசேகரன் அடங்கி வாழுமாறு செய்ய முடியவில்லை. பாண்டிய நாட்டிற்கு நாயக்கர் அரசராக வந்ததும் அவர்களின் உரிமை முழுவதையும் இழக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு தங்கள் உரிமையை இழந்த அவர்கள் அரசர்மீது வெறுப்புடையவர்களா யிருந்தனர். அம் மக்களின் உள்ளத்தைக் குறிப்பாக உணர்ந்தார் அரியநாதர். அவர்களின் உரிமையை மீண்டும் அளிக்காவிட்டால் நாட்டில் நிலைத்த அமைதியும் இன்பமும் நிலவ முடியாது எனக் கண்டார். ஆளும் இனத்தவர், ஆளப்படும் இனத்தவர் என்ற வேறுபாட்டுணர்ச்சியும் அவர்களிடம் இருப் பதையும் உய்த்துணர்ந்தார். ஆகவே, தமிழர், தெலுங்கர் முதலிய அனைவரையும் ஒப்ப மதித்து உரிமை வழங்கவேண்டும் என்று விசுவநாதர்பால் தெரிவித்தார். இருவரும் சூழ்ந்து தங்கள் ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதிகளைப் பகுத்தனர். ஒவ்வொரு வருக்கும் ஒவ்வொரு பகுதியை உரிமையாகக் கொடுத்து ஆட்சிபுரியச் செய்தனர். அப் பகுதிக்குப் பாளையம் என்றும், அதற்கு உரியவரைப் பாளையக் காரர் என்றும் பெயரிட்டழைத்தனர். இவ்வாறு வகுக்கப்பட்ட பாளையங்கள் எழுபத்திரண்டும் நாயக் கர் ஆட்சிக்கு உட்பட்டவையே என்பதையும் அறிவித் தனர். பாளையக்காரர் ஒவ்வொருவரும் தம் பகுதியில் அரசரைப்போன்றே மதிக்கத்தக்க சிறப்பினையும் அளித்தார். இந்தப் பாளைய வகுப்புத் திட்டம் யாவருக்கும் உரிமையும் பெருமையும் தரும் காரணத்

தால் அனைவரும் மகிழ்வோடு ஏற்றனர். தத்தம் பாளையம் வளர்ந்து ஓங்குவதற்குப் பாடுபட்டனர். உழைப்பில் இன்பமும் வாழ்க்கையில் அமைதியும் கொண்டனர். இப்படிப்பட்ட ஆட்சியுரிமை வழங்கிய அரசரையும் அமைச்சரையும் மக்கள் வாழ்த்தாது இருப்பரோ ?

நாயக்க அரசு பாண்டி நாட்டில் நிலைத்திருக்க விசுவநாதர் வேறொரு புதிய திட்டமும் வகுத்தார். தமது நாட்டைப் பல பிரிவுகளாகப் பிரித்தார். அந்தப் பகுதிகள் ஒவ்வொன்றையும் சீமை என்று குறித்தார். ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு தலைவரை ஏற்படுத்தினார். அவர்கள் தத்தம் பகுதியிலுள்ள பாளையப் பட்டுக்களை மேற்பார்த்து வரவேண்டும். அதற்கு உதவியாக ஒரு பெரும் படையினையும் கொடுத்திருந்தார். அதனால் பாளையக்காரர்கள் அரசர்க்கு மாறாக எவ்விதத் தீங்கும் செய்ய முன்வரமாட்டார்கள் என்பதை அறிந்தார். அரசியல் திட்டங்களும் இன்றைய நாகரிக உலகில் நடைபெறுவன போன்றே அமைந்திருந்தன. அரசர், அமைச்சர், படைத்தலைவர், பிரதானி, இராயசம், ஆணையாளர், ஊர்க்கணக்கர், மணியக்காரர், அம்பலகாரர் முதலிய அதிகாரிகள் நாட்டின் உறுப்பாக விளங்கியமை அறியக் கிடக்கின்றது. பல்வேறு சமயத்தவர்களையும் ஒரு தன்மையாக மதித்து உதவிய விசுவநாதரின் பொது நோக்கமும் நாயக்க அரசு தோன்றி வளர்ந்து நிலைத்ததற்குக் காரணமாகும். இன்றும் பொற்புற விளங்கும் புது மண்டபத்தில் விசுவநாதரின் உருவச்சிலை புன்முறுவலோடு காண்பாரை வரவேற்று நிற்பதைக்

காணலாம். மதுரை நாயக்க அரசின் முதல்வராகிய விசுவநாத நாயக்கரே அவர் வழி வந்தோர்க்கு வழி காட்டும் கலங்கரை விளக்காகிவிட்டார் என்பது பொய்யாகுமா?

**திருமலை நாயக்கர்**

நாயக்க அரசைத் தோற்றுவித்த விசுவநாத நாயக்கருக்குப் பின் வந்த அரசர்களுள் புகழ்மிக்கவர் திருமலை நாயக்கர் ஆவர். இன்றும் அவரது பெயர் இந்திய நாடு முழுவதும் பரவியுள்ளமை அறியலாம். இத்துணைப் பெரும் புகழ் அடைவதற்குக் காரணம் நாயக்கரிடம் குடிகொண்டிருந்த அஞ்சாமையும் கலையுணர்வும் ஆம். கலை வளர்த்தலைக் கடவுட்பணி என்று கருதினர் போலும்! இத்தகைய சிறப்பு வாய்ந்த திருமலை நாயக்கர் தம் தமையன் முத்துவீரப்ப நாயக்கருக்குப் பின் அரச பதவியை ஏற்றார். அப்பொழுது நாயக்கர் திருச்சிராப்பள்ளியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி புரிந்தார். தம் நாட்டிற்கும் சோழ நாட்டிற்கும் எல்லை வகுத்த பின்னும் திருச்சி தலைநகராகவே இருந்து வந்தது. ஆனல், திருமலை நாயக்கர் ஆட்சி ஏற்ற சில ஆண்டுகளில் மதுரையைத் தலைநகராக ஆக்கிக்கொண்டார். இவ்வாறு தலைநகரை மாற்றியதற்கு இருவகையான காரணங்கள் கூறப்படுகின்றன; நாயக்க மன்னருக்குக் காசநோய் மிகுந்து வருத்தியதாகவும், அப்பொழுது மதுரையில் கோவில் கொண்டுள்ள மீனட்சியம்மை கனவில் தோன்றி 'மதுரையைத் தலைநகராகக் கொண்டால் உம் நோய் தீர்ப்போம்' என்று கூறியதாகவும், அதனலே அரசன் தலைநகரை மாற்றியதாகவும் சொல்லப்படுவதாம்.

அடுத்ததாக, நாயக்க மன்னர் தம் நாட்டின் நடு விடத்தே தலைநகரை அமைக்க எண்ணியதும், அண்மையிலே உள்ள தஞ்சை, மைசூர் மன்னர்களும், முகமதிய அரசர்களும் எளிதாகப் படை கொண்டு தாக்கித் துன்புறுத்தாமலிருக்கவும், பழம் பெருமை வாய்ந்த பாண்டியர் மரபின் தலைநகரையே கொள்ளவேண்டும் என்று கருதியதும் ஆகும். இரண்டிலும் பிற்கூறப் படும் காரணமே பொருந்துவதாக உள்ளது. ஆகவே, திருமலை நாயக்கர் தம் தலைநகரை மதுரைக்கு மாற்றிக் கொண்டார். அவ்வாறு மாற்றியதும் அவருக்கு நன்மையாகவே முடிந்தது. அவர் வரலாற்றையே தலைநகர் மாற்றிவிட்டது என்னலாம். இல்லையெனில் மண்ணுலகிற் புகழ்மிக்க மன்னராக விளங்குதல் இயலுமோ ?

திருமலை நாயக்கர் திருச்சியை விட்டு மதுரையைத் தலைநகராக அமைத்து ஆட்சிபுரியத் தொடங்கினரல்லவா ? அக் காலத்தில் அரசியல், சமூகம், கலை முதலியவற்றில் அரசர் செய்த அருஞ் செயல்கள் பல. அவர் அஞ்சா நெஞ்சம் உடையவர்; பகைவர் தன்மையை அறிந்து நடக்கும் சூழ்ச்சியு மிக்கவர். அவர் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த போர்கள் பல. அவற்றிலெல்லாம் பகைவர் எதிர்ப்பை இடம் நோக்கி ஆராய்ந்து வெற்றி பெற்றதைச் சுருங்கக் காண்போம்.

முதன் முதலாக நாயக்கர் மைசூர் மன்னரோடு போர் செய்தார் என்பது அறியக்கிடக்கின்றது. விஜய நகரப் பேரரசுக்கு உட்பட்டவர்கள் நாயக்க மன்னர்கள். ஆனல், திருமலை நாயக்கர் ஆட்சி ஏற்ற காலத்

தில் விஜயநகர அரசர் வலிமை குன்றியிருந்தார். அதற்குக் காரணம் இடையருது ஏற்பட்ட முகம்மதிய அரசர்களின் தொல்லேயே ஆகும். ஆதலால், திரு மலேயரசர் விஜயநகர அரசருக்குத் தாம் அடிமை இல்லே எனக் கூறிவிட்டுத் தனியாட்சி செலுத்த முனேந்தார். விஜயநகர அரசர் இச் செய்தியை அறிந்தும் வலியின்மையால் வாளா இருந்துவிட்டார். ஆனுல், விஜயநகர ஆட்சிக்கு உட்பட்டிருந்த மைசூர் மன்னர் வெகுண்டு திருமலே நாயக்கர் மீது படை யெடுக்கத் திட்டமிட்டார். அதற்குக் காரணம் விஜய நகரத் தரசரிடம் கொண்ட அன்பும், நாயக்க அரசரிடத் தில் கொண்டிருந்த பழம் பகையும் ஆகும். அந்நாளில் மைசூர்ப் பகுதியை ஆட்சி புரிந்தவர் சம்பராஜ உடை யார். அவருடைய சிறந்த படைத் தலேவர் ஹரசுரநத்தி ராஜா என்பவர். அவர் தலேமையில் ஒரு பெரும் படையை அனுப்பித் திருமலே நாயக்கரோடு போர் புரியுமாறு கட்டளேயிட்டார். அரசர் ஆணேயை மேற் கொண்டு வந்த படை நாயக்கரின் நாட்டைச் சேர்ந்த சத்தியமங்கலத்தில் தங்கியது; அங்கிருந்து புறப் பட்டுச் சென்று திண்டுக்கல் கோட்டையைத் தாக்கி யது. மைசூர்ப் படை தம் நாடடைந்து தாக்குதலேத் தொடங்கியதை அறிந்தார் நாயக்கர். தம் சிறந்த படைத்தலேவராகிய இராமப்பையர் தலேமையில் பெரும்படை ஒன்றை எதிர்த்துப் போர் புரிய அனுப்பி ஞர். தளவாய் இராமப்பையர் பல வெற்றிகளேக் கண்டவர். ஆதலால், வீ ர மு ட ன் விரைந்து சென்ருர்; திண்டுக்கல்லில் மைசூர்ப் படையைச் சந்தித்துக் கடும்போர் புரிந்தார். மைசூர்ப் படை

சிதறி ஓடியது. தோற்ற வீரர்கள் தம் நாட்டை நோக்கி ஓடினர். அவர்களைப் பின் தொடர்ந்தது நாயக்கர் படை. மைசூர்த் தலைநகரையும் முற்றுகை யிட்டது. மைசூர் அரசரும் மக்களும் கண் துஞ்சாது கலங்கினர். மதுரைப் படை வெற்றிக்கொடி நாட்டி யது. வெற்றிக்குக் காரணமாக இருந்த தளவாய் இராமப்பையர் மைசூர் அரசரிடமிருந்து மிகுந்த பொருளைப் பெற்று நாயக்கருக்கு அளித்தார். தள வாயின் செயற்கருஞ் செயலைக் கண்ட நாயக்கர் வியந்து பாராட்டிப் பரிசும் வழங்கினர். இந்த முதல் வெற்றியே நாயக்கரின் வீரத்தையும், படைத் தலை வரைத் தெரிந்தனுப்பும் அறிவுத் திறமையையும் காட்டுகின்றதல்லவா ?

திருமலையரசர் ஆட்சியில் நடைபெற்ற உள் நாட்டுப் போரும் இவண் குறிப்பிடத் தக்கதாம். விசுவ நாத நாயக்கர் காலத்தில் பாளையங்கள் பிரிக்கப் பட்டது. அவ்வாறு பிரிக்கப்பட்டவற்றுள் இராம நாதபுரம் சீமையும் ஒன்று. அதனை நாயக்க அரசர் களின் ஆட்சிக்கு உட்பட்டு ஆண்டு வந்தவர்கள் சேதுபதிகளாவர். அவர்களுள் திருமலை நாயக்கர் காலத்திலே சேதுபதியாக இருந்தவர் சடையத் தேவர் என்பவர். அவருக்கு மகப்பேறு இல்லை. ஆதலால், தம் நாட்டிற்கு ஆளும் உரிமையுடைய ஒருவரைத் தத்துப் பிள்ளையாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். சேதுபதி தத்துப் பிள்ளையின் புதல்வனுக்குத் தாமுள்ளபோதே முடிசூட்டி மகிழ்ந்தார். அப் பொழுது அவரை ஒருவரும் எதிர்க்கவில்லை. ஆனல்,

அவர் இறந்த பிறகு தம்பி என்ற பெயருடைய ஒரு வர் தாமே சேதுபதியாக இருக்க உரிமையுடையவன் என்று நாயக்கரிடம் சென்று முறையிட்டார். அரச ரும் ஆராயாது உண்மை என நம்பிவிட்டார். தம்பி என்பவருக்கு உதவிபுரிய ஒரு பெரும்படையினை அனுப்பினார். படை வருவதைக் கேள்வியுற்ற சேது நாட்டுப் படையும் முன்னதாக வந்து எதிர்த்தது. இருசார் வீரர்களுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. மறவர் சேனையின்முன் நிற்கமாட்டாத நாயக்கர் சேனை பின்வாங்கியது. சேதுபதியின் தளவாயோ அஞ்சா நெஞ்சமுடையவர். உண்மைக்குப் போராடு கின்றோம் என்ற உணர்ச்சியுடையவர்கள் மறவர்கள். இவ்விரண்டும் ஒருங்கு சேர்ந்ததால் தம்பி தோல்வி யடைந்து மீண்டார். இச் செய்தி நாயக்கருக்கு எட்டியது. அளவிலாச் சீற்றங் கொண்டார். இப் போரை வெற்றிபெற முடிப்பதற்குத் தக்கவர் தள வாய் இராமப்பையரே என்பதை அறிந்தார். ஒரு பெரும் படை இராமப்பையர் தலைமையில் சேது நாட்டை நோக்கி விரைந்து சென்றது. படை வரு வதைக் கேள்வியுற்ற சேதுபதி அஞ்சினார்; இராமேசு வரம் சென்று ஒளிந்துகொண்டார். அதே சமயத்தில் இராமப்பையர் கூற்றுவனால் கவரப்பட்டார். எதிர் பாராத இறப்புச் செய்தியைக் கேள்வியுற்ற நாயக்கர் மிக்க வருத்தமுற்றார். எனினும், உள்ளம் தளர வில்லை. உடனே வேறொரு தளவாய் ஒருவரைச் செல்லுமாறு பணித்தார். அவர் சென்று ஒளிந் திருந்த சேதுபதியைச் சிறைப்படுத்தினார். மதுரைக் குக் கொண்டு வந்து மன்னர் முன் நிறுத்தினார். தம்பி

என்பவர் சேதுபதியாக்கப்பட்டார். உண்மையாக இருக்கவேண்டிய சேதுபதி, நாயக்கரால் சிறையி லடைக்கப் பட்டதால், மக்கள் கொதித்தெழுந்து குழப் பம் விளைவித்தனர். கொலைச் செயல்களும் களவுத் தொழில்களும் நிகழ்ந்து கொண்டே இருந்தன. இராமேசுவரம் செல்லும் மக்களுக்கும் மிகுந்த இன்னல் உண்டாயிற்று. துன்பம் பொறுக்கமுடியாத மக்கள் நாயக்கரிடம் முறையிட்டனர். இவற்றிற்குக் காரணம் யாதாயிருக்கலாம் என ஆராய்ந்தார். சேது பதியைச் சிறைப் படுத்தியதும் ஆட்சியுரிமையைப் பறித்ததுமே எனக் கண்டார். ஆட்சி பீடத்திலிருந் தும் தம்பியை நீக்கிவிட்டு உரிமைச் சேதுபதியை மீண்டும் அரசனாக்கினார். அதன் பிறகுதான் நாட் டில் அமைதியும் இன்பமும் நிலவத் தொடங்கின. நாயக்கர் உண்மையைக் கண்டவிடத்துத் தாம் செய்ததைத் தவறு என அறிந்து திருத்திக் கொள்ளும் பண்புடையவர் என்பது புலனாகின்றதல்லவா?

திருமலை நாயக்கர் அடுத்தாற் போன்று செய்த போர் மிகவும் சிறந்ததாம். விஜயநகரப் பேரரசருக்கு உட்படாது வாழ்ந்த நாயக்கர் திருமலை ஒருவரே என்பதை முன்னர் அறிந்தோமல்லவா? விஜயநகர அரசர் அதன் காரணமாக மிகுந்த சினமுடையவராக இருந்தார். வலிமை குன்றியிருந்ததால் சிறிது காலம் வரை நாயக்கரை அடக்க முயலவில்லை. தமக்குப் படை வலிமை யுண்டாகியதும் திருமலை நாயக்கரை யும் ஏனைய தென்னாட்டுச் சிற்றரசர்களையும் ஒடுக்கக் கருதினார். முதன் முதலாக செஞ்சிக் கோட்டையைத்

தாக்குவதற்குப் பெரும் படையுடன் வந்தார். இதனை யறிந்த திருமலை நாயக்கர் செஞ்சி, தஞ்சை நாடுகளை ஆண்டுவந்த இரு அரசர்களோடும் ஒப்பந்தம் செய்து கொண்டார். மூவரும் சேர்ந்து தென்னாடு நோக்கி வரும் விஜயநகரப் படையை எதிர்ப்பதற்காக ஒரு பெரும் படையினை அனுப்பினர். இரு பெரும் வீரர் களும் உணர்ச்சியோடு போரிட்டனர். விஜயநகரப் பேரரசே வெற்றி முரசை முழக்கினார்! அதற்குக் காரணம் விஜயநகர அரசரின் சூழ்ச்சித் திறமே. அவர் மதுரையிலிருந்து புறப்பட்டு வந்த நாயக்கர் படையைச் செஞ்சி மன்னர் சேனையோடு ஒன்று சேராமல் தடுத்து நிறுத்திவிட்டார். இப் போரில் நாயக்கர் பெரிதும் ஏமாற்றமடைந்தார் என்றே சொல்லவேண்டும். இந்த அவமானம் தாங்காத நாயக்கர் முகமதிய அரசன் கோல்கொண்டா சுல்தா னிடம் ஓடினார்; உதவியளிக்குமாறு வேண்டினார். விஜயநகர அரசை ஒழிப்பதற்குச் சமயம் வாராதா என்று காத்துக்கொண்டிருந்த சுல்தான் இவ் வரிய வாய்ப்பை விட்டு விடுவாரோ? உடனே இணங்கி விஜயநகர் மீது படை யெடுத்துச் சென்றார். தென் னாட்டிற்குப் படையுடன் வந்திருந்த விஜயநகர அரசர் சுல்தான் படையெடுப்பைக் கேள்வியுற்றார். தம் நாட்டைக் காக்க வேண்டுமென்ற அவா உண்டா யிற்று. தம் நாடு திரும்பினார். சுல்தான் படையை எதிர்த்துப் போரிட்டார். சில காலம் வரை இடை விடாது போர் நிகழ்த்தினர். ஆனால், ஒருவருக்கும் வெற்றி உண்டாகவில்லை. அதனால் முகம்மதிய அரசன் செஞ்சிக் கோட்டையைத் தாக்க எண்ணினான். விஜய

நகரத் தாக்குதலை நிறுத்திவிட்டுப் படையுடன் சென்றான். வெற்றியும் எளிதிலே கிடைத்தது. அதன் பிறகு மதுரையையும் தாக்கும் பொருட்டுப் படையுடன் சென்றான். தமக்கு நண்பனாக இருந்த சுல்தானின் எதிர்பாராத வஞ்சகச் செயலைக் கண்டு வருந்தினார் நாயக்கர். தம்மால் அவனை எதிர்த்து வெற்றி பெற முடியாது என்பதை அறிந்தார். அப்பொழுது சுல்தானுக்குப் பகைவனான பீஜப்பூர் சுல்தானிடம்சென்று உதவுமாறு வேண்டினார். அதற்கு இசைந்து பெரும் படையுடன் வந்த பீஜப்பூர் சுல்தான் கோல்கொண்டா சுல்தானோடு சேர்ந்து கொண்டான். இரு பெருஞ் சேனைகளும் மதுரையைத் தாக்க முனைந்தன. மண் குதிரையை நம்பி ஆற்றிலிறங்கிய கதைபோலாயிற்று நாயக்கர் நிலை! இந்த அவல நிலையை அறிந்தார் விஜய நகர வேந்தர். முகம்மதிய அரசர்கள் தென்னாட்டைக் கைப்பற்றினால் இந்துக்களுக்கு வரும் கொடுமையை இவ்வளவு என்று எடுத்துரைக்க முடியாது. மாலிக்காபூர் வழியைத்தான் அவர்களும் பின்பற்றுவர் என எண்ணினார் போலும்! பெரும் படையுடன் மதுரை வந்தார் விஜயநகர அரசர். நாயக்கர் சேனைகளோடு ஒன்று சேர்ந்து பகைவர்களின் படைகளைத் தாக்கினார். எனினும், திருமலை நாயக்கருக்கு வெற்றி கிட்டவில்லை. முகம்மதிய மன்னர்களுக்குப் பணிந்து சமாதானம் செய்ய வேண்டியதாயிற்று! அதற்குக் காரணம் நாயக்கர் படைகளுக்குள் ஏற்பட்ட குழப்பமேயாகும். பீஜப்பூர் சுல்தானுக்கு ஆண்டுதோறும் கப்பங் கட்டி வர இசைந்தார். இவ்வாறு திருமலையரசர் நடவாமலிருந்தால் மதுரை

அரசை இழந்தே யிருப்பார். முகம்மதிய அரசர்களுக்குப் பணிந்த நாயக்கர் செயலைக்கண்டு விஜயநகர அரசர் வருந்தினர். மறுபடியும் முகம்மதிய அரசர்களை எதிர்த்து ஒழிக்கும் எண்ணங்கொண்டார். நாயக்கருக்கு உதவி புரியுமாறு மைசூர்ப் படையுடன் தம் படையினையும் சேர்த்துக்கொண்டு வந்தார் விஜயநகர அரசர். நாயக்கர் மைசூர் அரசனை அடக்குவதற்குக் கோல்கொண்டா சுல்தானின் உதவியை நாடினர். அதற்கு இசைந்த சுல்தான் மைசூர் மீது படையெடுத்துச் சென்று கொள்ளையிட்டான். அங்கிருந்து பெரும்படையுடன் மதுரையைத் தாக்க விரைந்து வந்துகொண் டிருந்தான். நாயக்கர் முகம்மதிய மன்னனின் வஞ்சகச் செயல் கண்டு திகைத்து அவனுக்கு மிகுந்த செல்வத்தைக் கொடுத்துத் தம் நாட்டைப் பாதுகாத்தார். இவ்வாறு நாயக்கர் சூழ்நிலைக்குத் தக்கவாறு நடந்து தம் நாடு பகைவர்பால் செல்லாமல் பாதுகாக்க வேண்டியதாயிற்று. இந்தச் சூழ்நிலையில் திருமலை நாயக்கர் தவிர வேறு அரசர் இருந்திருப்பரேல் நாட்டை இழந்தே யிருப்பர்!

மைசூர் நாட்டை முகம்மதிய அரசன் தாக்கிக் கொள்ளையிட்டது நாயக்கரது தூண்டுதலாலே என்பதை மனதிலே வைத்திருந்தார் மைசூர் மன்னர், நாயக்கரை வஞ்சந் தீர்க்க முடிவு செய்தார். பெரும் படையுடன் மதுரையைத் தாக்கும் பொருட்டு மைசூர் அரசர் வந்துகொண் டிருந்தார். அதனைக் கேள்வியுற்ற நாயக்கர் தமக்கு உதவுமாறு சேதுபதியை வேண்டினர். போர் என்றல் விரும்பும் மறவர் சேனை

புன்னகையுடன் ஏற்றுப் புறப்பட்டு மதுரை வந்தது. நாயக்கர் சேனையும் மறவர் சேனையும் ஒன்று சேர்ந்து மைசூர்ப் படை வீரர்களை எதிர்த்துத் தாக்கியது. மைசூர்ப் படை எதிர்த்து நிற்க வியலாது புறங்காட்டி ஓடியது. அதனைப் பின் தொடர்ந்த மதுரைப் பெரும் படை தாராபுரம் வரை சென்று விரட்டியடித்தது. இந்த வெற்றி நாயக்கருக்கு வரவிருந்த அழிவை விரட்டியதாகும். நாயக்கர் தமக்குச் செய்த துன் பத்தையும் பொருட்படுத்தாது சேதுபதி உற்றவிடத்து உதவியதை மறப்பரோ? தம் வெற்றிக்குச் சேது பதியே தலையாய காரணம் என்பதை உணர்ந்த நாயக்கர் 'திருமலை சேதுபதி' என்ற பட்டமளித்துச் சிறப்பித்தார். அன்றியும், சில ஊர்களை அவர் நாட்டோடு சேர்த்துக் கொள்ளுமாறு மனமுவந்து வழங்கினர். தாம் ஏறிச் செல்லும் அருமையான தந்தப் பல்லக்கையும் பரிசாகத் தந்தாரெனில் நாயக்க ரின் நன்றி மறவாப் பண்பை என்னென்று நவில்வது? நாயக்கர் ஆட்சிக்கு உட்பட்டவர் சேதுபதி. எனினும், அதனையும் கருதாமல் மதித்து நடந்த மதுரை யரசரின் பெருந்தன்மை கண்டு புகழாதாரிலர்.

முன்பு மதுரை மீது படையெடுத்து வந்த மைசூர் அரசன் வரும் வழிகளில் ஊர்களைக் கொள்ளையிட்டும், நாயக்கப் படைவீரர்கள் சிலரை மூக்கை அரிந்தும் தகாத முறையில் நடந்துகொண்டான். அந்த அவமானத்தைப் போக்கக் கருதிய நாயக்க அரசர், தம் தம்பி குமாரமுத்து வீரப்ப நாயக்கர் தலைமையில் ஒரு பெரும் படையினை மைசூரைத் தாக்க அனுப்

பினர். அங்குச் சென்று பகைவர்களை வென்று அரச னுடைய மூக்கை அரிந்துகொண்டு நாயக்கரிடம் காட்ட வந்துகொண் டிருந்தனர். அவர்கள் திரும்ப வந்து தம் நாட்டை அடைவதற்கு முன் திருமலை நாயக்கர் உயிர் நீத்தார். பழிக்குப் பழி வாங்கும் செயல் போர்களிலே பழகிப்போன பழக்கம் என்பது நாம் அறிந்ததே யன்றோ ?

இதுகாறும் திருமலை நாயக்கரின் போர்ச் செயல் களைச் சுருங்கக் கண்டோம். அவருடைய போர்ச் செயல்களைவிட அவரை இறந்தும் இறவாதவராக் கியது அவரது கலைத் தொண்டேயாகும். அவர் தம் ஆட்சிக் காலத்தில் செய்த தொண்டுகள் பல. அவற் றுள் மிகச் சிறந்தது கண்கவர் வனப்புடைய அரண் மனையாகும். மதுரையின் நடுவண் அமைந்துள்ள அழகு மிக்க கோவிலும், புது மண்டபமும், தெப்பக் குளமும் சிறந்த கலைப் பண்புடையனவேயாம். இன் றும் அவருடைய உருவச் சிலைகள் மீனுட்சியம்மை கோவிலின் உட்புறத்திலும், புதுமண்டபத் தூணிலும் விளங்குவதைக் காணலாம். அன்றியும் திருப்பரங் குன்றம், அழகர் கோவில், ஸ்ரீவில்லிபுத்தூர் முதலிய இடங்களிலும் அவருடைய உருவம் கற்சிலையாக அமைக்கப்பட்டுள்ளமை காணலாம். நாயக்கருடைய கலையுணர்ச்சி மிகுந்து விளங்குவது மதுரையில் கட் டப்பட்டு விளங்குகின்ற திருமலை நாயக்கர் மஹாலில் என்பது கண்கூடு. மதுரையைக் காணவரும் வெளி நாட்டு யாத்திரிகர்கள் அரண்மனையின் உள்ளே சென்று தூண்களையும், சுவர்களையும், மாடவளைவு

களையும், வேலைப்பாடுகளையும் கண்டு வியந்துள்ளனர். மதுரையிலுள்ள 'மஹாலை'ப் பார்க்காதவர் பிறந்தும் பிறவாதவரே என்று சொல்லத் தொடங்கினர். 'இத்தாலி நாட்டின் அழகுமிக்க நேப்பில்ஸ் நகரத்தைப் பார்த்துவிட்டு இறக்கவேண்டும்' என்பது ஐரோப்பியர் கூற்று. அது போன்றே ஆசியாவில் பிறந்த அனைவரும் சாவதற்கு முன் கண்டு இன்புற வேண்டிய அழகுக்கலை திருமலை நாயக்கர் மஹால் என்று சொன்னால் மிகையாகாது. வடநாட்டிலே தாஜ்மஹாலும், தென்னாட்டிலே திருமலை நாயக்கர் மஹாலும் இந்திய நாட்டின் கலைக்கு எல்லைகளாகும் என்பர் ஆன்றோர்.

நாயக்கரால் இருபது லட்சம் பொருட் செலவில் இருபத்திரண்டாண்டுகள் தொடர்ந்து கட்டப்பட்டதே புது மண்டபமாகும். அம் மண்டபத்தின் இரு பக்கத் தூண்களிலும் விசுவநாத நாயக்கர் முதலாக வந்த நாயக்க மன்னர்களின் உருவச் சிலைகள் அமைக்கப் பட்டுள்ளன. கலை யழகு மிகுந்து விளங்கும் சிற்பங் களையும் மண்டபத்தின் முன் பக்கத்திலே செதுக்கி யுள்ளமை காணலாம். இம் மண்டபமும் மதுரையைக் காணவருவார் கண்டு மகிழ்வதற்கு உரியது.

பிறிதொரு சிறந்த காட்சிப் பொருளாகக் கருதத் தக்கது நாயக்கர் அகழ்ந்த குளமாகும். இதனை மாரி யம்மன் தெப்பக்குளம் என்றும், வண்டியூர்த் தெப்பக் குளம் என்றும் கூறுவர். மஹாலைக் கட்டுவதற்கு மிகுந்த செங்கல் வேண்டியிருந்தது. செங்கற்களுக் காகத் தோண்டப்பட்ட பள்ளமே தெப்பக்குளமாக

மாற்றப்பட்டது. குளத்தைச் சுற்றிலும் கருங்கற்களைக்கொண்டு சுவர் எழுப்பினர். நடைபாதைகள், படித்துறைகள், நடுமேடை, கோபுரங்கள், சோலைகள் முதலியவற்றை அமைத்தார். அழகு தவழும் இடமாயிற்று. ஆண்டு தோறும் விழா நடத்தினால் மக்கள் இந்தக் குளத்தினால் பயன் அடைவார்கள் என எண்ணினர். இன்றும் தைப்பூச நாளில் திருமலை நாயக்கரின் பிறப்பு நாள் நினைவாக விழா நடைபெற்று வருகின்றது. இவ்வாறே மீனாட்சியம்மைக்கு மாதந்தோறும் விழா நடைபெற ஏற்பாடு செய்தார். அழகர் விழாவும் ஆண்டு தோறும் சிறப்புற நடந்து வருவதற்கும் நாயக்கரே காரணமாவார். இன்றும் சித்திரை மாதந்தோறும் எண்ணற்ற மக்கள் விழாவினைப் பார்த்துப் பரவசமடைவது அறிந்ததே. இவற்றால் திருமலை நாயக்கர் தெய்வபக்தி விளங்குகின்றது. அன்றியும் சைவ வைணவ மக்களனைவரையும் மகிழ்வித்து இறை வழிபாட்டில் ஈடுபடச் செய்தமையும் அறியக் கிடக்கின்றது. திருமலை மன்னர் இக் கலைத் தொண்டால் அழியாப் புகழை நிலை நிறுத்து விட்டார் எனலாம். அதற்கு அவரிருந்து அரசோச்சிய மதுரை மாநகரும் ஒரு காரணமாகும். வணிகத்திலே மிகச் சிறப்புப் பெற்றது; வரலாற்றால் பெருமை மிக்கது; இலக்கியங்களாலும் புராணங்களாலும் புகழ்ந்து பாராட்டப்பட்டது; தென்னாட்டின் நடு நாயகமாக அமைந்தது. இவ்வளவு சீரும் சிறப்பும் வாய்ந்த மதுரை மாநகரைத் தலைமையாகக் கொண்டு ஆட்சி செய்ததும் நாயக்கர் அழியாப் புகழ் பெறுவதற்குக் காரணமன்றோ ?

எனவே, விசுவநாத நாயக்கரால் தோற்றுவிக்கப் பட்டு வளர்ந்து வந்த நாயக்க அரசு, திருமலை நாயக்கர் காலத்தில் வேரூன்றி அழியாத பெருமை யைப் பெற்றது. அவ்வாறு பெருமை பெற்ற நாயக்க அரசு தன் பெருமையிற் குறையாது தலை சிறந்து நின்றது நாயக்க மாதேவி மங்கம்மாள் ஆட்சியிலே தான். அவ்வம்மையின் வாழ்க்கையையும், எவ்வாறு ஆட்சி புரிந்து சிறப்புற்ருர் என்பதையும் ஆராய் வோம்.

# 4. மங்கம்மாள் பிறப்பும் மணவினைச் சிறப்பும்

விஜயநகர அரசர்களுள் இணையற்றவராக விளங்கியவர் கிருஷ்ணதேவராயர் என்பதை முன்பு அறிந்தோமல்லவா? அவர் காலத்திற்குப் பின் பட்டமேற்ற அரசர்கள் திறமையில்லாதவர்களாக இருந்தார்கள். அதனால் முகம்மதிய மன்னர்கள் மீண்டும் தலை தூக்கினார்கள். கிருஷ்ணதேவராயரால் கைப்பற்றப் பட்ட தம் நாடுகளைத் திரும்பப் பிடித்துக் கொண்டனர். விஜயநகர அரசையும் அழித்துவிடத் திட்டம் வகுத்தனர். விஜயநகர அரசர்க்குக் கீழ்ப்படிந்திருந்த சிற்றரசர்களும் தனியாட்சி செலுத்த முற்பட்டனர். அப்பொழுது விஜய நகர அரசராக விளங்கியவர் சதாசிவராயர் என்பவர். அவருக்குத் தளவாயாக இருந்தவர் இராமராயர். இவர் மிக்க வீரமும், முகம்மதிய அரசர்களை முறியடிக்க வேண்டுமென்ற ஆர்வமும் கொண்டவர். அரசரைப் பெயரளவில் வைத்து விட்டுத் தாமே அரச காரியங்களை நடத்த முனைந்தார். இந்தச் சமயத்தேதான் தங்களுக்குள் வேறுபட்டுக் கிடந்த முகம்மதிய அரசர்கள் அனைவரும் ஒன்றுபட்டனர். விஜய நகர ஆட்சியை எவ்வாறு தொலைப்பது என ஆராய்ந்தனர். அவ் வாராய்ச்சியின் பயனாய் ஒரு பெரும் படை உருவாகியது. அப்படை விஜய நகர எல்லையை விரைந்துவந்து தாக்க முற்பட்டது. அதனை யறிந்த தளவாய் இராமராயரும் பெருஞ்சேனையுடன் சென்று எதிர்த்துப் போரிட்டார்.

முதலில் விஜய நகர அரசருக்கு வெற்றி கிட்டும் போல் தோன்றியது. இராமராயரும் தம் முதுமைப் பருவத்தையும் பொருட்படுத்தாமல் முன்னணியில் நின்று வீரப்போர் புரிந்தார். ஆனால், முகம்மதிய வீரர்கள் அவரையே குறி வைத்துக்கொண் டிருந்தனர். குறி தப்பவில்லை. இராமராயரும் மார்பிலே விழுப் புண் பட்டு வீரவாழ்வு எய்தினர்! இராயர் மாய்ந்தமை கண்ட முகம்மதிய வீரர்கள் மகிழ்ச்சியுள் மூழ்கினர்; மற்றும் பல வீரர்களை மண்ணிலே சாய்த்தனர். மேன்மேலும் அழிவுண்டாவதைக் கண்ட விஜயநகர வீரர்கள் கலங்கினர். எதிர்த்து நிற்க மாட்டாது ஓடியவர் சிலர். போர்க்களத்திலே நின்று புறமுதுகு காட்டாது வீர சுவர்க்கம் அடைந்தவர் பலர். விண் முட்டும் புகழ்கொண்ட விஜய நகர அரசு அழிந்ததே எனக் கண்ணீர் சிந்தியவர் சிலர். வருத்த மிகுதியால் வாழ்வையே துறந்தவர் சிலர். இவ்வாறு விஜயநகர வீரர்கள் அழிந்ததும் பகையரசர்கள் விஜயநகர அரசைக் கைப்பற்றி வெற்றிக்கொடி நாட்டினர். இந்தப் போர்தான் 1565-ஆம் ஆண்டில் தலைக் கோட்டையில் நடைபெற்றது; வரலாற்றிலே சிறந்ததாகக் கருதப்படுவது; விஜயநகரப் பேரரசிற்கே முடிவு கட்டியது என்னலாம். இப்போர் முடிந்த பிறகு விஜய நகரத்திலிருந்து வெளியேறிய அரச மரபினரில் கடைசியாக இருந்தவர் ஸ்ரீரங்கராயர் என்பவர். இவர் சித்தூர்ப் பகுதியிலுள்ள சந்திரகிரியைத் தலைநகராகக் கொண்டு அரசு செய்தவர். இதே சந்திரகிரி நகரில் விஜயநகர மரபிலே வந்த இலிங்கம நாயக்கர் என்பவர் சிறப்புற வாழ்ந்து வந்தவர். விஜயநகர மன்னர்

களிடம் படைத் தலைவராகவும் அமைச்சராகவும் அமர்ந்திருந்தவர். பல போர்களில் வீரமுடன் போரிட்டுப் புகழ் பெற்றவர். அதனால் இவருக்குத் தளவாய் இலிங்கம நாயக்கர் என்ற பெயர் வழங்கி வந்தது. இவருக்குப் பிறந்த அருமைத் திருமகளே நம் மங்கம்மாளம்மையாவார். வீரர் வீட்டிலே பிறந்த மகள் வீரராணியாக விளங்குவார் என்பதை அப் பொழுது யாரே அறிந்திருப்பார்?

இலிங்கம நாயக்கர் இறைவன்பால் மிகுந்த பக்தியுடையவர். நீண்டகாலமாகப் பிள்ளைப்பேறில் லாமல் வருந்தினார். இறைவனை நோக்கித் தவமியற் றியதால் ஒரு குழந்தை பிறந்தது. பிறந்த பொழுதே சிறந்த அழகும் உயர்ந்த இலக்கணங்களும் காணப் பட்டன. சிவந்த மேனியும் உருண்ட முகமும் திரண்ட உறுப்புக்களும் சுருண்ட முடியும் குழந்தை யைத் தெய்வ அருளால் தோன்றியது என்று எடுத்துக் காட்டின. தந்தை இலிங்கமர் அளவிலா மகிழ்ச்சி கொண்டு கண்போல் பேணி வளர்த்து வருவாராயினர். தாயும் தாலாட்டிச் சீராட்டிப் போற்றிப் பாதுகாத்து வளர்த்தனள். இறையரு ளால் பிறந்த குழந்தை ஒளி பெற்று மங்காது திகழ்ந் தது. அதனால் அக் குழந்தைக்கு மங்கம்மாள் எனப் பெயர் சூட்டினர். குழந்தை செல்வமாக வளர்க்கப் பெற்றுத் தக்க பருவமடைந்தது. மணப் பருவம் எய்திய மங்கம்மாள் அழகே உருவாக அமைந்து விளங்கியமை கண்ட தந்தையார் மணவினை பற்றிச் சிந்திக்கலானார். தளவாய் இலிங்கமர் தம்மகளைத் தக்க

வீரனொருவனுக்கே மணமுடிக்கக் கருதினார். எண்ணியபடி எல்லாம் நடைபெற்றுவிடாது. எனினும், எண்ணியார் திண்ணியராக இருப்பாராயின் எண்ணியதை அடையாது போவரோ? மங்கம்மாள் வீரமே உருக்கொண்ட நாயக்க அரசர் சொக்கநாதரை மணம் செய்து கொண்டார் என்பதை அறிகின்றோம். அவ்விருவருக்கும் எவ்வாறு மணமுடிந்தது என்றவிந்தைச் செயலை இனிக் காண்போம்.

## சொக்கநாத நாயக்கர்

நாயக்க மன்னர்களுள் திருமலை நாயக்கர் மிகச் சிறந்தவராகத் திகழ்ந்தாரல்லவா? அவர்தம் பேரன் தான் சொக்கநாத நாயக்கர் என்பவர். சொக்கநாதர் தம் தந்தை முத்துவீரப்ப நாயக்கரைப்போலவே மனவுறுதியும் வீரச் செயலும் உடையவர். ஒரு முறை முகம்மதியப் பெரும்படை தென்னாடு முழுவதையும் கைக்கொள்ளும் எண்ணத்துடன் வந்தது. அப்பொழுது நாயக்கப் பெரும்படையினைத் திறம்பெற அணிவகுத்திருந்தார் முத்துவீரப்ப நாயக்கர். அதனைக் கண்ட முகம்மதியப் படைத் தலைவன் இதல்கான் அஞ்சிப் பின்வாங்கினான். முத்துவீரப்பர் முகம்மதிய அரசர்களால் ஏற்படும் தொல்லையை அறவே ஒழிக்க எண்ணினார். அவர் எண்ணிய உணர்ச்சி வெற்றிபெறு முன்னரே உயிர் நீத்தார். தந்தையின் உள்ளத்தெழுந்த உணர்ச்சியை அறிந்தவர் சொக்கநாதர். அந்த உணர்ச்சியைத் தாமும் கொண்டிருப்பாரன்றோ?

சொக்கநாத நாயக்கர் 1660-ஆம் ஆண்டில் அரியணை ஏறினார். அப்பொழுது அவருக்கு நல்ல இளமைப் பருவம். தக்க பருவம் என்பது பதினாறும் ஆண்டு என்று சொல்லுவார்கள். அந்தப் பதினாறுவது வயதிலேயே சொக்கநாதர் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார். அரசியலை நன்கு அறியாத இளமைப் பருவம். ஆதலால், அவரைப் பெயரளவில் அரசராக இருக்கச் செய்து, அரசாங்க அதிகாரிகளாகிய பிர தானி, இராயசம், தளவாய் முதலியவர்களே நாட்டின் அலுவல்களை நடத்தி வந்தார்கள். இம் மூவரும் சேர்ந்து ஒரு திட்டம் வகுத்தார்கள். அதன்படி தளவாயாக இருந்த இலிங்கம நாயக்கர் தலைமையில் செஞ்சி வேந்தன் சகோஜியை விரட்டுவதற்குப் படை சேர்த்தனர். இங்கே குறிப்பிடும் இலிங்கம நாயக்கர் வேறு. மங்கம்மாளின் தந்தை என்று முன்னர்க் குறிப் பிட்ட இலிங்கம நாயக்கர் வேறு. முகம்மதியர்கள் தென்னாட்டைத் தம் ஆட்சியின் கீழ்க் கொண்டுவர முயன்று வருவதைத் தளவாய் இலிங்கமர் நன்கு உணர்ந்திருந்தார். ஆதலால் செஞ்சி வேந்தன் கண்டு அஞ்சுமாறு 40,000 நாயக்க வீரர்களுடன் படையெடுத்துச் சென்றார். செஞ்சியரசனும் நாயக் கர் படை வருவதைக் கேள்வியுற்றான். எதிர்த்துப் போராடத் தானும் ஒரு படையை விடுத்தான். நாயக்கர் படையின் வலிமையை அளந்தறிந்த செஞ்சிப் படைத் தலைவன் இலிங்கமருக்குக் கையூட்டு வழங்கி அவரைத் தம் வயப்படுத்தி விட்டான். இந்த வஞ்சகச் செயல் சொக்கநாத நாயக்கருக்கு எட்டியது. இராயசமும், பிரதானியும் சதிக்கு உடந்தையாக

இருந்தமையை ஒற்றர் வாயிலாக அறிந்து சிறைப் படுத்தினர். தளவாய் பகைவருடன் சேர்ந்து கொண் டதைப் பற்றி மிகுந்த சீற்றங் கொண்டார் சொக்க நாதர். எனினும், கோபத்தை வெளியே காட்டிக் கொள்ளவில்லை. கோபம் காரியத்தைக் குலைத்துவிடு மன்றோ? ஆகவே, மறுபடியும் ஒரு பெரும்படை திரட்டினர். அதனை யறிந்த தளவாய் இலிங்கமர் சகோஜியுடன் ஆராய்ந்து திருச்சியை முற்றுகை யிடு வதற்குப் பெரும் படையுடன் விரைந்து வந்தார். சொக்கநாதர் தம் அரசியல் அதிகாரிகளை நம்பியே ஆகவேண்டிய சூழ்நிலை இருந்தது. முன்னரே தொகுத்து வைத்திருந்த படை வீரர்கள் 50,000 பேரையும் பகைவர்களைத் தாக்கி நகரைக் காக்குமாறு அனுப்பினர். இந்தத் தடவையும் நம்பிய அதிகாரி கள் துரோகம் செய்துவிட்டனர். வீரமிக்கு விளங்கிய நாயக்க படைவீரர்கள் பலர் இறந்து பட்டனர். சிலர் பகைவரால் சிறைப்படுத்தப்பட்டனர். சொக்க நாதரையே சிறைப்படுத்துவதற்குத் தளவாய் இலிங் கமர் துணிந்துவிட்டார். இந்தக் கொடுஞ்செயல்களை யெல்லாம் அறிந்தார் நாயக்கர். அவரது இளமை உள்ளத்தில் உணர்ச்சி பொங்கி எழுந்தது. இனியும் துரோகிகளை இந்த நாட்டில் வாழவிடக் கூடாது; மேலும் உயிர்வாழ விட்டால் நாடு நாசமுறும் என் பதைக் கண்டார்; தாம் செய்த அறியாமைச் செயல் களுக்கும் வருந்தினர்; ஒரு முடிவு காண வேண்டு மென்று முனைந்தார்; தாமே படைத் தலைமை தாங்கிப் போர்க்களம் புகுந்தார். மன்னனின் மதிமிக்க செயலை யும் மனவுறுதியையும் கண்ட வீரர்கள் உள்ளம்

கிளர்ந்தனர்; உணர்ச்சி யுருவாயினர்; மாற்றாரின் படைக்குக் கூற்றுவோம் என்று மார்தட்டி ஆர்ப்பரித்தனர். எஃகுடல் படைத்த 70,000 படை வீரர்கள் புறப்பட்டனர். அவர்களின் ஆரவாரம் கடல் கொந்தளித்து வருவது போன்றிருந்தது. தளவாய் இலிங்கமரும் செஞ்சி யரசன் சகோஜியும் முழக்கத்தைக் கேட்டதும் மனமுடைந்தனர்; எதிர்த்துப் போரிட முடியாது எனக் கருதி அஞ்சியவர்களாய்த் தஞ்சை நோக்கி ஓடினர். அவர்கள் தஞ்சை சென்றதை அறிந்த சொக்கநாதர் படையினைச் செலுத்திக் கொண்டு தஞ்சைக்குச் சென்றார். செஞ்சியரசரும் இலிங்கமரும் தஞ்சையினின்றும் தம் நாட்டிற்கே திரும்ப ஓடிவிட்டனர். தஞ்சையரசரோ நாயக்கர் படை நாட்டில் நுழைந்தமை கண்டு இருதலைக் கொள்ளி எறும்புபோல் தவித்தார்; வேறொன்றும் செய்யவியலாமல் சொக்கநாதரிடம் தஞ்சம் புகுந்தார். சொக்கநாதருக்கும் விஜயராகவ நாயக்கருக்கும் போர் ஏற்படாது போயிற்று. தஞ்சை மன்னர் விஜயராகவ நாயக்கர் சொக்கநாதருடன் சமாதானம் செய்து கொண்டார். நாயக்கர் வெற்றி மகிழ்ச்சியுடன் தம் நாடு திரும்பினார். சொக்கநாத நாயக்கர் பதவிக்கு வந்ததும் நடைபெற்ற கன்னிப்போர் இதுவே!

போர்ப் புயலிலே தொடங்கிய சொக்கநாத நாயக்கர் ஆட்சியில் அமைதிக்கு வழியில்லாமலிருந்தது வியப்பிற்குரியதன்று. முகம்மதிய அரசரை முதலிலே துரத்தி வெற்றிபெற்ற போதிலும், அவர்கள் நாயக்க அரசின் மீது போர் தொடுக்கும் காலத்தையே எதிர்

பார்த்துக்கொண் டிருந்தனர். 1663-ஆம் ஆண்டிலே பீஜப்பூர் சுல்தான், தம் புகழ் பெற்ற படைத்தலைவன் வனமியான் என்பவன் தலைமையில் ஒரு பெரும் படையைத் திருச்சியைத் தாக்க அனுப்பிவைத்தான். அப் படையை எதிர்த்து முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கை சொக்கநாதருக்கு இருந்தது. அந்த நம்பிக்கை வீண் போகாதவாறு மக்கள் யாவரும் ஒரு சேரத் திரண்டு நாயக்கருக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்துதவினர். அதனைக் கண்ட முகம்மதியப்படை பின் வாங்கித் தம் நாட்டிற்கு ஓடியது. செல்லும் வழிகளிலெல்லாம் கொள்ளையிட்டும், தீயிட்டும், சிறையிட்டும், சித்ரவதை செய்தும் சென்றது. எவ்வளவு அழிவு செய்ய முடியுமோ அவ்வளவு அழிவையும் செய்தனர். இறுதியாக, வனமியான் நாட்டை விட்டுப் போகுங் காலை நாயக்கரிடம் மிகுந்த பொருளைத் திறையாகவும் பெற்றான். இந்தப் போரினால் சொக்கநாதருக்கு மிகுந்த இழப்பே தவிர, நன்மை சிறிதுமில்லை! போரில் தமக்கு உதவ முன்வராத தஞ்சை மன்னரையும், இராமநாதபுரம் சேதுபதியையும் பழிவாங்க வேண்டுமென்று கருதினார். அந்தச் சமயத்தில் அவ்விருவரும் உதவாமலிருந்தது வெறுக்கத்தக்க செயலேயாம். ஆனால், பகையை வளர்த்துக்கொள்வது ஆட்சிக்குக் கேடென்பதைச் சொக்கநாதர் நினைத்தாரில்லை. கோபம் கண்ணை மறைத்துவிடும் என்பார்களன்றோ? அந்த முறையில் சேதுபதியையும் தஞ்சை மன்னரையும் எதிர்த்துப் போர் நிகழ்த்தினார். அப் போர்களின் விளைவினைக் காண்போம்.

வனமியான் தலைமையில் வந்த முகம்மதியப்படை திருச்சியைத் தாக்கியபொழுது சேதுபதி உதவி செய்ய வில்லையன்றோ ? அதற்குக் காரணம் என்னவெனில், திருமலை நாயக்கர் காலத்தில் சேதுபதிக்குக் கிடைத்த உரிமைதான். திருமலை நாயக்கர் ஆட்சியில் போர் ஒன்று நிகழ்ந்தது. அந்தப் போரில் சேதுபதியின் வீரர்கள் பகைவர்களை முறியடித்து வெற்றி தேடித் தந்தார்கள். அதனால், திருமலை மன்னர் அப்பொழு திருந்த சேதுபதிக்கு மிக்க மதிப்பும் கப்பம் கட்ட வேண்டாம் என்ற சிறப்பும் வழங்கி யிருந்தார். அன்று தொட்டுத் தங்களை மிகவும் உயர்வாக எண்ணிச் செருக்குற்றிருந்தனர். அதுவே சொக்கநாத நாயக் கருக்கு அவர்கள் உதவி செய்ய வராத காரணமாகும். நாயக்கரோ அந்த நச்சு எண்ணத்தைப் போக்கி நல்ல பாடங் கற்பிக்கவேண்டும் என்று கருதினார்; மறவ நாட்டின் மீது பெரும் படை கொண்டு சென்றார். எதிர்த்துப் போர்புரிய முடியாது எனக் கண்ட சேதுபதி காட்டிலே சென்று ஒளிந்துகொண்டார். மறவ வீரர்களும் மறைவிடத் திருந்தே நாயக்க வீரர் களைத் தாக்கித் துன்புறுத்தலாயினர். சேது நாட்டின் சிறந்த கோட்டைகளாக விளங்கிய திருப்புத்தூர், புதுக்கோட்டை, மானமதுரை, காளையார்கோவில் முதலியவற்றைக் கைப்பற்றி வெற்றி விழா நடத் தினார். நம்பிக்கை வாய்ந்த படைத் தலைவர்களைக் காவலர்களாக வைத்து மதுரை மீண்டார். சிறிது காலத்திற்குள் நிலைமை முற்றிலும் மாறியது. நாயக் கரின் படை வீரர்கள் மறவ நாட்டு வீரர்களால் கொல்லப்பட்டார்கள் என்ற செய்தி கேட்டுத் திடுக்

கிட்டார். நாயக்கர் அடைந்த வருத்தத்திற்கு அளவில்லை. மறவ நாட்டில் கைப்பற்றிய சிறந்த கோட்டைகளை நினைந்து ஆறுதல் அடைந்தார். இவ்வாறு தமக்கு உதவாத சேதுபதியைப் பழிக்குப் பழி வாங்கியதால் வந்த விளைவு பகை ஒன்றேயாம்!

சொக்கநாதர் காலத்தில் தஞ்சையை ஆண்ட அரசர் விஜயராகவ நாயக்கர் என்பவர். அவரும் முகம்மதிய அரசர் திருச்சியின்மீது தாக்கப் படை அனுப்பிய காலத்தில் உதவ முன்வரவில்லை. அதனை மனதிலே கொண்ட சொக்கநாதர் தஞ்சைநாட்டிற்குப் பெரும் படையுடன் சென்றார்; வல்லம் கோட்டையைக் கைப்பற்றினார்; மேலும் சில இடங்களையும் பிடித்துக் கொண்டார்; தஞ்சை மன்னரைப் பணியுமாறு செய்து விட்டு நாடு திரும்பினார். இந்தப் போரிலே நாயக்கர் பழிக்குப் பழி வாங்கியதில் மகிழ்ச்சியுற்றாலும் அதனால் வந்த விளைவு பகைமையேயாம். இவ்வாறு போர்கள் செய்தபின், நாயக்கர் தலைநகர் மாற்றம் பற்றிச் சிறிதும் சிந்திக்காது செய்த செயல் மக்களிடத்திலே மிக்க வெறுப்பை யுண்டாக்கியது. பகைவர்களின் படையெடுப்பைத் தடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் திருமலை நாயக்கர் தம் தலைநகரைத் திருச்சியிலிருந்து மதுரைக்கு மாற்றினார் என்பதை முன்னரே குறிப்பிட்டோம். இந்த உண்மையை அவர்தம் பேரனாகிய சொக்கநாத நாயக்கர் தாம் ஆறு ஆண்டுகள் ஆட்சி புரிந்ததில் நன்கு அறிந்திருக்க வேண்டும். அவ்வாறு அறிந்திருந்தும் மறுபடியும் தலைநகரை மதுரையினின்றும் திருச்சிக்கு மாற்றியது அவருடைய

அறியாமையே யாகும். ஒரு வேளை திருச்சிக்கு இருந்த பெருமையெல்லாம் மதுரைக்குப் போய் விட்டதே என்ற போலி எண்ணமாகவும் இருக்கலாம்! தம் எண்ணப்படி தலைநகரைத் திருச்சிக்கு மாற்ற முடிவு செய்தார். 1660-ஆம் ஆண்டில் திருச்சியில் அரண்மனை கட்டத் தொடங்கினார். அதன் செலவிற்கு மக்களிடம் வரியின் வாயிலாகப் பொருளைச் சேர்த்தார். அன்றியும் மதுரையில் அழகுக் கலையாக விளங்கும் திருமலை நாயக்கர் அரண்மனையில் பதித்திருந்த ஒளி மிகுந்த பொருள்களையெல்லாம் இடித்து எடுத்துத் திருச்சிக்குக் கொண்டு சென்றார். இவர் செய்த அழிவு வேலையால் அதிகாரிகள் மனம் புண்பட்டனர்; கலைஞர்கள் கவலைக் கடலுள் ஆழ்ந்தனர்; கலை விநோதர்கள் கண்ணீர் சிந்தினர்; இழித்தும் பழித்தும் கூறினர். கலையுலகம் நாயக்கரின் அறியாமைச் செயல் கண்டு நகைத்தது என்றால் வேறு என்ன சொல்வது?

சொக்கநாதர் தம் விருப்பப்படியே திருச்சியில் அழகுமிக்க அரண்மனை அமைத்து ஆட்சிபுரிந்து வந்தார். அப்பொழுதிருந்த தஞ்சையரசர் விஜயராகவ நாயக்கர் மறுபடியும் தாம் இழந்த வல்லம் முதலிய இடங்களை நாயக்கரிடமிருந்து கைப்பற்றி ஆட்சி செய்துவந்தார். மதுரை நாயக்கர்களுக்கும் தஞ்சை நாயக்கர்களுக்கும் பழங்கால முதலே உறவு இருந்து வந்தது. அதுபோலவே விஜயநகர அரசர்களுக்கும் தஞ்சை அரசர்களுக்கும் திருமணம் முதலியவற்றிலும் உறவு இருந்து வந்திருக்கிறது. தஞ்சையை ஆட்சி புரிந்த செவ்வப்ப நாயக்கர் என்பவர் விஜயநகர அரச

குடும்பத்தில் பெண் கொண்டுள்ளமை அறியப்படுகின்றது. திருமலை நாயக்கர் தஞ்சை நாயக்கரின் மகளை மணந்துகொண்டதும் அறிந்த செய்தியேயாம். அந்த முறைப்படி சொக்கநாதர், தஞ்சை யரசர் விஜய ராகவ நாயக்கரின் மகளை மணக்க விரும்பினார். அவர் விருப்பத்திற்குத் தஞ்சையரசர் இணங்காமையே மறுமுறையும் தஞ்சை நாட்டரசர்மீது போர் தொடுக்க வேண்டியதாயிற்று. இந்தப் போரே சொக்கநாதர் வாழ்க்கையின் திருப்புமுகம் என்று சொன்னால் மிகையாகாது!

முதலாவதாக, தஞ்சை மன்னருடன் சொக்கநாத நாயக்கர் போர் தொடங்க வேண்டிய சிறந்த காரணம் என்ன, அஃது எவ்வாறு பொருந்தும் என்று பார்ப்போம்.

சொக்கநாதர் தன்னம்பிக்கையும் மனவுறுதியும் படைத்தவரன்றோ? அதனால் விஜயநகர அரசின் பெருமையை மீண்டும் நிலைநிறுத்த வேண்டுமென்ற அவா மிகுந்தது. முகம்மதிய அரசர்களை அறவே ஒழிக்க வேண்டும் என்ற எண்ணமும் மிக்கிருந்தது. அதன் பொருட்டுத் தஞ்சை மன்னருடைய உறவையும் தேடிக்கொள்ள விரும்பினார். தஞ்சை மன்னருடைய உறவு என்றும் நிலைத்திருப்பதற்கு ஒரே வழிதான் உண்டு. அதுவே திருமணம் செய்துகொள்ளும் வழி என்று சிந்தனை செய்தார்; தூது விடுக்கவும் முடிவு செய்தார். தஞ்சை மன்னர் உறவு கிடைத்தால் சேதுபதியின் உதவியும் தானே கிடைத்துவிடும். தென்னாட்டவர் ஒன்றுபட்டால் மைசூர் நாட்டை

எளிதிலே கைப்பற்றலாம். அதன்பின் முகம்மதிய அரசர்களைத் துரத்தி மீண்டும் விஜயநகரப் பேரரசை நிறுவலாம். இந்த உயர்ந்த உள்ளம் மிகவும் போற்றத் தக்கதே. இஃது ஒன்றே அவருடைய சிறந்த பேராண்மையைக் குறிக்கும். இக் கருத்தை மனதிலே கொண்டார். தளவாய் வேங்கடகிருஷ்ணப்ப நாயக்கரை மகட்கொடை பெறுதற்காகத் தஞ்சை மன்னர்பால் தூது விடுத்திருந்தார். தளவாய், தஞ்சையரசரை அடைந்து மணச் செய்தியை மனங்கொள மகிழ்வுடன் உரைத்தார். விஜயராகவ நாயக்கரோ விரும்பிக் கேட்டாரிலர். அவருள்ளத்தில் பழைய நிகழ்ச்சிகள் சில தோன்றித் தோன்றி மறைந்தன போலும்! சொக்கநாதருக்கு மகட் கொடேன் என மறுத்துரைத்தார். அவர் மறுத்துரைத்தமைக்குப் பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. விஜயநகர அரச குலத்துள் மணம்செய்த தஞ்சை மன்னர், விஜய நகர அரசருக்கு ஊழியம் புரிந்த மதுரை நாயக்க அரச குலத்திற்குப் பெண் கொடுப்பதா என்ற தகுதியை மனதிலே கொண்டு மறுத்தார் என்பர் ஒரு சாரார். மதுரை நாயக்க அரசராகப் புகழ் பெற்று விளங்கிய திருமலை மன்னர் தஞ்சை நாயக்க மன்னன் மகளை மணந்தார் என்றும், அரசருக்கும் அரசிக்கும் நடந்த உரையாடலின் போது தந்தையின் அரண்மனையைப் புகழ்ந்தும், கொழுநனின் அரண்மனையினை இகழ்ந்தும் கூறியதாகவும், அதனால் திருமலை நாயக்கர் மிகுந்த சினமுற்று உடைவாளால் குத்திக் கொன்றார் என்றும், அதன் காரணமாகவே விஜயராகவ நாயக்கர் மகட்கொடை மறுத்தார் என்றும் கூறு

வர் பிறிதொரு சாரார். சொக்கநாதர் தஞ்சை மன்னரைப் பழிக்குப் பழி வாங்கினரன்றோ? அப்பொழுது தமக்கு ஏற்பட்ட இன்னல்களையும் இழிவினையும் எண்ணி மறுத்துவிட்டதாகக் கூறுவர் சிலர். இவற்றினும் வேருக ஒரு காரணமுண்டு எனக் கருதுவர் சிலர். அதுவே பொருந்துவதாகவும் சிறந்ததாகவும் காணப்படுகின்றது. அக் காரணம் என்ன என்பதை விளக்கமாகக் காண்போம்.

பண்டை நாளில் அரசராயினும், வீரராயினும் பெண்கேட்டு வந்தபோது எளிதாகப் பணிந்து இசைவதை மிகவும் மானக் குறைவாகக் கருதி வந்தனர். அன்றியும் தங்களுடைய ஆண்மைக்கு இழுக்கு என்றும் எண்ணி வந்தனர். சங்க காலத்தில் கடையெழு வள்ளல்களில் சிறந்து விளங்கிய வேள் பாரி வரலாறு தக்க சான்ருகும். மூவேந்தர்கள் பாரியின் மகளிரை மணக்கக் கருதித் தூது போக்கினர். பெண் கொடுக்க மறுத்தான் பாரி. அவன் மறுத்துவிட்ட செய்தி கேட்டுப் படையெடுத்துச் சென்றனர். அவ் வள்ளலின் பறம்பு நாட்டை முற்றுகை யிட்டனர். பாரியின் உயிர் நண்பரும், செந்தமிழ்ச் சான்ருேரும் ஆகிய கபிலர் பெருமான் மூவேந்தரையும் கண்டார். பாரியின் படைவீரத்தையும் கொடைத் திறத்தையும் எடுத்துரைத்தார். ‘பெண் கேட்டவுடன் கொடுக்கும் அவ்வளவு எளியவனே எம் வள்ளல்? அவன் நாட்டை மூவிரும் முற்றுகையிட்டு அடைதல் எளிதன்று. நீங்கள் மூவிரும் உங்கள் மனைவியருடன் பரிசில் மாக்களாக ஆடிப் பாடிச் செல்வீர்களாயின் அவன் மலையையும் நாட்டையும் பெறலாம்’ எனக் கூறினர். இச்

செய்தியை இன்றும் புறநானூறு அறிவிக்கின்றது. அதற்குப் புலவர் பெருமக்கள் 'மகட்கொடை' என்ற துறைப் பெயரும் அமைத்திருக்கின்றார்கள். இந்நிகழ்ச்சி எதைக் காட்டுகின்றது ? மூவேந்தர்கள் தமிழ் நாட்டின் பேரரசர்களானாலும் பெண் கேட்டவுடன் கொடுப்பது ஆண்மைக்கு இழுக்கு என்று சிற்றரசனாகிய பாரி கருதினான் என்ற உண்மையையன்றோ ? இப் பண்பைப் பிற்காலத்தெழுந்த இலக்கியங்களிலும் நம் புலவர் பெருமக்கள் 'மறம்' என்ற உறுப்பாக அமைத்துப் பாடியிருக்கின்றார்கள். அருட்புலமை சான்ற குமரகுருபர அடிகள் கன்னியாகுமரி முதல் காசிமாநகர் வரை சைவமும் தமிழும் பரப்பிய பெரியார். அப் பெருமகன் காசியிற் கோயில் கொண்டுள்ள விசுவநாதப்பெருமான் மீது ஒரு கலம்பகம் பாடினார்கள். அந் நூலில் மேற்கூறிய உண்மையைக் கற்பித்து பாடியுள்ளமை அறியலாம். ஓர் அரசன் காசிப் பதியிலுள்ள மறக்குலப் பெண்ணை மணக்க விரும்பினான். அவ் விருப்பினை ஒரு தூதுவன் மூலமாக அறிவிக்கும்படி அனுப்பினான். அத் தூதுவன் அரசன் கொடுத்த தூதுத் திருமுகத்தைப் பெற்றுக் கொண்டு காசிமாநகர் சென்றான். அங்கு வாழும் மறக்குலத் தலைவனைச் சார்ந்து கடிதத்தைக் கொடுத்தான். அதனைப்பெற்ற அவன் மிக்க சினங்கொண்டு அரசனை இழித்தும், தன் குடியின் வீரப்பெருமையைப் புகழ்ந்தும் கூறுகின்றான். 'தறுகண் மறவர் குலக் கொடியைவேட்டு அரசன் விடுத்த தூதா! உனதுகையிலிருப்பது அவன் திருமுகமோ ? அதை என்னிடம் காட்டு. இப்பொழுதே அவன் திருமுகத்திலுள்ள கண்

களைத் தோண்டுகின்றேன்; முட்டுக்களைக் கதையினுல் தாக்கி முறிக்கின்றேன்; கன்னத்தைக் கிழிக்கின்றேன்; வாயைப் பிளக்கின்றேன்; நாசியையும் செவிகளையும் அறுத்து அவமானம் செய்கின்றேன்' என்று மறுத்துரைக்கின்ருன். வீரன் ஒருவன் அரசனைவிடப் பொருளாலும், நிலையாலும், புகழாலும் எவ்வளவோ குறைந்தவன். அவ்வாறிருக்கும் வீரன் தன் மகளை அரசன் மணக்கத் தானே விரும்பி வருகின்ருன் என்ருல், அவன் அளவிலா மகிழ்வு கொள்ளவேண்டுமே? தன் மகளுக்கு மன்னனெருவன் மணமகளுக வாய்க்கப் போகின்ருனே என்று தன்பால் வந்த தூதுவனை வரவேற்றுப் பரிசும் வழங்கவேண்டுமே? ஆனல், இவன் அதற்கு மாருக அரசனை இகழ்ந்தும் சினந்தும் பேசுகின்ருன் அவ் வீரன். அரசனுடைய பகை வருமே என்று அஞ்சவும் இல்லை. எவ்வளவு சிறந்தவனு யிருந்தாலும் பெண் கேட்டு வந்தவுடன் இசைவது ஆண்மைக்கு இழுக்காகும் எனக் கருதியதன்ருே இதற்குக் காரணம்? இந்த மானவுணர்வே விஜய ராகவ நாயக்கர் சொக்கநாத நாயக்கருக்குப் பெண் கொடுக்க மறுப்பதற்குச் சிறந்த காரணமாம். இந்தக் காரணமே ஏனையவற்றை விடச் சிறந்தது என்பதை வலியுறுத்தும் நிகழ்ச்சி ஒனறும் உள்ளது.

தளவாய் வேங்கட கிருஷ்ணப்ப நாயக்கர் திருச்சிக்கு மீண்டு வந்தார். தஞ்சை மன்னர் பெண் கொடுக்க மறுத்துவிட்ட செய்தியைத் தெரிவித்தார். சொக்கநாதர் தம்மைத் தஞ்சை மன்னன் இழிவுபடுத்தியதாக எண்ணினர்; பொறுக்க முடியாத சீற்றங்

கொண்டார்; 'இப்பொழுதே தஞ்சையை நோக்கிப் படை செல்லட்டும்' என ஆணையிட்டார். தமது எண்ணத்தைப் போரால் முடிவு செய்தலே தக்கது என எண்ணினுர் போலும்! தளவாயின் தலைமையில் மாபெரும் படை தஞ்சைக்கு விரைந்தது. அவருக்குத் துணையாக வீரமிக்க இருபடைத் தலைவர்களும் தத்தம் படையுடன் செல்லுமாறு கூறினுர். முப்பெரும் படையும் தஞ்சையுள் புகுந்தன; உடனே வல்லம் கோட்டையை முற்றுகையிட்டுக் கைப்பற்றின. எதிர்த்த பகைவர் படை சிதறுண்டது. இந்தத் தோல்வியைக் கேட்ட விஜயராகவ நாயக்கர் ஒரு பெருஞ்சேனை யொன்றை அணிவகுத்து எதிர்த்துத் தாக்குமாறு ஆணையிட்டார். தலைநகராகிய தஞ்சையை நோக்கிச் சொக்கநாதரின் படைவீரர்களும் வந்து கொண்டிருந்தனர். இரு படைகளும் சந்தித்துப் போர் புரிந்தன. இரு பக்கத்து வீரர்களும் ஆண்மையோடு போர் புரிந்தனர். பலர் கொல்லப்பட்டார்கள். வெற்றி காணும் வரை போர் செய்தே யாகவேண்டும் என இரு சாராரும் உறுதி பூண்டனர். இறுதியில் வெற்றி சொக்கநாதருக்கே கிடைத்தது. அதன் பிறகு தளவாய் தஞ்சை யரசரை அணுகினுர். 'இப்பொழுதேனும் பெண் கொடுக்க இசைவீராயின் மேலும் அழிவு வராமல் பாதுகாக்கலாம்' என்று எடுத்துரைத்தார். தஞ்சையரசர் அவ் வார்த்தைக்குச் செவிசாய்க்கவே இல்லை. அதனுல், மறுபடியும் தலைநகர் தாக்கப்பட்டது. நகரெங்கும் போர்ப் புயல் வீசியது. நகரெங்கும் சொக்கநாதரின் படைவீரர்கள் சூழ்ந்து திரிந்தனர். அந்தச் சமயத்திலும் தளவாய் தஞ்சை

யரசருக்குத் தூது போக்கினார். மணவினைக்கு இணங்குமாறு வேண்டினார். அரசரோ, 'இவ்வளவு அழிவிற்கும் இழிவிற்கும் இடையே திருமணமா? அன்றிச் சமாதானமா? இனிப் பகைவர் கையில் நம் செல்வமும் அரண்மனையும் ஏனைய பொருள்களும் போவதா? நம் பெண்ணைப் பகைவர் எளிதாக மணக்குமாறு விடுவதா? ஒரு நாளும் அவ்வாறு செய்ய இந்த விஜயராகவன் இடங் கொடுக்கமாட்டான்' என்று கோபத்தால் பொங்கினார். அனைத்தையும் அழித்துவிடுமாறு ஆணை பிறப்பித்தார். கருவூலங் களை யெல்லாம் தீயிட்டுக் கொளுத்தினர். மண்ணிலே எண்ணற்ற பொருள்கள் புதைக்கப்பட்டன. அரண் மனை மாதர் அனைவரும் தீயிற் குதித்து மாண்டனர். அழகுத் தெய்வமாக விளங்கிய தம் ஒரே மகள் மோக னங்கியும் தீப்பாய்ந்து மானங் காத்தனள். தஞ்சை நாயக்க மரபின் மானவுணர்வை என்னென்று இயம்பு வது! அன்றியும், தஞ்சை மன்னர் தம் மைந்தன் மன்னார்சாமியுடன் வெளியே போந்து பகைவர் படை களை எதிர்த்துப் போரிட்டு விழுப்புண்பட்டு வீர வாழ்வு எய்தினர். தமக்குப்பின் மைந்தன் மாற்றாரிடம் மண்டியிட்டு நாயக்க மரபின் குடிமாண்பைக் குலைத்து விடுவானோ என்று ஐயுற்றார் போலும்! சொக்கநாத நாயக்கர் தம் உள்ளத்து வைத்திருந்த காதற்செல்வம் கைக்கெட்டாது போயினமை வருந்துதற்குரியதே! தஞ்சை மன்னரும் மாற்றானுக்குப் பெண்ணைக் கொடுத்து மானமிழப்பதினும் அவன் வாளுக்கு உயிர் ஈந்து வீரப்புகழ் கொள்வதே மேலானது என்று கருதி யதும் வியப்பிற்குரியதே! இந்த நிலையில் இருந்த

RAI UNIVERSITY

தஞ்சை யரசு வீழ்ச்சியுற்றது. மதுரைநாயக்கர் வெற்றிப் பண் பாடினர். எனினும், சொக்கநாதர் தாம் விரும்பிய மங்கை நல்லாள் மாண்ட செய்தி கேட்டு மறக்க முடியாத மனவருத்தங் கொண்டார். அவ்வாறு நடைபெருது போயின் மங்கம்மாள் சொக்கநாதரை மணக்க வேண்டிய நிலை வந்திருக்குமோ? ஆகவே, மோகனங்கியின் இழப்பு மங்கம்மாளின் வாழ்வாக மாறியது என்று சொன்னல் மிகையாகாது. மங்கம்மாளைச் சொக்கநாதர் மணந்ததற்கும் திருவருளே காரணம் என்பர். மங்கம்மாளின் நல்வினையே சொக்கநாதரை மணக்கக் காரணமாயிருந்தது எனவும் கூறுவர். சொக்கநாத நாயக்கரின் இளமை வீரமும் பேரார்வமும் மங்கம்மாள் மணந்தமைக்குக் காரணங்கள் என்பாரு முளர். சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் மணம் நிகழ்வதற்குரிய பொருத்தமான காரணம் யாது எனக் காண்போம்.

விஜயராகவ நாயக்கரின் மகள் மோகனங்கியின் பால் மிக்க காதல் கொண்டவர் சொக்கநாதர். அம்மாதைப் போரால் அடையக் கருதியும் கைகூடவில்லை. மோகனங்கி தீப்புகுந்த செய்தியும் சொக்கநாதர் உள்ளத்தைச் சுட்டு வருத்தியது. இவ்வாறு அன்பு செலுத்திய நாயக்கர் ஒரு முறையும் பார்க்காத மங்கம்மாளை எவ்வாறு மனம் விரும்பி மணந்து கொண்டார் என்பது சிந்தித்தற் குரியதன்றோ? சொக்கநாதர் அரியணை ஏறிய இளமைக் காலத்திலேயே மிக்க ஆர்வமுடையவரா யிருந்தார். விஜயநகரப் பேரரசின் பெருமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டு என்ற

பேரார்வம் தூண்டியது. அதற்குத் தக்க சூழ்ச்சி யினைச் செய்ய எண்ணினார்; தென்னாட்டு அரசர்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பகைவர்களை விரட்டு வதே செய்யத் தகுந்தது என்று முடிவு செய்தார். மைசூர் அரசைக் கைப்பற்றவும் பலமுறை முயன்றார்; ஆனால், மைசூர் அரசர் சிக்கதேவராயர் தாமே பெரும் படையுடன் நாடுகளைக் கவரும் பொருட்டு வந்துவிட் டார். அதனை அறிந்த சொக்கநாதர் தம் நாட்டின் பஞ்ச நிலையினையும் வலியின்மையினையும் நன்கு கண்டார்; பிற அரசர்களின் உதவியினாலேயே எதிர்க்க முடியும் எனக் கண்டார். விஜயநகர அரசின் கடைசி மன்னராக விளங்கியவர் ஸ்ரீரங்கராயர். அவர் ஆட்சி புரியும் சிறு நாட்டையும் அடையும் கருத் துடன் விரைந்து வந்தது மைசூர்ப்படை. உடனே சொக்கநாதரும், தஞ்சை யரசின் படைத்தலைவரும், பீஜப்பூர் சுல்தானின் பொறுப்பு வாய்ந்த அதிகாரியும் ஓரிடத்தில் கூடினர். மைசூர்ப் படையை எதிர்த்து ஸ்ரீரங்கராயரின் உரிமையைப் பாதுகாப்பது என்று ஒருமுகமாக முடிவு செய்தனர். அந்த முடிவின்படி இருபடையும் ஈரோட்டில் சந்தித்துக் கடும்போர் புரிந்தன. இறுதியில் நாயக்கருக்கு ஏமாற்றமே விளைந்தது! விஜயநகர அரசராகிய ஸ்ரீரங்கராயரோ அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டார். செவ்வப்ப நாயக்கர் என்ற அரசர் ஒருவர் சில படைத்தலைவர்களின் உதவியால் விஜயநகர அரசர் பொருட்டுப் போராடி னார். அவரும் மைசூர் அரசரால் தோற்கடிக்கப்பட் டார்; ஸ்ரீரங்கராயருக்குப் பின் விஜயநகர அர சுக்கு உரிமையாக வந்த கோதண்டராமராயர் என்பவ

ரும் மைசூர் அரசரின் தளபதி குமாரையா என்பவரால் தோல்வியடைந்து நாட்டை இழந்துவிட்டார். விஜயநகரப் பேரரசின் தலைவிதி இவ்வாருயிற்று !

இந்தப் போர்ச் செய்தி முழுவதையும் தெள்ளத் தெளிய அறிந்தவர் மங்கம்மாளின் தந்தை தளவாய் இலிங்கம நாயக்கர். சொக்கநாதரின் இளமை வீரமும் வெற்றியும், விஜயநகர அரசை மீண்டும் உருவாக்க நினைந்த ஆர்வமும் பன்முறை கேள்விப்பட்டுத் தம்முள்ளே அளவிலா மகிழ்ச்சியுற்றவர். சொக்கநாதர் வாழ்வின் முற்பகுதி முழுதும் வெற்றியேகண்டு விளங்கிய தன்ரே? தஞ்சை வேந்தனையும், சேதுபதியையும் தலைவணங்கச் செய்த வீரத்தையும் தளவாய் இலிங்கமர் அறியாதிருப்பரோ ? இவற்றையெல்லாம் நன்கு தெரிந்த அவருக்கு மோகனங்கி தீப்பாய்ந்திறந்ததும் நன்மையாகவே முடிந்தது. அதனை எண்ணியும் உள்ளம் உவகையடைந்திருப்பர். ஆகவே, தம் ஒப்பில்லா ஒரு மகள் மங்கம்மையை நாயக்க மன்னருக்கு மணமுடிக்க வேண்டும் என்னும் வேட்கை மிகுந்தது. அவர் எண்ணம் சொக்கநாதருக்கு அறிவிக்கப்பட்டது. அவரும் விஜய நகர மரபிலே வந்த வீரத் தளபதியின் மகளைத் தாரமாக்கிக் கொள்வதும் பொருத்தமே என எண்ணினர். தளவாய் இலிங்கமருக்கு மணம் பேசத் தூதுவிடுத்தார். இருசாராரும் விரும்புகின்ற போது தூது வெற்றி பெருது போய்விடுமோ ? மண நாள் குறிக்கப்பட்டது. சொக்கநாதருக்கும் மங்கம்மாளுக்கும் மங்கல மணம் நிறைவேறியது. மணமக்கள் இன்ப வாழ்வை இனிதே தொடங்கினர். சொக்கநாதர் நினைத்தது வேறு; இப்பொழுது

நிகழ்ந்தது வேறு. தளவாய் இலிங்கமர் நினையாம லிருந்தது எதிர்பாராமல் நிகழ்ந்தது. இவ்வாறு நிகழு மாயின் அச் செயலைத் திருவருளால் நடைபெற்றது என்பர் ஆன்றவிந்தடங்கிய சான்றோர். சொக்கநாதர் வாழ்க்கையிலும் அதுவே நிகழ்ந்தது. 1673-ஆம் ஆண்டில் சொக்கநாதர் தஞ்சையரசர் மகள் மோக ஞங்கியை மணக்க நினைத்தார். ஆனால், மோகனங்கி தீப்பாய்ந்தமையால் அவ்வெண்ணம் நிறைவேறாது போயிற்று. தளவாய் இலிங்கமர் மங்கம்மாளை மன்னனொருவனுக்கு மணமகளாக்குவோம் என்று எண்ணியதே இல்லை. ஆனால், எதிர்பாராத முறை யில் சொக்கநாதரும் உடன்பட்டு மணம் செய்து கொண்டார். இங்ஙனம் நிகழும் எச் செயலும் பின்னாளில் சிறப்பெய்துவதற்கு அறிகுறி என்பர். சொக்கநாதரும் மங்கம்மாளை மணந்து கொண்டது திருவருட் செயலே எனக் கருதினர். மங்கம்மாள் தம் வாழ்நாளில் தக்க புகழ் பெறுவர் என்ற அறிகுறியை யும் இந் நிகழ்ச்சியால் அறியலாம். இவ்வாறு தங் கள் வாழ்வில் நிகழ்ந்த அரிய செயல்கள் பலவற்றைக் கண்டு பின்னேரும் பயனடையுமாறு பாடிய பாடலே சொக்கநாதர் வாழ்க்கைக்குப் பொருந்துவதாயுள்ளது. அஃதாவது,

"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்
அன்றி யதுவரினும் வந்தெய்தும்—ஒன்றை
நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்
எனையாளு மீசன் செயல்"

என்பதாம். திருவருட்பேற்றால் மணம்புரிந்துகொண்ட மங்கம்மாள் மகப்பேறு எய்தியதும், மாதேவியாகும் பேறு பெற்றதும் பின்னர்க் காண்போம்.

# 5. மங்கம்மாள் மகப்பேறும் மாதேவிப் பட்டமும்

1673-ஆம் ஆண்டில் நடந்த தஞ்சைப் போரில் சொக்கநாதர் வெற்றி பெற்ருரன்ரு? அப்பொழுது தஞ்சை நாட்டை ஆளும் பொறுப்பைத் தம்மிடம் வளர்ந்து வந்த உரிமை மிக்கவராகிய அழகிரி நாயக்கரிடம் ஒப்படைத்துவிட்டுத் திருச்சிக்கு மீண்டார். அதன் பிறகுதான் மங்கம்மாளுக்கும் சொக்கநாதருக்கும் திருமணம் நிகழ்ந்தது. இல்லற வாழ்விற் புகுந்த இருவரும் இன்பமாகவே வாழ்ந்தனர். வாழ்க்கைக்குப் பொருந்திய துணைவி வாய்த்ததை நினைந்த அரசர் மிகுந்த அன்பு பாராட்டி ஒழுகலானுர். 1674-ஆம் ஆண்டில் திருமணம் நடைபெற்றது. அதற்கு அடுத்த ஆண்டே அவ் விருவரின் அன்பின் சின்னமாக ஒரு மகவு பிறந்தது. போரிலேயே கிடந்து உழன்ற சொக்கநாதரோ மழலை பேச வந்த மதலையைக் கண்டதும் மனங்குளிர்ந்தார்; மனைவியிடத்தும் மகவிடத்தும் மிக்க அன்புகொண்டு வாழத் தொடங்கினுர். அவர்தம் குணமறிந்து பணியாற்றும் அரசியாரும் மைந்தனைப் பெற்றமைக்கு மட்டிலா மகிழ்ச்சி கொண்டார்; கண்ணை இமை காப்பது போல் காத்து வளர்த்து வந்தார். அவ் வருமைச் செல்வமே சொக்கநாதருக்குப் பின் பட்டம் எய்திய ஸ்ரீ ரங்க கிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கர். இவ்வாறு இல்லற வாழ்வில் இன்புற்றுத் திளைத்த நாயக்கர் மீண்டும் போரிலே

ஈடுபட வேண்டியவரானார். திருமணத்திற்குப் பின் கவலையில்லாமல் வாழ்ந்த வாழ்வு அவராட்சியில் இந்த ஓராண்டுக் காலமே.

தஞ்சையை ஆட்சி செய்யும்படி ஏற்படுத்திய அழகிரி நாயக்கர் சிறிது காலம் சொக்கநாத நாயக்கர் ஆணைவழி நடந்தார். அடுத்த ஆண்டிலேயே நாயக்கரை மதியாது தாம் தனியரசர் என்று எண்ணி இறுமாந்திருந்தார். அதனை அறிந்த சொக்கநாதர் சில அதிகாரிகள் வாயிலாக அறிவுரை கூறியும் பணியவில்லை. அதனால், சொக்கநாதர் சீற்றத்திற்கு அழகிரி ஆட்பட்டார்; அரசரது சினத் தீ என்ன செய்ய முடியும் என்று இகழ்ந்துவிட்டார்; அரசருக்கு அடங்காது தாமே ஆட்சி புரிவதில் மேலும் முனைந்து நின்றார். இந்த நிலைமை முழுவதையும் தஞ்சையில் வேலைபார்த்து வரும் இராயசம் வெங்கண்ணா நன்கு அறிந்தார். சொக்கநாதருக்கும் அழகிரிக்கும் உறவு கெட்டுப் பகை முற்றியதைத் தெரிந்தார். இராயசம் வெங்கண்ணா அரசியல் அறிவிற் சிறந்தவர். முந்திய தஞ்சையரசர் விஜயராகவநாயக்கர் காலத்து விளங்கிய திறம்படைத்த அதிகாரியுமாவர். அவர் இருவருக்கும் ஏற்பட்டுள்ளதாகிய பகையினைக் கொழுந்துவிட்டு எரிவதற்கான சூழ்ச்சிகளைச் செய்ய எண்ணினார். 'தஞ்சை மன்னர் விஜயராகவரின் குடும்பம் அடியோடு அழிந்துவிடவில்லை; அம் மரபில் தோன்றிய மகன் ஒருவன் மறைவிடத்தே வளர்க்கப்பட்டு வருகின்றான்' என்ற செய்தியும் அவருக்குக் கிடைத்தது. மறுபடியும் தஞ்சை நாயக்கர் குடியிற் றோன்றிய அவனை அரியணை அமர்த்த அவாவினார். அவர்

எண்ணம் பொய்யாகாமல் நிறைவேறிய தன்மையைக் காண்போம்.

ஒரு நாள் வெங்கண்ணு யாரும் அறியாவண்ணம் அரச குமரன் வளர்ந்து வரும் நாகைப்பட்டினத்திற்குச் சென்ருர். அக் குமரனை வளர்த்து வரும் பெரு வணிகரிடம் இவனை எவ்வாறு கொணர்ந்தீர் என வினவினுர். அவர் அரண்மனை தீயால் எரிந்து புகைப் படலம் சூழ்ந்தபோது தூக்கிச் சென்றதாகவும், அவனுக்கே யாரென்று உணராதபடி வளர்த்து வருவதாகவும் தெரிவித்தார். வெங்கண்ணு மிகவும் பாராட்டினுர். ஒரு நொடிப் பொழுதும் அங்குத் தங்கவில்லை. நீண்ட நேரம் கடந்தால் அழகிரி நாயக்கர் தம்மை ஐயுற்றுத் தேட நேரும். தேடியகாலை தாம் இல்லாததை அறிந்தால் சூது வெளிப்பட்டுவிடும். எடுத்த பணி கெடுவதோடு உயிர்க்கும் இறுதியுண்டாகும் என்று அஞ்சினுர். இளங்குமரன் செங்கமலதாசையும் செவிலித்தாயையும் அழைத்துக்கொண்டு பீஜப்பூர் சுல்தானிடம் ஓடினுர். உண்மையை எடுத்துரைத்து உதவி புரிய வேண்டினுர். எங்ஙனமாயினும் செங்கமலதாசின் உரிமையைப் பெற்றுத் தரவேண்டுமென்று வற்புறுத்தினுர். சுல்தான் இதல் காண் இத்தகைய வாய்ப்பை நழுவ விடுவரோ? உடனே உதவி செய்ய இசைந்தார். தம் படைத்தலைவராகிய வெங்கோஜியைப் படையெடுத்துச் சென்று நாட்டை மீட்டுத் தரவும், அழகிரியை நாட்டை விட்டோட்டவும் ஆணையிட்டார். 'வெங்கண்ணு நினைத்தது என்றைக்காவது வீணுகுமோ' என்ற

எக்களிப்பில் ஆழ்ந்தார் வெங்கண்ணு. அழகிரி தம் சூழ்ச்சியை அறிந்துகொள்ளாதவாறு அரண்மனைக்குக் குறித்த காலத்திற் சென்று அலுவல் பார்த்து வருவாரானர்.

வெங்கண்ணுவின் சூழ்ச்சியால் தஞ்சையைத் தாக்கும் நிலை சுல்தானுக்கு ஏற்பட்டது. அம் மன்னனும் பெரும்படை ஒன்றைச் சேகரிப்பதையும், பின்னளிலே தஞ்சையைத் தாக்க எண்ணியிருப்பதையும் அழகிரி நாயக்கர் எவ்வாருே அறிந்து விட்டார். ஆனல், வெங்கண்ணு செய்த சூழ்ச்சி மட்டும் வெளிப்படவில்லை. வெங்கோஜியின் தலைமையில் படைவரும் எனத் தெரிந்த தஞ்சையரசர் அழகிரி படைகளைத் திரட்ட எண்ணினர். நாயக்க அரசர் சொக்கநாதருக்கும் செய்தியை அறிவித்து உடனே படையுதவுமாறு கேட்டிருந்தார். வெங்கண்ணுவோ உள்ளிருந்துகொண்டே படை வீரர்கள் ஒன்றுபடாமல் செய்துவந்தார். இந்தச் சமயத்தில் வெங்கோஜி என்ற மகாராஷ்டிர வீ ர ர் சுல்தான் ஆணைப்படி பெரும்படையுடன் வந்தார். மறுமுறையும் சொக்கநாதருக்குத் தூது போக்கி உதவி செய்யுமாறு கெஞ்சினர். ஆனல், அழகிரியின் நம்பிக்கைத் துரோகத்தை அவரால் மன்னித்து உதவமுடியவில்லை. வெங்கோஜி தஞ்சையை முற்றுகையிட்டு எளிதாகக் கைப்பற்றிக் கொண்டார். அழகிரி எதிர்த்து நிற்க முடியாமல் அஞ்சி மைசூர் நாட்டிற்கு ஓடிவிட்டார். வெங்கோஜி அரசன் சொல்லிய வண்ணமே செங்கமலதாசை அரியணை ஏற்றினர். முடிசூட்டு விழா

வெங்கண்ணுவால் சிறப்புற நடத்தப்பட்டது. முன்னர் விஜயராகவ நாயக்கர் போர் ஏற்பட்டபொழுது தம் கருவூலங்களையெல்லாம் மண்ணில் புதைத்து வைத்துவிட்டு இறந்துபோனாரன்றோ? அந்த மறை விடங்களை அறிந்திருந்த செவிலியானவள் அவற்றை அரியணை ஏறிய செங்கமலதாசிற்குக் காட்டினள். அளவில்லாத பொன்னும் மணியும் கிடைத்தன. அப் பொருள்களை அரசியல் நடத்துவதற்குப் பயன்படுத்தினார். வெங்கோஜியின் படைச்செலவிற்காகச் சில ஊர்களைக் கொடுத்து அவற்றிலிருந்து வரும் வருமானத்தைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு நன்றியுடன் தெரிவித்தார். ஆனால், வெங்கண்ணுவோ பழைய பதவியிலேயே இருந்து வந்தார். அரசர் தமக்கு உயர்ந்த பதவி அளிப்பார் என்ற நம்பிக்கையில் திளைத்திருந்தார். செங்கமலதாசர் வெங்கண்ணுவின் இயல்பை நன்கு அறிந்து கொண்டவராவர். ஆதலால், அவரை முழுவதும் நம்புவதற்கு முடியாதவரானார் அரசர். 1675-ஆம் ஆண்டில் ஆட்சிப்பொறுப்பை ஏற்றதும் தம்மை வளர்த்துப் பாதுகாத்த நாகை வணிகரையே நம்பிக்கையுள்ள தளவாயாக அமர்த்திக் கொண்டார். அதன் வாயிலாகத் தம் நன்றியுடைமையையும் காட்டினார். இந்தச் செயல்தான் அரசனை வெங்கண்ணு பகைப்பதற்குக் காரணமாயிற்று. அழகிரியை ஆட்சி பீடத்திலிருந்து நீக்குவதற்கு அரும்பாடு பட்டதும், செங்கமலதாசிற்காகச் சுல்தானை நாடிப் பல சூழ்ச்சிகள் செய்ததும், அவரைத் தஞ்சைக்கு அரசராக்கியதும் எற்றுக்கு? தாம் தளவாயாகவும் பிரதானியாகவும் உயர வேண்டுமென்னும்

ஆசையினாலேயன்றோ? அவருடைய பேராசை என்ன ஆயிற்று எனக் காண்போம்.

பெரும் பதவியை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த வெங்கண்ணா தஞ்சை மன்னர் செங்கமலதாசை விரட்டத் திட்டமிட்டார். உடனே மகாராஷ்டிர வீரர் வெங்கோஜியை அடைந்தார். அவரோ பீஜப்பூர் சுல்தான் யாது எண்ணுவரோ என அஞ்சி உதவ மறுத்துவிட்டார். சிறிது காலத்திற்குள் சுல்தான் காலமானார் என்ற செய்தி கிடைத்தது. இனி வெங்கோஜி எதுவும் செய்ய முன்வருவார் எனக் கருதி ஏகினார். வெங்கண்ணாவின் வேண்டுகோளுக்கு வெங்கோஜியும் இணங்கினார். வெங்கோஜியின் படை தஞ்சை நோக்கி விரைந்தது. படை வருகை கேட்டு அஞ்சிய செங்கமலதாசர் தஞ்சையை விட்டு ஓடி அரியலூரில் ஒளிந்து கொண்டார். தஞ்சையரசராக வெங்கண்ணா அமர்ந்தார். ஆட்சிப் பொறுப்பை ஏற்ற அவர் திறம்படவும் அமைதி நிலவும் தன்மையிலும் அரசியலை நடத்தினார். எனினும், வெங்கோஜிக்கு வெங்கண்ணா மீது நம்பிக்கை பிறக்கவில்லை. அவன் மீது ஐயுற்றுக்கொண்டே கண்காணித்து வந்தார். ஆக்க வேலையும் அழிவு வேலையும் தாம் விரும்பியவாறு செய்யும் ஆற்றலுடையவன் வெங்கண்ணா என்பதை அவர் அறிந்தவர். முன்னிருந்த தஞ்சையரசர்களாகிய அழகிரி நாயக்கரையும் செங்கமலதாசையும் நாட்டை விட்டோடக் கருவியாக இருந்தமையும் நினைந்தார். ஆதலால், தமக்கும் என்றைக்காவது தீமை செய்யத் துணிவான்; தீமை செய்வதற்கோ சிறிதும் அஞ்சான் என உணர்ந்தார். அவன்

உள்ளம் தன்னலத்திலேயே கருத்துக் கொண்டது; பிறர்க்குத் தீங்கு செய்தாவது தான் வாழவேண்டும் என்ற கயமைத் தன்மையுடையது. இத் தீயோனை மேலும் வைத்திருந்தால் தமக்கும் அதே நிலை வரும் எனப் பலவாறு எண்ணி ஒரு முடிவிற்கு வந்தார். அம் முடிவாவது வெங்கண்ணுவைச் சிறையிலேயே வைப்பது என்பதாம். இச் செய்தியை எப்படியோ அறிந்துவிட்டான் வெங்கண்ணு. வெங்கோஜியின் கையில் சிக்குண்டால் புலியின் வாயில் புல்வாய் படும் நிலைமையேயாம். ஆகவே, தஞ்சையை விட்டு அகல வேண்டுமென்று உறுதிகொண்டு, அன்றே எங்கோ சென்று மறைந்து கொண்டான். எவ்வித இடர்ப்பாடுமின்றி மகாராஷ்டிர வீரர் வெங்கோஜி தஞ்சை மன்னராக முடிசூடிக் கொண்டார். பேராசை மண்ணைக் கவ்வியது!

அழகிரி நாயக்கருக்கு உதவாமல் சொக்கநாதர் வாளா இருந்ததால், தஞ்சையரசராக வெங்கோஜி வெற்றி பெற்று முடிசூடிக் கொண்டார். அப்போரில் சொக்கநாதர் கலந்து கொள்ளாமற் போனது வருந்துதற் குரியதே. அதுவே சொக்கநாதர் ஆட்சி அழிவதற்குரிய மூலகாரணம் ஆம். அதன் காரணத்தை விளக்கமாகக் காண்போம்.

தென்னாட்டின் சரித்திரத்தை முழுதும் மாற்றியது சிவாஜி மன்னரின் படையெடுப்பே என்பதை யாவரும் அறிவர். அம் மகாராஷ்டிர வீரர் நாடு முழுவதையும் ஒரு குடைக் கீழ் ஆளவேண்டும் என்ற எண்ண முடையவரானார். செஞ்சியரசரோடும் கோல்

கொண்டா சுல்தாளுேடும் முதலிலே ஒப்பந்தம் செய்து கொண்டார். அவர்கள் உதவியைப் பெறுவதற்கு மிகுந்த பொருளைக் கொடுத்தார். பெரும்படையினை அமைக்கக் கருதி வீரர்கள் பலரைச் சேர்த்துப் பயிற்சியளித்து வந்தார். சிவாஜியும் இளமையிலேயே போர்த்திறம் மிக்கவரன்ருே? ஆதலால், படை வீரர்கள் யாவரையும் நன்கு ஆராய்ந்து அணிவகுத்தார். சிறந்த படைத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்தார். இவருக்கு மிகுந்த உதவியாக இருந்தவர் இரகுநாத பந்து என்ற அமைச்சர். அவர் சிவாஜியின் தந்தையிடம் உண்மையாக உழைத்து வந்தவர்; அரசியல் அறிவும் சூழ்ச்சித் திறமும் படைத்தவர். அவர்தம் சொல்லை ஒரு நாளும் தட்டி நடக்கமாட்டார் வீர சிவாஜி. அவருடைய சொல்லும் ஒருபோதும் பழுதாவதில்லை. சிவாஜியுடன் பிறந்தவர் இருவர். வெங்கோஜி என்பவர் மூத்தவர்; சந்தோஜி என்பவர் இளையவர். அண்ணன் வெங்கோஜி தஞ்சையரசராக விளங்கினுர். அப்பொழுது மூவருக்கும் உரிமையுள்ள குடும்பச் சொத்துக்களெல்லாம் வெங்கோஜி பொறுப்பிலே இருந்த போதிலும், மேற்பார்த்து வரும் அலுவலை இரகுநாத் பந்து என்பவரே ஏற்று நேர்மையுடன் செய்து வந்தார். அவ்வாறு மேற்பார்த்து வருங்கால் வெங்கோஜி ஒருவிதமான காரணமுமின்றிக் குறை கூறி வந்தார். நேர்மைத் திறமுடைய இரகுநாத பந்திற்கு இச்செயல் வெறுப்பைக் கொடுத்தது. வெங்கோஜி அரசியலிலும் நேர்மையில்லாது நடந்து வந்ததையும் கண்டார். பொறுமைக்கும் ஓர் எல்லையுண்டன்ருே ? ஒரு நாள் இரகுநாத பந்து மிக

விளக்கமாகச் சிவாஜிக்கு ஒரு கடிதம் உய்த்தார். வெங்கோஜியின் செயல்களை அறிந்த சிவாஜி அறிவுரைக் கடிதமொன்றைத் தம் அண்ணனுக்கு அனுப்பி வைத்தார். அதனைப் பெற்ற பிறகும் சிறிதும் பொருட்படுத்தாமல் தம் போக்கின்படியே போய்க் கொண்டிருந்தார். இறுதியாக, வெங்கோஜியினைத் தனியே வரவழைத்துப் பேச்சு நிகழ்த்தியும் பயன் விளையவில்லை. ஆதலால், தஞ்சையைப் படையுடன் சென்று கைப்பற்றுவதே செய்யத்தக்கது என்று துணிந்தார். முதலில் செஞ்சிக் கோட்டையைக் கைப் பற்றினார். எவ்வித இழப்புமில்லாமல் எளிதாகக் கைப்பற்றுவதற்கு இரகுநாத பந்தின் சூழ்ச்சித் திறமையே காரணமாகும். அங்குத் தம் தம்பி சந்தோஜியை அரசராக்கி விட்டுத் தஞ்சையை நோக்கி விரைந்து வந்தார். திருவையாறு என்னுமிடத்தில் படையுடன் தங்கினார். பாசறை அமைப்பதற்குத் தகுந்த காவிரிக்கரை ஊரன்றே? அங்கே போந்து தம்மைப் பார்க்குமாறு தூது விடுத்தார். தம் தந்தையார் வைத்துச் சென்ற சொத்துக்கள் முழுவதையும் வெங் கோஜியே பொறுப்பேற்றுப் பேணி வந்தார். அதனை முழுவதையும் கவர்ந்து கொள்ளும் பேராசை வெங் கோஜியின் உள்ளத்தில் குடிகொண்டது. அதனை யறிந்த சிவாஜி அந்த ஆசைக்கு ஒரு முடிவு கட்டியே தீரவேண்டுமென்று துணிந்தார். அதுவே அவர் வெங்கோஜியை அழைத்ததற்குக் காரணம். வெங் கோஜியோ தம்பியின் சூழ்ச்சியினை அறிந்தார். முகம்மதிய அரசர் சிலரின் தூண்டுதலாலும், கூட்டுற வாலும் சிவாஜியை எதிர்க்கத் துணிந்தார். அவர்

அழைப்பை அவமதித்தார். வெங்கோஜிக்கு நாயக்க அரசரும், மைசூர் மன்னரும் வேண்டும்போது படை யுதவுவதாக வாக்களித்திருந்தனர். அச் செய்தியை அறிந்த இரகுநாத பந்து சிவாஜிக்குத் தெரிவித்தார். நாயக்கருக்கும் மைசூர் மன்னருக்கும் மிகுந்த பொருளைக் கொடுத்துத் தஞ்சையரசருக்கு உதவி செய்யாதவாறு தடுத்துவிட்டார். அதனால் வெங் கோஜியின் நிலை இரங்கத்தக்கதாக ஆயிற்று. சிவாஜியைச் சந்திக்க வெங்கோஜி சென்றார். தம்பி யும் அண்ணன் வருகை கண்டு மகிழ்ந்தார். இருவரும் இருபது நாட்கள் தொடர்ந்து உரையாடியும் நல்ல தொரு முடிவிற்கு வரவில்லை. வெங்கோஜியின் பேராசையை அறிந்த சிவாஜி மிகவும் வருத்தப் பட்டார். அண்ணல் கவர்ந்து கொண்ட பெரும் பொருளை வற்புறுத்தி வாங்கிக்கொண்டார். அவரைச் சிறையிலும் தள்ளினார். கொள்ளிடத்திற்கு வடக்கே யுள்ள பகுதிகளையும் பிடித்துக் கொண்டார். சந் தோஜியையும் இரகுநாத பந்தையும் பொறுப்பாக வைத்துவிட்டு முகம்மதியப் படையெடுப்பைத் தடுத்து நிறுத்துவதற்கு வடக்கே சென்றார். சிவாஜி வடக்கே படையுடன் சென்றுவிட்டார் என்பதை யறிந்த வெங் கோஜி தமக்கு நல்ல வாய்ப்புக் கிடைத்தது என மகிழ்ந்தார். சிறையிலிருந்தும் தப்பி ஒரு படை யினைச் சேர்த்துக்கொண்டு செஞ்சிக் கோட்டை சென்றார். தம் தம்பி சந்தோஜியையும், துணையாக இருக்கின்ற அமைச்சர் இரகுநாத பந்தையும் தொலைத்து விடுவதே சாலச் சிறந்தது என்று எண்ணினார். 1677-ஆம் ஆண்டிலே படை புறப்

பட்டுச் சென்றது. செஞ்சிப் படையும் தஞ்சைப் படையை எதிர்த்துப் போரிட வந்தது. இரு சேனை களுக்கும் கடும்போர் நிகழ்ந்தது. இரு பக்கத்து வீரர் களும் பின்வாங்காது நெடுநேரம் போரிட்டனர். இறுதி யில் சந்தோஜிக்கே வெற்றி கிடைத்தது. வெங்கோஜி மனமுடைந்து படையுடன் திரும்பினார். வெங்கோஜி செஞ்சியைப் படையெடுத்த செய்தி சிவாஜிக்கு அறி விக்கப்பட்டிருந்தது. அது கேட்டு வியப்புற்று அமைச் சர் இரகுநாத பந்திற்கு ஒரு கடிதம் உய்த்தார். வெங் கோஜிக்குப் பத்தொன்பது திட்டங்கள் அடங்கிய கடிதம் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டது. அவற்றைப் பார்த்து இசைந்த வெங்கோஜி மிகுந்த செல்வத்தைக் கொடுத்துவிட்டு மீண்டும் தஞ்சைக்கு அரசரானார்.

சொக்கநாத நாயக்கர் தஞ்சையரசு மகாராஷ்டிரர் கையில் சிக்கியதால் தமக்கு எப்போதும் தீங்கு வரலாம் என்பதைப் பின்னரே உணர்ந்தார். காலம் வாய்க் குமோ என்ற கருத்துக்கொண்டே இருந்தார். சந்தோ ஜிக்கும் வெங்கோஜிக்கும் ஏற்பட்ட போரைப் பயன் படுத்திக் கொள்ள நினைத்தார். தஞ்சையைத் தாக்கும் பொருட்டுப் பெரும் படையுடன் சென்றார். அப் பொழுது செஞ்சிக்கோட்டைமீது படையெடுத்துச் சென்ற வெங்கோஜி தம் தம்பி சந்தோஜியுடன் போர் செய்து வெற்றிபெறுமல் திரும்பி வந்துகொண் டிருந்தார். அதைத் தொடர்ந்து சிவாஜி அனுப்பிய திட்டப்படி சமாதானம் ஏற்பட்டு முடிவடைந்தது. இருவரும் ஒற்றுமை எய்தியதை அறிந்த சொக்க நாதர் படையுடன் திருச்சிக்கே திரும்பவேண்டிய நிலை ஏற்பட்டது. ஆதலால், தஞ்சைப் படையெடுப்பு

வீணாக முடிந்தது. தென்னாட்டில் மகாராஷ்டிரர் மிக்க வலிமையுடையவராக விளங்கினார்கள்.

சொக்கநாதரின் தஞ்சைப் படையெடுப்பால் பொருட் செலவு மிகுதியாக ஏற்பட்டிருந்தது. செல வழித்ததற்குத் தக்க பயன் ஒன்றும் விளையவில்லை. மக்கள் இதனை அறிந்தனர். மன்னனின் அரசியல் திறமின்மையே காரணமென இகழத் தொடங்கினர். இதற்கிடையில் காலம் பார்த்துக்கொண்டே இருந்த மைசூர் அரசரும் நாயக்கருக்குச் சொந்தமான இரு நகரங்களையும் எளிதாகக் கைப்பற்றிக் கொண்டார். இந்தக் காரணத்தாலும் மக்கள் நாயக்கரைக் குறை கூறத்தொடங்கினர். இச் செய்திகள் காட்டுத் தீப் போல் எங்கும் பரவிவிட்டன. மக்கள் சக்தியின் முன் மன்னன் எம்மாத்திரம்? சொக்கநாத நாயக்கர் அரச பீடத்தினின்றும் தள்ளப்பட்டார். அவர் தம்பி முத்து லிங்க நாயக்கர் அரசராக ஆக்கப்பட்டார். சொக்க நாதரைச் சிறையிலும் வைக்கும்படியான அவல நிலை யும் ஏற்பட்டது! குழந்தையையும் மனைவியையும் நினைந்து வருந்திக் கண்ணீர் சிந்தினார். கணவனுக்கு நேர்ந்த விதியை நொந்து வேதனைப்பட்டாள் மங்கம் மாள். இறைவனைத் தொழுவதினும் தமக்கு வேறு வழி யில்லை என்று எண்ணினாள். நாடோறும் தொழுது வந்த அவளை இறைவன் கைவிடவில்லை. மறுபடியும் சொக்கநாதர் அரியணை அமரும் பேறு கிடைத்தது. அஃது எவ்வாறு எனக் காணின் வியப்புண்டாகும்.

முத்துலிங்க நாயக்கர் மக்களால் அரசராக்கப் பட்டாரன்றோ? அவர் ஆட்சி செய்தபோது அரசிய

லில் முன்னேற்றம் சிறிதும் காணப்படவில்லை. எங்கும் நேர்மைக் குறைவும் குழப்பமுமே மிகுந்திருந்தன. நாடு முழுதும் பஞ்சமுண்டாகியது. அதற்குக் காரணம் மழை பருவம் தவறிப் பெய்ததால் பெருகிய வெள்ளப் பெருக்கேயாம். வெள்ளத்தால் ஏற்பட்ட அழிவைச் சொல்ல வியலுமோ? வறுமை தலைவிரித்தாடியது. மக்களிடையே புரட்சிப் புயல் தோன்றியது. அப்பொழுது நாட்டில் உண்டாகிய குழப்பத்தையும் வறுமையையும் காரணமாக வைத்துக்கொண்டு வந்தான் முகம்மதிய வீரன் ரஸ்டம்கான் என்பவன். அவன் மிக்க வீரமும் தக்க புகழும் உடையவன். நாயக்க அரசைக் கவிழ்க்கச் சூழ்ச்சி செய்தான். முத்து லிங்க நாயக்கரை அரச பீடத்திலிருந்து இறக்கி விட்டான். சொக்கநாதரை விடுவித்து அரியணை ஏற்றினான். மக்களிடமும் சொக்கநாதரே அரசர் என்பதையும் அறிவித்துவிட்டான். ஆனால், ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் தானே பார்த்துக்கொண்டு அரசனைத் தன் விருப்பப்படி ஆட்டுவித்து வந்தான். சொக்கநாதர் அரியணை அமர்ந்தமை கண்ட அம்மையார் கவலைக் கடலிலிருந்தும் நீங்கினார். இறைவனுக்கும் நன்றி தெரிவித்துக்கொண்டார். இன்பமும் துன்பமும் சகடக்காற் போல வருவதல்லவா?

சொக்கநாத நாயக்கர் பொம்மை யரசராகவே இருந்தார். முகம்மதிய வீரன் ரஸ்டம்கான் இரண்டாண்டுகள் அவரைப் பெயருக்கு அரசராக வைத்து ஆட்சி செய்தான். எனினும், அரசியலில் ஒரு சிறு முன்னேற்றமும் ஏற்படவில்லை. ஆதலால், சொக்க

நாதரைத் தம் போக்கிற்கெல்லாம் உட்படுமாறு செய்து கொடுமை புரிந்தான். ரஸ்டம்கானின் திறமைக் குறைவையும் உள்நாட்டுக் குழப்பத்தையும் மைசூர் மன்னர் நன்கு அறிந்துகொண்டார். திருச்சிக் கோட்டையை முற்றுகையிட ஒரு பெரும் படை மைசூரிலிருந்தும் புறப்பட்டு வந்தது. மைசூர் அரசர் திருச்சியைக் கைப்பற்றினால் தென்னாடு முழுதும் அடி பணிய வேண்டிவரும் என்று எண்ணினர் சிலர். சொக்கநாதரைக் கொடுமைப் படுத்தும் ரஸ்டம்கானை நாட்டைவிட்டு ஓட்டத் திட்டமிட்டனர். தளவாயும், சேதுபதியும், சில குறுநிலத் தலைவர்களும் ஒருங்கு கூடினர்; பெரும் படை சேர்த்தனர்; எதிர்பாராத வண்ணம் ரஸ்டம்கானையும் அவனுடைய தோழர்களையும் கொன்றொழித்தனர். ரஸ்டம்கானின் கொடுமையிலிருந்து தப்பிய சொக்கநாதரே மீண்டும் அரசுரிமை பெற்றார்; தமக்கு உற்ற காலத்தில் உதவிய கிழவன் சேதுபதிக்குப் 'பரராச கேசரி' என்ற பட்டமளித்தார்; அன்றியும், தம்பால் உண்மையாக இருந்த குமார பிள்ளை என்பவரையும் சேதுபதியின் தளவாயாகப் பணி புரியுமாறு செய்தார். சொக்கநாதருக்கு இறுதிக் காலம் வரையிலும் அரியணையிலமரும் பேறு கிடைத்ததே தவிர, வாழ்வில் இன்பமில்லை. அரசர் குடியிலே பிறப்பதினும் ஏழைக் குடியிலே பிறப்பது இனிது என்று கருதி வருந்தினார். ஏனெனில், நாட்டிலே நிகழும் எத்தகைய தீமைகளுக்கும் மக்கள் அரசனையே குறைகூறுவார்கள். மன்பதை காக்கும் நன்குடிப் பிறத்தல் துன்பமல்லது தொழுதகவில்லை என்பதை உணர்ந்தார் போலும்!

சொக்கநாதர் வாழ்வின் முற்பகுதி மிகவும் சிறப்புற்று விளங்கியதன்றோ? அவர் வாழ்வின் பிற்பகுதி மிகவும் வருந்தும் நிலையில் அமைந்துவிட்டது வியப்பேயாம். தம் நாட்டின் பெரும்பாலானபகுதிகளை இழந்து விட்டதால் திருச்சிக்கோட்டை ஒன்றே எஞ்சியது. சீரும் சிறப்புமாக வாழ்ந்த நாயக்க மரபு சீர் குலைந்து ஒரு சிறு கோட்டைக்குள் ஆட்சி செலுத்தும் நிலை வந்ததே என்று ஏக்கமுற்ருர். அரசராக இருந்தாலும் அவர் மனநிலை மகிழ்வென்பதையே அறியாமல் இருந்தது. இந்தச் சமயத்தில் திருச்சியையும் மைசூர்ப் படைத் தலைவன் குமாரையா முற்றுகையிட்டான். சொக்கநாதரே ஒன்றும் செய்ய இயலாமல் செஞ்சி அரசரையும் தஞ்சை மன்னரையும் உதவி செய்ய வேண்டினுர். சேதுபதியும் உதவி செய்யும் பொருட்டு ஒரு படையினை அனுப்பி வைத்தார். இவர்கள் மூவரும் இறுதிவரை நின்று உதவுவார்களோ என்ற ஐயம் அரசருக்கு எழுந்தது. எனினும், செஞ்சி, தஞ்சை அரசர்கள் இருவரும் தங்களுக்கும் வரவிருக்கும் தீங்கை எண்ணிப் பார்த்து உதவ முன் வந்தனர்; சொக்கநாதருடன் ஒப்பந்தமும் செய்து கொண்டனர். அவர்களைத் தளவாய் குமாரையா போரில் உதவி செய்யாதவாறு பிரித்துவிடச் செய்த சூழ்ச்சிகள் யாவும் பயனற்றுப் போயின. தளவாய் மைசூருக்குத் திரும்பிச் செல்வதைத் தவிர வேறு வழியில்லை. இதே நேரத்தில் செஞ்சிப்படைத் தலைவர் அரசுமலை மைசூர்ப் படை வீரர்களைத் தாக்கி முறியடித்தார். தளவாய் குமாரையாவையும் விலங்கிட்டுக் கொணர்ந்தார். முன்னர் மைசூர் அரசர் கைப்பற்றிக்

கொண்ட சில இடங்களை மீண்டும் பிடித்துக்கொண்டார். அரசுமலைக்கு வெற்றிமேல் வெற்றி கிடைத்தது ! அதனால் செருக்குற்று, முன் செய்த ஒப்பந்தத்தையும் காற்றிலே பறக்கவிட்டுச் சொக்கநாதரை எதிர்க்கச் சென்றார்; திருச்சியை முற்றுகையிட்டார். நம்பியவனை நட்டாற்றில் கைவிட்ட கதையாயிற்று ! என் செய்வார் நாயக்கர்? ஆயிரந் தேள் மண்டையில் மாட்டியது போல் துடித்தார். துன்பத்திற்குமேல் துன்பம் அடுக்கி வருவதை அவரால் பொறுக்க முடியவில்லை. அவர் துன்பக்கடலில் மூழ்கிவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். அதுவே அவர் உயிரை ஒரு நொடிப்பொழுதில் பிரித்துவிட்டது. மங்கம்மாள் சோகத்தில் ஆழ்ந்தாள். ஆற்றுவார் யார்? கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்லையன்றோ? திருமணமாகி எட்டு ஆண்டுகள் கடந்தன. அவற்றுள் ஓராண்டுகூட இன்பமாகத் தம் கணவனோடு வாழும் பேறு இல்லையே என எண்ணி எண்ணி மாழ்கினாள். கணவனோடு உயிர் துறக்கும் வழக்கம் அக்காலத்திலிருந்தது. கணவன் இறந்தபோது உடன்கட்டை ஏறி உயிர் போக்காதாரை உலகம் இழித்தும் பழித்தும் கூறிய காலம். கணவனைத் தெய்வமாகக் கருதி ஒழுகிவந்த மங்கம்மாள், தம் அருமந்தன்ன மகன்பொருட்டு வாழ வேண்டியதாயிற்று. அழகு தவழும் இளங் குழவியை எந்தத் தாய்தான் விடுத்து இவ்வுலகை நீத்தற்குத் துணிவாள்? ஆகவே, மங்கம்மாள் உயிரோடு வாழ வேண்டியது இன்றியமையாததாயிற்று. சொக்கநாதரின் அருமைப் புதல்வன் ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் பட்டத்திற்கு உரியவரானார்.

அவரைப் பட்டத்தில் பெயருக்கு அமர்த்திவிட்டுத் தாமே நாட்டின் வளர்ச்சியிலும், அரசியல் அலுவல்களிலும் மிகுந்த பொறுப்பேற்று நடத்தி வந்தார். கணவன் இழந்துவிட்ட பரந்த நாட்டை என்று காண்போம்; அடைந்து மகிழ்வோம் என ஏக்கமுற்று வாழ்ந்து வருவாராயினர். அந்த எண்ணம் பெண்கள் உள்ளத்தில் தோன்றிவிட்டால் நிறைவேற்றுதல் அரிதாமோ?

சொக்கநாத நாயக்கர் சொல்லொணு அரசியல் அலைகளால் தாக்குண்டு உள்ளம் உடைந்து உயிர் துறந்தாரன்ருே? அப்பொழுது அவருடைய மகன் ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்பர் இளமை நிரம்பாதவர். எனினும், தந்தை இறந்த 1682-ஆம் ஆண்டிலே அரியணை ஏறினர். அவர் பட்டம் பெற்றபோது நாட்டிலே மிகுந்த குழப்ப நிலையே குடிகொண்டிருந்தது. நாயக்க நாட்டின் பெரும் பகுதிகள் மைசூர் மன்னருக்கும், தஞ்சை யரசருக்கும், சேதுபதிக்கும் உரிமையாகி அவர்கள் நாட்டோடு சேர்ந்துவிட்டன. மதுரை மாநகரும்கூட எதிரிகள் கையிலேயே சிக்கியிருந்தது என்ருல், நாட்டின் நிலைமையை என்னென்று சொல்வது! இந்தச் சூழ்நிலையில் அரசை ஏற்பதற்கு யார்தான் முன் வருவார்? ஆனல், மன ஊக்கத்தோடு பட்டம் ஏற்ருர் சொக்கநாதர் மைந்தர். 'ஆக்கம் அதர் விணுஅய்ச் செல்லும் அசைவிலா ஊக்கமுடையான் உழை' என்ருர் வள்ளுவப் பெருந்தகை. அம் முறைக்கிணங்க, பகைவர்களின் தன்மையை ஆராய்ந்துகொண்டே யிருந்து தம் ஊக்கத்தையும் கைவிடாது ஆட்சியை நடத்தி வந்தார். அரசருக்குப்

பல நல்வாய்ப்புக்கள் தாமே தேடி வந்து சேர்ந்தன. அவற்றைத் தக்கவாறு பயன்படுத்திக் கொண்டமை பாராட்டத்தக்கது. முதலாவதாக, மைசூர் மன்னரும் தஞ்சை யரசரும் மதுரை மாநகரைத் தத்தம் முயற்சி யால் அடைவதற்கு எண்ணினர். மைசூர் அரசர் மதுரையைக் கவர்ந்துகொண்டார். நீண்ட காலமாக அவர் உரிமையாக வைத்திருப்பதைத் தஞ்சை யரசர் கண்டார்; அவர்மீது பொருமை மிகக் கொண்டார். மதுரை மாநகர் கலையிலும் நாகரிகத்திலும், செல்வத் திலும் வணிகத்திலும், அரசியலிலும் அமைப்பிலும் ஒருங்கே சிறந்து விளங்கியதன்ருே? ஆதலால், தஞ்சை யரசர் மைசூர் அரசரோடு போர் தொடுத்தார். இரு பக்கத்துச் சேனைகளும் மிக்க வீரத்தோடு போரிட்டன. இந்த வேளையில் சேது நாட்டு மறவ வீரர்கள் மைசூர்ப் படைக்கு உதவி செய்தனர். இதனல் மைசூர்ப் படைக்குச் செலவு மிகுதியாயிற்று. தம் படை வீரர்களுக்கும் செலவழித்த பொருளும் அளவில்லாதன. தவிரவும் மைசூரிலிருந்து வீரர்கள் முனிவர்கள் வேடந் தாங்கி மதுரை வந்தனர். அவர் களைப் படையில் சேர்த்துப் போரிட வேண்டிய நிலை ஏற்பட்டது. இவ்வளவு பொருட் செலவும் முயற்சியும் செய்தும் மைசூர்ப் படை தஞ்சைப் படையிடம் எதிர்த்து நிற்க மாட்டாமல் பின்வாங்கியது. மைசூரிலும் உள்நாட்டுக் குழப்பம் எழுந்தது. மக்களை விலங்கினும் கேடாக மதித்து வேட்டையாடினன் மன்னன். எண்ணற்றவர் இறந்துபட்டனர். மலை களிலும் காடுகளிலும் சென்று ஒளிந்துகொண்டோர் பலர். எனவே, மைசூர் அரசன் மதுரையைப்பற்றி

நினைக்கவே முடியாது போயிற்று. நாயக்கர் மீது மைசூர் அரசன் கொண்ட பகைமையும் தானே ஒழிந்து விட்டது.

தஞ்சையை மகாராஷ்டிர அரசர் ஆண்டு வந்தா ரன்றோ? அவரும் தம் சொந்தக் காரியங்களிலே மிகவும் ஊக்கமாக இருந்து வந்தார். அவர் நாட்டுக் குடிகளுக்குச் செய்த கொடுமையினால் அங்கும் குழப்பம் உண்டாகியது. சேதுநாட்டு மறவர்கள் தஞ்சை யரசருக்குச் சொந்தமான சில இடங்களையும் கைப்பற்றிக் கொண்டனர். ஆதலால், மதுரையைப் பொறுத்த அளவில் தஞ்சை யரசரும் கருத்துச் செலுத்த முடியவில்லை. நாயக்கருக்கு மகாராஷ்டிர ரால் விளைந்த தொல்லையும் தானே நீங்கிவிட்டது.

நாயக்கருக்கு மறவ நாட்டின் பகை இருந்து வந்தது. அப் பகையும் தானே ஒழிவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. மறவ நாட்டின் அரசராக இருந்தவர் கிழவன் சேதுபதி. சொக்கநாத நாயக்க ருக்கு முகம்மதிய வீரன் ரஸ்டம்கான் இழைத்த கொடு மையைப் போக்கிப் பரராசகேசரி என்ற பட்டமும், தளவாயாகக் குமார பிள்ளையையும் பரிசாகப் பெற்ற சிறப்புடையவர். அதன் காரணமாகத் தம்மை ஒரு பேரரசர் போன்று கருதிச் செருக்குற்றிருந்தார். அன்றியும், நாயக்க அரசினையே கவிழ்ப்பதற்கும் முயற்சி செய்தார். தமக்குத் துணையாகத் தளவாய் வேங்கடகிருஷ்ணப்பரையும், தஞ்சை யரசராக விருந்த செங்கமல தாசையும் சேர்த்துக்கொண்டார். தளவாய்

வேங்கட கிருஷ்ணப்பர் மதுரை நாயக்க மன்னரிடம் அலுவல் புரிந்தவர். செங்கமலதாசர் தஞ்சை யரசராக இருந்து நாட்டை இழந்துவிட்டவர். இவ்விருவரும் தங்களுக்கு மீண்டும் பதவி கிடைக்காதா என்று ஏக்க முற்று இருந்த நிலையில் சேதுபதி அவர்களைத் தமக்குத் துணைபுரியுமாறு கேட்டவுடன் மறுக்காது மனமுவந்து இசைந்தனர். அம்மூவரும் ஒருங்கு சேர்ந்து மதுரையைத் தாக்க முடிவு செய்தனர். இம் முடிவைச் சேதுபதியின் தளவாய் குமாரையா அறிந்தார். சேதுபதியின் நன்றி மறந்த தன்மையைக் கண்டு வருந்தினார். மூவரை நாயக்க ரிடத்திலே ஒப்படைத்துச் சிறைப்படுத்தக் கருதி அதற்குரிய சூழ்ச்சிகளைச் செய்ய முனைந்தார். தளவாயின் சூழ்ச்சி சேதுபதிக்கு எவ்வாறோ எட்டி விட்டது. ஒரு சிறிதும் காலம் தாழ்க்காமல் தளவா யைக் குடும்பத்தாருடன் சிறைப்படுத்தினார். அனைவ ரையும் யாரும் அறியாவண்ணம் கொன்றுவிடுமாறு ஆணையிட்டார். இரக்கமென்றொரு பொருளிலாத அரக்கராயினார் சேதுபதி. இந்த அவலச் செய்தி ஊரெங்கும் காட்டுத் தீப்போல் பரவியது. நாயக்க அரசருக்கும் எட்டியது. நாயக்க அரசர்களிடத்தே நன்றியுடைய தளவாய் குமாரையா தம் குடும்பத் தாருடன் இரக்கமின்றிக் கொல்லப்பட்டதை எண்ணி நடுங்கினார். உடனே படை புறப்படட்டும் என்று ஆணையிட்டார். மறவ நாட்டிற்கு விரைந்து சென்ற படையைத் தஞ்சைப் படையும் மறவர் படையும் எதிர்த்தன. கடுமையான போருக்குப் பின் மதுரைப் படை பின்வாங்கியது. வெற்றி சேதுபதிக்கே

ஆயிற்று! சேதுபதி தமக்கு உதவிபுரிந்த தஞ்சை யரச ருக்குப் புதுக்கோட்டை முதலிய நாடுகளை வழங்கினார். சேதுபதியோ அப்போர் வெற்றியின் மகிழ்ச்சியில் திளைத்திருந்தார். ஆகவே, மதுரை மாநகர் எவ்விதத் தீங்கிற்கும் இடமில்லாமலும்,பகைவர் வசப்படாமலும் தப்பும்படியான சூழ்நிலை ஏற்பட்டது.

நாயக்க அரசர் இந்தப் போரினைப்பற்றி மிகுந்த கவலைகொள்ளவில்லை. சிறிது சிறிதாக நாடுகளைப் பிடித்துப் பழைய நாயக்க அரசை நிறுவ முயன்றார். அதற்குக் காரணம் அவருடைய அஞ்சாமையும் அரசியல் அறிவும் எனச் சொல்லலாம். தம் குடிகளுக்கு வேண்டும் நன்மைகளைச் செய்துவந்ததாலும், நாட்டை இடையிடையே நேரில் சென்று கண் காணித்துப் போந்ததாலும் ஸ்ரீரங்க கிருஷ்ணப்ப நாயக்கரைப் பற்றிய நல்லெண்ணம் மக்களுக்கு விரைவிலே உண்டாயிற்று. பிற சூழ்நிலைகளும் அவருக்கு ஏதுவாகவே அமைந்தன. நாயக்கர் ஆட்சியில் அமைதியும் இன்பமும் ஒருங்கே நிலவின. தம் தந்தை சொக்கநாதர் இழந்துவிட்ட நாடுகள் அனைத்தையும் தன்னகப்படுத்திவிட்டார். எனினும், முகம்மதிய அரசர் எப்போதும் படையெடுத்து வரலாம். காரணம் யாதெனில், வடநாட்டில் முகம்மதியப் பேரரசர் அவுரங்கசீப் ஆண்டுகொண்டிருந்த காலம். அவ்வரசர் காரணமாக நாயக்கர் வாழ்வில் நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு வியப்புறு நிகழ்ச்சி உண்டு. அது கற்பித்துக் கூறப்பட்டதாகவே தோன்றுகிறது. எனினும், அக் கதை ஓர் உண்மையை வெளிப்படுத்துகிறது என்பதை

வரலாற்று அறிஞர்கள் கூறியுள்ளார்கள். அதனை அறிய வேண்டுவது இன்றியமையாததும் இன்பந் தருவதுமாகும்.

அவுரங்கசீப் முகம்மதியப் பேரரசாக விளங்கினு ரன்ருே? அவர் தம் தலைநகரிலிருந்து அரசனொரு வனைப் படைகளுடன் அனுப்புவது வழக்கமாம். அவ்வரசன் பட்டத்து யானை மீது பாதுஷாவின் செருப்பு ஒன்றை அலங்கரித்து வைத்து ஊர் ஊராகச் செல்வானும். ஒரு நாட்டின் எல்லையைச் சென்று அடைந்தவுடன் அந்த நாட்டு அரசன் தம் நகருக்குள் அழைத்துச் சிறப்புச் செய்வானும். படை வீரர்களனைவருக்கும் விருந்து செய்வானும். அன்றியும் யானை மீது கொண்டுவந்த பாதுஷாவின் செருப்பை வணங்கி, பிறகு தம் அரியணை மீது வைத்து மரியாதை செய்வாளும். வந்தவர்களுக்கெல்லாம் பரிசு வழங்கி அனுப்புவானும். இவ்வாறு ஒவ்வொரு நாட்டு அரசரும் வரவேற்றுப் பணிவது வழக்கமாகும். இம்முறைப்படியே அந்த அரசன் ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கரின் நாட்டெல்லையினை வந்தடைந்தானும். நாயக்கர் அப்பொழுது உடல் நலமில்லாமல் இருந்தாராம். வரவேற்பதற்குச் செல்லவில்லையாம். உடனே அந்தப் படையுடன் வந்த முகம்மதிய அரசன் கொள்ளிடக் கரையிலே உள்ள சமயபுரம் என்ற இடத்தில் தங்கி தம்மைக் காண வேண்டுமென்று நாயக்கருக்கு ஆள் போக்கினும். அரசரோ அச் செய்தியைக் கேள்வியுற்றும் செல்லாது இருந்துவிட்டாராம். தம்மை நாயக்கர் மதிக்கவில்லை என்று கோபமும் வெறுப்புங்

கொண்ட அப்படை திருச்சிக்குள் நுழைந்ததாம். நாயக்கர் வீற்றிருக்கும் அரச மண்டபத்திற்குச் செருப்பையும் எடுத்துக்கொண்டு சென்றார்களாம். அவ் வமயத்திலும் நாயக்கர் சிம்மாசனத்தில் செம்மாந்து வீற்றிருந்தாரே யல்லாமல் அவர்களைச் சிறிதும் மதிக்கவில்லையாம். அதனைக் கண்டும் ஒன்றும் செய்ய வியலாமல் செருப்பை அவன் இருப்பிடம் சென்று கொடுத்தார்களாம். அதனைக் கையிலே வாங்கி வீசி யெறிந்து தம் வெறுப்பைக் காட்டினாராம். மீண்டும் அதனை வாங்கித் தன்னொரு காலில் மாட்டி, 'எனக்கு இரண்டு செருப்புகள் வேண்டும் என்பதை உங்களின் அரசன் மறந்துவிட்டானோ?' என்று இகழ்ந்து பேசினாராம். இவ்வளவையும் பொறுக்க முடியாது புண்பட்ட முகம்மதிய வீரர்களின் குருதி கொதிப்பேறியது. ஒரே சமயத்தில் ஆயிரந் தேள் மண்டையில் மாட்டியது போல் மனம் துடித்தார்களாம். அந் நிலையிலும் அவர்களை வெளியே தள்ளுமாறு ஆணையிட்டார் நாயக்கர். அவ்வளவுதான்! அனைவரும் தாங்களாகவே வெளியே சென்று போருக்கு ஆவன செய்தனர். அதனை யறிந்த நாயக்கர் தம் படை வீரர்களை ஏவித் துரத்தி விடுமாறு கூறினாராம். படைகள் பாய்ந்து சென்றன. பகைவர்களோ உயிர் பிழைத்தால் போதும் என்று எண்ணித் தாம் வந்த திக்கை நோக்கித் திரும்பிப் பாராமல் ஓடிவிட்டனர். தாம் பட்ட துன்பத்தை ஒன்றுவிடாமல் பாதுஷாவிடம் உரைத்தனராம். நாயக்கர் தங்கட்குச் செய்த இழி செயல்களையும் கூறி நின்றனராம். அத்தனையுங் கேட்ட அவுரங்கசீப் அகந்தைக்குப் பரிசு

இதுதான் என்று உணர்ந்தவராய் வாளாவிருந்து விட்டாராம்.

இந்த நிகழ்ச்சி நடந்ததாகக் குறிப்பிடுவது நாயக்கர் ஆட்சியின் இறுதியிலாம். அப்பொழுது அவுரங்கசீப் போரிலே கருத்துக் கொண்டிருந்தார் என்பது அறியக் கிடக்கின்றது. அவர் பீஜப்பூர், கோல்கொண்டா அரசுகளைக் கைப்பற்றக் கடும் முயற்சி செய்தார்; வெற்றியும் பெற்றனர். 1686-ஆம் ஆண்டில் பீஜப்பூரையும், 1687-ஆம் ஆண்டில் கோல் கொண்டாவையும் தம் நாட்டோடு சேர்த்துக்கொண் டார். அதன் பிறகும் மகாராஷ்டிர அரசரோடு போர் தொடுக்க வேண்டியதாயிற்று. 1689-ஆம் ஆண்டிலே மகாராஷ்டிரப் படையும் முகம்மதியப் படையும் சந்தித் துப் போர் செய்தன. பல மாதங்கள் நடைபெற்றும் வெற்றி யாருக்கும் கிடைக்கவில்லை. துஞ்சும் போதும் தம் சொந்த நாட்டை மறவா நெஞ்சர்களல்லவா மகா ராஷ்டிரர்? ஆகவே, அவுரங்கசீப் சில இடங்களைக் கைப்பற்றியதோடு போரை நிறுத்திக் கொண்டார். இவ்வாறு அவுரங்கசீப் போரிலே ஈடுபட்ட ஆண் டிலேயே பாதுஷா செருப்பினை நாயக்கர் காலில் மாட்டி இழிவுபடுத்தியதாகச் சொல்லப்படும் நிகழ்ச்சி நடந்தாகக் கூறுகின்றனர். பேரரசராகத் திகழ்ந்த அவுரங்கசீப் இத்தகைய வீண் பெருமையை விரும்பி யிருக்க மாட்டார் என்றும், இது கற்பித்துக் கூறப் பட்ட செய்தி என்றும் கூறுவர். எவ்வாறுயினும் ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் முகம்மதிய அரசர்க்கு அடிபணியாது புகழுடன் வாழ்ந்தார் என்ற

உண்மை அறியத்தக்கது. தவிரவும், அவுரங்கசீப் பீஜப்பூர், கோல்கொண்டா அரசர்களுடன் போர் செய்வதில் முனைந்திருந்ததால், நாயக்கர் மீது படையெடுக்க எண்ணவில்லை. ஆகவே, நாயக்கருக்கு நல்ல சூழ்நிலையும் தானே அமைந்தது. அதுவும், அவர் புகழுக்குச் சிறந்த காரணம் என்னலாம்.

ஸ்ரீரங்க கிருஷ்ண முத்துவீரப்ப நாயக்கர் ஏழு ஆண்டுகளே ஆட்சி புரிந்தார். ஆட்சிக் காலம் குறைவாயினும் அவர் செய்த அருஞ் செயல்கள் பல. அரசராக அமர்ந்ததும் மக்களனைவரையும் தம் அன்பால் பிணித்துக்கொண்டார். தந்தை இழந்துவிட்ட நாடுகளை யெல்லாம் மீண்டும் கைப்பற்றி நாட்டை விரிவுபடுத்தினார். அதனால் நாயக்க அரசை மேம்படச் செய்தார். முன்னோர்களின் புகழை யெல்லாம் தனக்கே ஆக்கிக்கொண்டார் என்பது மிகையன்று. அணையப் போகும் விளக்கு ஒளிவிட்டுத் திகழ்வது போல, நாயக்கரும் புகழொளியால் சிறந்து விளங்கி வரும்போதே அம்மைப் பிணியுற்று இம்மை வாழ்வை நீத்தார். அவர் இளமைக் காலத்தே உயிர் நீத்தமை பற்றி வரலாற்றுப் பேராசிரியர் குறிப்பிடுவதாவது: 'நாயக்கர் தொடர்ந்து ஆட்சி புரிந்திருப்பாரானால், நாயக்க அரசு ஒரு நாளும் முகம்மதிய மன்னர்க்கு அடிமைப்படாது' என்பதாம்.

நாயக்கர் பிள்ளைப்பேறு காண்பதற்கு முன்னரே இறந்துபட்டது வருந்துதற்குரியதே. அவருடைய அருமை மனையாள் முத்தம்மாள் அம்மையார். கருவுற்றிருந்த காலத்தில் கணவனை இழக்க நேர்ந்ததே

என்று கண்ணீர் மல்கினாள்; கணவனோடு உயிர் போக்குதலே கடன் எனத் துணிந்தாள். கருவிலே யுள்ள கண்மணியையும் நினைந்தாள் இல்லை. கரு வுற்றிருப்பதால் உடன்கட்டை ஏறல் தகாது எனக் கணக்கற்றவர் போந்து கூறினர். கணவனை யிழந்த வாழ்வு கடைப்பட்ட வாழ்வன்றோ? அதனால் அம்மை யார் எவர் கூறுவதையும் செவியிற் கொள்ளவில்லை. இறுதியாக நாயக்கரின் தாயார் மங்கம்மாளம்மையார் ஒருவாறு தம்மைத் தேற்றிக்கொண்டு மருமகளாகிய முத்தம்மைக்கு ஆறுதல் பகர்ந்தார். 'மகன் பிறந்த பின் விரும்பியது செய்க' என்று வழியும் காட்டினர். கற்பு நிலை குன்றாத அவ்வம்மை மறுத்துரைக்க முடி யாதவாறு மனமிசைந்தாள். பின்னர் மகனைப் பெற்று ஈந்தனள். முன்னர்க் கூறிய வாக்குத் தவறாது உயிரை மாய்த்துக்கொள்ள முனைந்தனள். ஆனால், உயிர் துறப்பதற்கு வேண்டிய ஏற்பாட்டைச் செய்ய ஒருவரும் வரவில்லை. மைந்தன் பொருட்டு மீண்டும் முத்தம்மை வாழ வேண்டுமென்றே யாவரும் எண்ணி னர். ஆனால், அம்மை மனம் அதற்குச் சிறிதும் இடந்தரவில்லை. பெண்ணைத் தெய்வமாகக் கருதும் மக்கள் எவ்வாறு இச் செயல் செய்ய ஒருப்படுவார்? பழங்காலப் பெண்கள் கணவனோடு வாழும்வரை யுமே வாழ்வு என்று நம்பி வந்தனர். அதன்படி கணவன் இறந்ததும் அவன் உடம்பை எரிக்க மூட்டிய தீயிலேயே மூழ்கி மகிழ்வுடன் இறப்பர். போரிலே கணவன் இறந்துபட்டானென்றால் அவன் உடலைத் தேடிக் கண்டு தழுவி அவனுடனே உயிர்

போக்குவர். அவன் உடலைக் காண வியலாதபொழுது தாங்களே தீ வளர்த்துக் குதித்து உயிர் நீப்பர். கணவன் இறக்கும்போது இளங் குழந்தையை உடையவளாயின், அக் குழந்தையை வளர்க்கும் பொருட்டு உயிர் வாழ்வதுண்டு. வாழ்க்கையில் நல்லுணவு கொள்ளாது, நல்லாடை அணிகலன் பூணாது அடங்கி வாழ்வர். கைம்மை நோன்பு என்பதும் இதுவேயாகும். கீரையுணவை ஒரு வேளையுண்டு உண்ணாநோன்பிருந்து இறைவனை எண்ணி உடல் மெலிந்து உயிர் போக்குவர். இந்த வழக்கம் தொன்றுதொட்டு வந்ததாகும். இஃதொன்றே பெண்டிரின் கற்பு என்னும் தெய்வத் தன்மை அழியாதிருப்பதற்குரிய வழி என நம்பியிருந்தனர். பழங்காலத்தில் அரசனுடைய மனைவியாயினும் தாம் வாழ விரும்பாமல் கணவன் இறந்த பொழுதே உயிர் நீத்துக் கற்புடைமையைக் காத்து வந்தனர். எடுத்துக் காட்டாக, புறநானூற்றிலே பூதப்பாண்டியன் தேவியார் தீப்பாய்ந்த செய்தியைக் கூறலாம். போரிலே ஈடுபட்டுப் புகழ் பெற்ற வேந்தன் பூதப்பாண்டியன் விழுப்புண் பல பெற்ற வெற்றி வீரன். பகைவர் யானைகளைக் கொன்று வீரர்கள் விடுக்கும் வேல்களைக் கண்டு கண்ணிமைக்காத கருமவீரன். ஒரு தடவை போர் செய்து பகைவர்களை வெட்டி வீழ்த்தி இறந்துபட்டான். ஈமத்தீ எரிந்தது. அவனுடைய தேவி பெருங்கோப்பெண்டு என்பாள். அழகும் திருவும் ஒருங்கே யுடையவள். அரசியை இழக்க விரும்பாத சான்றோர்கள் ஈமத்தீயில் புகுதல் கூடாது எனத் தடுத்தனர். அப்பொழுது அரசியார் கூறிய உருக்க மொழிகள் பெண்டிரின்

கற்புத் திண்மையை உணர்த்துகின்றன. "பழையது உண்டு பருக்கைக் கற்களிலே புரண்டு கைம்மை நோன்பால் வருந்தும் பெண்டிர் அல்லள் யான். எனது கணவனிறந்த பின் எனக்குக் குளிர்ந்த பொய்கையும் தீப்படுக்கையும் ஒன்றுதான். பிணப் படுக்கையை எனக்கு அளிப்பது உங்கட்கு அரிது போலும்! நின் தலைவனோடு இறந்து போவென்று சொல்லுவதை விட்டு உயிர் வாழ்ந்திரு எனக் கூறுவது வியப்பும் வெறுப்பும் உடையதாகவுள்ளது" என்பதாம். இந் நிகழ்ச்சியானது பெண்டிர் கண வனை இழந்த பின் உயிர் வாழார் என்பதைத் தெளி வாக்குகின்றதன்றே? இவ்வாறே நாயக்கர் மனைவி முத்தம்மையும் இளமையிலேயே கைம்பெண்ணாக வாழ்வதைவிட இறப்பதே மேல் எனக் கருதியதும் பொருத்தமேயாம். பெண்குலம் பின்பற்றி வந்த தீப் பாய்தலையே அவ் வம்மையும் விரும்பியது யாவரும் ஒத்துக் கொள்ளக்கூடியதே; ஆனல், கருவுற்ற பெண்டிர் அவ்வாறு உயிர் போக்குவது அறமாகாது. பெண்கள் மட்டுமன்று; ஆடவரும் தம் மனைவியர் கருவுற்ற போழ்தில் உயிர் போக்கிக் கொள்வதும் அறமாகாது. ஆடவரே தடைப்படுத்தப் படும்போது பெண்டிரை உயிர் துறக்க யாரே ஒப்புவர்? சங்க நாளில் நிகழ்ந்த ஒரு வியப்புறு செய்தியே அதற்குச் சான்ருகும்.

கோப்பெருஞ்சோழன் - பிசிராந்தையார் என்னும் பெயர்கள் தமிழகத்தில் பழகிப்போன பழம் பெயர் கள். சோழ அரசனும் தமிழ்ப் புலவரும் ஆகிய இரு

வரும் நட்பிற்கு உறைவிடமானவர்கள். முன்பின் கண்டு அறியாத இருவரும் ஒரே இடத்தில் நட்பின் பொருட்டு உண்ணு நோன்பிருந்து உயிர் நீத்தனர். அவர்கள் பிரிவிற்குப் பொறுக்கமாட்டாத பல சான்றோர்களும் உயிர் துறந்தனர். சோழ வேந்தனின் அரசவைப் புலவர்களில் ஒருவர் பொத்தியார். அரசர் உயிர் பிரிவதற்கு முன் தம்முயிரை விட்டுவிட முடிவு செய்தார். அனால், அரசன் அவர் முடிவினைத் தடை செய்தான். அதற்குக் காரணம் அப்பொழுது புலவரின் மனையாள் கருவுற்றிருந்ததேயாம். மனையாள் கருவுற்றிருக்கும்போது கணவன் தானே உயிர் போக்கிக் கொள்வது அடாது; அறமும் ஆகாது. ஆதலால், 'புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வா' எனச் சோழன் புலவர்பாற் கூறிவிட்டு உயிர் நீத்தான். புலவரோ மன்னன் கூற்றிற்கு இசைந்து, மகன் பிறந்தபின் மன்னன் நடுகல்லின் அண்மையில் வடக்கிருந்து உயிர் நீத்தார் எனக் காண்கின்றோம். இச் செய்தியை நாயக்கரின் தாயார் மங்கம்மாள் அறிந்திருந்தனர் போலும்! அதனாற்றான் தம் மருமகள் முத்தம்மாளை 'மகன் பிறந்த பின் செல்க' எனக் கூறி இசையுமாறு செய்தார். முத்தம்மையும் மகன் பிறந்ததும் தம்முயிர் போக்க விரும்பினர். ஒருவரும் முத்தம்மை இறப்பதற்கு ஆவன செய்யவில்லை. இளமையும் அழகும் உடைய ஒரு பெண்ணை மகப் பெற்றதும் மறுமையுலகனுப்ப யாரே துணிவார்? இந்த நிலைமையை நாயக்கர் மனைவி அறியாதிருக்க முடியுமோ? 'மகனைப் பெற்ற பின்னரும் மாளாது வாழ்வதா? உரிமை நாயகனை இழந்த பின்னரும் உயிர் வாழ்ந்

தால் உலகம் பழிக்காதா ?' என்று எண்ணி எண்ணி மாழ்கினுள். திடீரென்று ஓர் எண்ணம் புலனுகியது. அதன்படி கருவுயிர்த்த சின்னுட்களிலே குளிர்ந்த நீரைப் பருகினுள். கொடிய குளிர்ச்சி பிறந்தது. கருவுயிர்த்த பெண்ணின் உடம்பைப் பச்சை உடம்பு என்பார்களன்ருே ? அந்த உடம்பிலே குளிர்ந்த நீரும் சேர்ந்தால் என்னவாகும் ? உடம்பு முழுவதும் குளிர்ந்துவிட்டது ; வெப்பமடங்கியது. வெப்ப மிகி னும் தட்ப மிகினும் உயிருக்கு இறுதியே விளையு மன்ருே ? கொழுநனை நினைந்து உயிர் நீத்தாள். கற்புக் கொள்கையைக் காத்த கோதையாள் களங்க மில் புகழுக்கு இருப்பிடமானுள். மங்கம்மாளோ தாய் முகமறியாச் சேயினைக் கண்டு மனந்தளர்ந்தார். எனி னும், நாட்டுப்பற்று அத் தளர்ச்சியினை மாற்றியது. தம் பேரனை வளர்க்கும் பொறுப்பை மேற்கொள்ளச் செய்தது. அவன் ஒருவன் பிழைத்தால் போதும் ; நாயக்க மரபின் புகழ்க் கொழுந்தாக விளங்குவான் என்ற நம்பிக்கை பிறந்தது. அப்பொழுது குழந் தைக்கு மூன்று மாதங்களே ஆயிற்று. அக் குழவிக் குப் பெயரும் முடியும் ஒருங்கே சூட்டி மகிழ்ந்தார். அப் பட்டத்திற் குரிய அரச செல்வமே விஜயரங்க சொக்கநாத நாயக்கர். அவரைப் பெயருக்கு அரச ராக்கி அம்மையே அரசியலை ஏற்று நடத்தும் மாதேவி யாக விளங்கினுர்.மங்கம்மாள் புகழ் பரவுதற்கே மகனை அம்மை நோய் கொண்டது போலும் ! ஆட்சிப் பொறுப்பேற்ற அம்மையார் எவ்வாறு அறமும் அரசியலும் சிறக்க ஆண்டுவந்தார் என்பதைக் காண் போம்.

# 6. மங்கம்மாள் அறமும் அரசியலும்

'அறஞ் செய விரும்பு' என்ற அமுத மொழியை அறியாதார் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இந்த அருமை மொழியை உதவியவரும் ஒரு பெண்மணியே. இதனால் அறியப்படுவதோர் உண்மை ஒன்றுளது. அறம் செய்வதற்கு முதலிலே விருப்பம் வேண்டும். அவ் விருப்பம் ஆணும் பெண்ணுமாகிய இருசாரார் களுக்கும் பொதுவானதே. எனினும், சான்ருண்மை மிக்க ஒளவையார் சொல்லியதிலே ஓர் ஆழ்ந்த கருத்தும் இருக்கவேண்டும். அறம் செய்வதற்குரிய வர்கள் ஆடவரும் பெண்டிரும் என்ருலும், அறஞ் செய்யும் எண்ணம் பெண்கள் உள்ளத்திலே முதலிலே முகிழ்த்து, ஆடவர்களுக்கும் அறஞ் செய்யும் எண் ணத்தைத் தோற்றுவிக்கின்றது. அதன் பிறகுதான் இருவருக்கும் தோன்றிய எண்ணம் செயல்படு கின்றது. ஆகவே, அறம் செய்தல் பெண்களுக்கே உரிமையுடையதாகின்றது. பெண்ணின்றேல் அங்கு அறம் இல்லை என்று அறுதியிட்டுச் சொல்லலாம். அறம் இல்லையாகுல் இம்மை இன்பம் இல்லை. மறுமை இன்பமும் எய்துதல் இயலாது. இதனுற்ருன் இறைவி உமையம்மை முப்பத்திரண்டு அறங்களை உலகிற்குச் செய்தருளியதாகப் புராணத்திலே கூறப் பட்டுள்ளது. அவ் வம்மைக்கும் அறம் வளர்த்த நாயகி எனும் அருமைத் திருப் பெயரும் சூட்டிப் போற்றுப் தும் காண்கின்ருேமன்ருே? அந்த உண்மையை நன்கு உணர்ந்து அறம் வளர்த்த நாயகியாக விளங்

கியவர் நம் மங்கம்மாளம்மை யாவர். அவ்வம்மை எவ்வாறு அறம் வளர்த்துப் புகழ் கொண்டார் என்பதைக் காண்போம்.

1689-ஆம் ஆண்டில் தம் பேரன் விஜயரங்க சொக்கநாதனுக்குப் பட்டமீந்து ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அம்மையார், அவனுக்குத் தக்க பருவம் வரும் வரை தாமே நாட்டை ஆண்டு வந்தார். ஏறத்தாழப் பதினெட்டாண்டுகள் திறமையாகவும் நேர்மையாகவும் ஆட்சி செய்து வந்தார் என்பது வியக்கத் தக்கதே. ஒரு பெண் இவ்வளவு வெற்றியுற ஆண்டதாகத் தமிழக வரலாற்றில் காண்பது அரிது. அதற்குக் காரணம் ஏனைய பெண்ணரசியர் கடைப் பிடிக்காத புது வழியைக் கண்டு ஆட்சி செலுத்தியதே யாகும். அப் புதுவழியே அம்மையார் காலத்திற்கு ஏற்பச் செய்த அறப்பணியாம். மங்கம்மாள் அறத்திலே மிகுந்த நம்பிக்கையுடையவர். 'தருமம் தலை காக்கும்' என்ற தமிழ் மந்திரம் அம்மையாரின் மூல மந்திரம் ஆயிற்று. அறவழி ஒன்றே நாட்டின் அமைதிக்கும் இன்பத்திற்கும் உரியது என்பதை அறிந்தார். தமக்கு முன் ஆட்சி புரிந்த நாயக்க மன்னர்களின் அறச் செயல்களை ஒவ்வொன்றாகப் பார்த்தார். தம் காலத்து மக்களுடைய நிலைமைகளை ஆராய்ந்தார். இவ் விரண்டும் அம்மையாரை ஒரு நல்ல முடிவிற்கு வரச் செய்தன. ஆட்சிப் பொறுப் பேற்றதும் செய்யத் தக்கது அறச் செயலே என்பதை நினைந்தார். அம்மையார் நினைவு எவ்வாறு செயற் பட்டது என்பதை அறியவேண்டுமன்றோ ?

முதலிலே நாட்டின் பல பாகங்களிலும் வாழும் மக்களைப்பற்றி அறிந்துகொண்ட அம்மையார் சில சீர்திருத்தங்களைச் செய்ய விழைந்தார். அம்மையாருக்கு முன்னர் ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் முகம்மதியர் படையெடுப்பால் அல்லலுற்றனர். சில நகரங்கள் பகைவர்களால் பாழ்படுத்தப்பட்டன. கொள்ளையடிக்கப்பட்ட சிற்றூர்கள் அழகிழந்தன. எரியூட்டப்பட்ட ஊர்கள் எழில் அழிந்து இருப்பிடம் மறைந்தன. மக்கள் கொடுமைக்கு ஆளாகி வாழ்விழந்தனர். அவர்கட்கு மீண்டும் நல்வாழ்வு வழங்க எண்ணினார். பாழடைந்த ஊர்களையெல்லாம் ஏட்டில் பதிவு செய்தார். எண்ணற்ற பொருளைச் செலவிட்டுச் செம்மைப்படுத்தினார். மீண்டும் அழகு குடிகொண்டது. அல்லற்பட்டழுத மக்கள் கண்களிலே அன்பு வழிந்தது. இவ்வருஞ் செயலாற்றிய அம்மையாரின் அருளை நினைந்து யாவரும் வாழ்த்தினர். எங்கும் அம்மையாரின் அறச் சிந்தையைப் பற்றிய பேச்சே நிலவியது. இந்த ஒரு செயலோடு அம்மையார் நின்றிருப்பாரானால் இத்துணைப் புகழ் பெறுவாரோ? ஆகவே, மேலும் பல செயல்களைச் செய்யத் துணிந்தார். நாட்டாரும் நல்லெண்ணத்துடன் ஒத்துழைத்தனர். நாட்டிலே அன்பு கொண்டவர்கள் நலிவு வருதலைப் பற்றி எண்ணுவார்களோ? ஆதலால், அம்மையார் மிக்க ஊக்கங்கொண்டு அடுத்தும் ஒரு பெருஞ் செயலைச் செய்தார். அச் செயல்தான் அம்மையாரின் பேரறிவை நாடறியச் செய்தது. அதனைக் கீழே குறிப்பிடுவோம்.

நாட்டில் மக்களுக்குப் போதிய உணவுவேண்டும். அதற்குப் போதிய விளைவு வேண்டும். மிகுந்த நிலங்கள் நாட்டின்கண் இருப்பதாலும் அவைகளைத் திருத்திச் செம்மைப்படுத்த வேண்டும். அப்பொழுது அவரவர் தங்களுக்குரிய நிலங்களிலே கருத்துக் கொண்டு உழைப்பர். உழைப்பிலே ஊக்கங்கொண்டு விட்டால் விளைவிற்குக் குறைவுண்டோ? இல்லையன்றே. ஆகவே, மங்கம்மாள் ஆட்சியின் தொடக்கத்தில் மக்களுக்குப் போதிய நிலங்கள் இல்லை என்பதைக் கண்டார். நாட்டைச் சுற்றி அடர்ந்துள்ள காடுகளை வெட்டிச் செம்மைப் படுத்தினர். வரப்பிட்டுக் கழனிகள் ஆக்கினர். கால்களை வெட்டி நீர்ப்பாசன வசதிகள் செய்தார். சில இடங்களில் ஆழமான கிணறுகளைத் தோண்டி உழவிற்குப் பயன்படச் செய்தார். சில ஊர்களில் பரந்த குளங்களை வெட்டுவித்து நீரைத் தேக்கினர். அவற்றால் பாழ்பட்டுக் கிடந்த நிலங்களெல்லாம் பசுமை தரும் வயல்களாயின. செந்நெல்வயல்கள், செழுங்கரும்புத் தோட்டங்கள், பழமரச் சோலைகள், பசும் புற்றரைகள் யாவும் மக்கள் உழைப்பால் மாட்சிமையுற்று விளங்கின. இந்த அருமைக் காட்சியே அம்மையாருக்குப் பெருவிருந்தாக இருந்தது. நாட்டிற்குச் செய்ய வேண்டிய முதற் கடமையைச் செய்ததாக மனமகிழ்ந்திருப்பரன்றோ?

உழவுத் தொழிலின் மேன்மையைப் பண்டைக் கால அரசர்களுக்குப் புலவர்கள் எடுத்துணர்த்துவது வழக்கம். அரசர்கள் தங்கள் ஆட்சிக்கும் மாட்சிக்கும் உழவர்களே காரணம் என்பதை உணர்ந்து கடமையைச் செய்து வந்தனர். அதனால் நாட்டிலே

நல்வாழ்வு மலர்ந்து மகிழ்ந்திருந்தனர் மக்கள். உழவர்களுக்கு ஒரு சிறு குறை நேரினும் அரசனுக்கு அது பெருங் குறையாகவே காணப்படும். ஏனெனில், உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பதை உணர்ந்தவனன்றோ?

பாண்டியன் நெடுஞ்செழியன் சங்க காலத்து வேந்தன்; வீரத்திற் சிறந்த பேரரசன்; புகழ் மிக்க பெருமகன். அவ் வேந்தனுக்குத் தமிழ்ப் புலவர் அறிவுறுத்திய அமிழ்தினும் சிறந்த தமிழ் உரைகளை நோக்குவோம். "அறிவுடை மன்ன! பரந்த இடத்தையுடையது உனது நாடு. அந் நாட்டிலுள்ள நிலங்கள் மழையை எதிர் நோக்கியே விளையும். நிலம் மட்டும் போதுமென விருத்தல் அறிவுடைமையாகுமோ? நிலங்கள் செழித்தற்கு வேண்டிய நீர் இன்றியமையாததன்றே. ஆகலின், உனது நாட்டில் பல இடங்களில் குளங்கள் தொட்டு நீரினைக் காலத்தே தேக்கிக் கொள். அதுவே மக்கள் உழவு செய்து பயன் விளைக்கப் பெருந்துணை யாகும். உணவைக் கொடுத்தோரே உயிரைக் கொடுத்தோராவர். உன் நாட்டின்கண் வாழும் மக்களாகிய உடம்பிற்கு உணவைக் கொடுத்துக் காப்பாற்றும் இறைவன் நீயன்றோ? அக் கடமையைத் தவறாது செய்பவரே இம்மை மறுமைச் செல்வங்களை யடைவர். நீயும் அவ்வாறு செய்யின் இருமையிலும் உனக்கு வசையிலா வண்புகழ் வந்தெய்தும்" என்பதாம். இஃது எந்த உண்மையைக் காட்டுகின்றது. அரசன் முதலிலே செய்ய வேண்டிய கடமை நாட்டு மக்களுக்கு வேண்டிய உணவை விளைவிப்பதே என்பதன்றோ?

இந்தக் கடமை யுணர்ச்சியை வ்ழுவாமல் கொண்டு ஆட்சி செய்தோர் பலர். அரசர்கள் அவ் வுணர்ச்சியிலிருந்து பிழைபடும்போது அறிஞர்கள் மீண்டும் நினைவுறுத்தித் திருத்துவது வழக்கம். சோழ வேந்தன் கிள்ளிவளவன் பெருங்குணம் படைத்தவன்; மக்கள் நலத்திலே கருத்துக் கொண்டவன். ஒரு முறை அவனுடைய நாட்டில் மழையின்மையால் மக் கள் வரி செலுத்த முடியவில்லை. அவனுடைய அரசி யல் அதிகாரிகள் உழவர்களைக் கொடுமைப்படுத்தி வரி வாங்க முற்பட்டனர். அப்பொழுது நாகனார் என்ற உழவரும் புலவரும் ஆகிய சோழநாட்டுச் சான்றோர் அதனைக் கண்டு மனம் வருந்தினார். நாட் டின் முதுகெலும்புகளாக உள்ள உழவர்களிடம் அர சன் முறை தவறி நடந்து கொள்ளுகின்றானே என எண்ணினார். அதிகாரிகளின் கொடுஞ் செயலை அர சற்குத் தெரிவித்துத் திருத்தக் கருதினார். சோழன் வீற்றிருக்கும் அவைக்களம் சென்றார். அஞ்சாது எடுத்துரைத்த அறிவுரைகள் நினைந்து போற்றத் தக்கன. "வளவ! பகைவர்களைப் போர்க்களத்திலே எதிர்த்துப் போரிடுவோர் உனது வலிமை மிக்க வீரர் கள். அவர்கள் பகைவர்களின் யானைகளை வெட்டி வீழ்த்தி எதிர்த்தோரை முறியடித்து வீரப் பண் பாடி வரும் வெற்றி யாருடையது? அந்த வீரர்க ளுடையதோ? அன்று. உனது நாட்டிலே நாடோறும் உழைத்து உழுது பயன்தரும் உழவர்களுடைய தன்றோ? உழவர்களே உனது மாட்சிக்கும் செங்கோல் ஆட்சிக்கும் காரணமானவர். நாட்டிலே மழை பெய்யா விட்டாலும், விளைவு குறைந்து விட்டாலும், பிற

இடையூறுகள் நேர்ந்தாலும் ஆளும் மன்னனைத்தான் உலகம் பழிக்கும். இவற்றிற்குக் காரணம் அரசன் அறம் திறம்பியது என்றே நினைப்பார்கள். இந்த உண்மையை நன்கறிந்து உழவர்களுக்கு ஒரு குறையும் நேராதவாறு பாதுகாப்பாயாக. அவ்வாறு பாதுகாப்பதன் வாயிலாக ஏனைய மக்களையெல்லாம் பாதுகாத்தவனாவாய். அப்பொழுதுதான் நினது பகைவரும் உனது தாள் பணிவர்'' என்பதாம். புலவர் பெருமான் நயம்படவும் குறிப்பாகவும் கூறியுள்ள சொற்களைத் தமிழ் மன்னன் உள்ளத்திலே கொண்டான்; ஏதோ ஒரு குறை நேர்ந்திருக்க வேண்டும் என்பதை ஆராய்ந்து கண்டான்; குற்றங் களைந்தான்; பகடு புறந் தருநர் பாரம் ஓம்பிக் குடிபுறந் தருவதே கடன் எனக் கூறிய அரும்பொருளை மறவாது போற்றி ஆட்சி செய்வானானான்; அந்த ஆண்டில் உழவர்களுக்கெல்லாம் வரியில்லை எனப் பறையறைந் தறிவிக்குமாறு ஆணை பிறப்பித்தான். இவ்வாறு வேந்தர்கள் உழவின் மேன்மையை உணர்ந்து செய்தது போன்றே மங்கம்மாள் அம்மையும் தாமே சிந்தித்துத் தக்க செயல்களைச் செய்தார். காடு திருத்தியும் குளந் தொட்டும் நாட்டை நன்னிலைப் படுத்தியது அம்மையாரின் கடையை உணர்த்துகின்றதன்றோ? உழைப்பினாலேயே நாடு செழிப்படையும். நாடு செழித்த போதே மக்களிடத்திலே இன்பம் நிலவும். காடு திருத்தி நல்ல நாட்டைக் காண்பவர் உழைப்பாளிகளல்லரோ? இந்தப் பரந்த நிலம் பாடுபடுவார்க்கே சொந்தம் என்று சொல்லுமளவிற்கு உழைப்போரை ஊக்குவித்தார். உழைப்பிலே இன்பங்கண்ட அவர்

கள் உலப்பிலா உவகை கொண்டு அம்மையை வாழ்த்தினர்! அதற்கு முன்னெல்லாம் வாழ்ந்த அரசர்கள் காலத்தில் இப்படிப்பட்ட இன்பங் கண்டாரில்லை. இத்தகைய ஏழை மக்களின் வாழ்த்துக்களை அவர்கள் பெறும் பேறும் பெற்றாரில்லை. அம்மையார் வள்ளுவர் காட்டிய நல்ல நாட்டின் இலக்கணத்தைப் பயின்றதாகச் சான்று கிடைக்காவிடினும், அவர் சொல்லிய இலக்கண முழுவதும் அமைந்திருந்ததே அம்மையாரின் பெரும் புகழுக்கும் பேரறிவிற்கும் காரணமாகும். காலமறிந்து தக்க அறம்புரிந்த அம்மை மேலும் பல நற்பணிகளைச் செய்தமையை வரைவாம்.

நாட்டிலே விளைவைப் பெருக்கும் நீர்ப்பாசன வசதிகளைச் செய்த பின்பு, மக்கள் துன்பப் படாமல் சென்று வருவதற்குரிய சாலைகளை அமைக்கக் கருதினார். ஏனெனில், அப்பொழுதிருந்த பாதைகள் செப்பமுடையனவாக இல்லை அச்சமின்றிச் செல்ல முடியாத நிலைமையும் இருந்தது. போக்கு வரத்து வசதிகள் மிகக் குறைவாகவே காணப்பட்டன. பிற நாடுகளிலிருந்து எண்ணற்ற மக்கள் நகர்ச் சிறப்பையும் தலப் பெருமையையும் காண்பதற்கு வந்தனர். இன்பமும் அருளும் பெற்றுப் போவர். இவற்றைக் கண்ட அம்மையார் உலகின் பல நாடுகளிலிருந்தும் வரும் யாத்திரீகர்கள் எவ்வித இன்னலுமின்றி வந்து போக என்ன செய்யவேண்டும் என்பதைச் சிந்தித்தார். மதுரையிலிருந்து இராமேசுவரம், கன்னியாகுமரி ஆகிய சிறந்த தலங்கள் வரையும் ஒழுங்கான பாதைகளை அமைத்தார். சாலைகளின் இருமருங்கும் பசிய மரங்களை வளர்த்து நிழல் கவியச் செய்தார்.

வழியிலே செல்பவர்கள் வெயிலையே அறியாமல் விருப்புடன் சென்றனர். தலங்களைக் கண்டு வணங்கச் செல்லும் மக்கள் தங்கிக் களைப்பு நீங்குதற்குரிய சத்திரங்களைக் கட்டினார். தண்ணீர்ப் பந்தல்களை வைத்து வருவார்க்கும் விலங்குகட்கும் பயன்படுமாறு செய்தார். ஏழைகளுக்கும் துறவிகளுக்கும் உணவு அளிக்கும் அன்னசத்திரங்கள் பலவற்றை நிறுவினார். அறச் செயல் முட்டுப்பாடின்றி நடைபெறுமாறு கண்காணித்து வந்தார். ஆன்ம விடுதலையை நாடிவரும் அன்பர்கள் தல யாத்திரை வருவர். அவர் கால் நடையாகவே நோன்பை மேற்கொண்டு பல கல் தொலைவினைக் கடந்து செல்வர். இத்தகையோர் பிற நாடுகளினின்றும் வந்து போவது வழக்கம். அவர்கள் புதிதாக வருபவராதலால் எவ்விதக் கலக்கமுமடையாது தங்குதற்குப் பெரிய சத்திரம் ஒன்றை மிகுந்த பொருட் செலவில் கட்டி முடித்தார். அதுவே இன்றும் மதுரைப் புகைவண்டி நிலையத்தின் எதிரே 'என்று வந்தீர்கள்?' என்று புன்முறுவலோடு கேட்பது போலக் காட்சியளிக்கும் **'மங்கம்மாள் சத்திரம்'** என்பதாம். வருபவர்கள் அச் சத்திரத்திலே சின்னாள் தங்கியிருப்பர். அங்குள்ள அங்கயற்கண்ணி எழுந்தருளிய கோவிலைக் கண்டு வழிபட்டு அதன்பின் தங்கள் பயணத்தைத் தொடங்குவர். இராமேசுவரம், கன்னியா குமரி முதலிய தலங்களுக்குச் சென்று நீராடி இறை வழிபாடாற்றித் திரும்புவர். திரும்புங்கால் 'மகராசி மங்கம்மாள் சாலை' என்று மனங் குளிரப் பேசி வாழ்த்திக்கொண்டே செல்வர். மதுரைப் பெருங்கோவிலைத் தமிழகத்தின் கலைக்கோயில்

என்று ஆராய்ச்சியாளர் கூறுவர். அக்கோவிலுக்குத் தக்க திருப்பணிகள் செய்தும், வழிபட வரும் அன்பர்கள் எவ்விதத் தடையுமின்றி இறைவனை வழிபட்டு இன்புற்றுச் செல்லுமாறு வசதிகள் அமைத்தும் வைத்திருந்தமை பாராட்டுதற்குரியன.

அம்மையார் உயிர்களுக்கு வேண்டிய இன்றியமையாத பொருள்களில் காற்றும் ஒன்று என்பதை உணர்ந்தார். நல்ல காற்றும் குளிர் நிழலும் ஒருங்கே கிடைக்குமிடம் ஒன்றைத் தேர்ந்தெடுத்தார். வையையாற்றின் வடகரையிலே மரங்கள் செறிந்துள்ள பரந்த இடமே அது. அங்கே கட்டிடக் கலைஞர்களைக் கொண்டு கற்களினாலேயே அழகுமிக்க மனை ஒன்றை அமைத்தார். அதற்குத் தமுக்கம் என்று பெயர். அரசியல் அதிகாரிகளும், பிணியாளர்களும் தங்கி வாழ்வதற் கேற்றதாகும். கோடைக்காலத்தில் வெப்பு மிகுதியாக இருப்பதால் அதிகாரிகள் பொறுக்கவியலாமல் வருந்துவர். நோய்வாய்ப்பட்டோர் வெப்புநாட்களில் மிகுந்த இன்னலுறுவர். இவர்கள் கோடைக் காலத்தில் சென்று தங்கி ஓய்வு பெறுதற்கும், பிணி போக்குதற்கும் பெரிதும் பயன்பட்டது. இற்றை நாளில், பெருஞ்செல்வர்களும், அரசியல் பெருமக்களும் பிறரும் நீலகிரி, கோடைக்கானல் முதலிய குளிர்ந்த மலைகளிடத்துச் சென்று தங்கி இன்புறுவதைக் காண்கிறோம். குற்றாலத்தும், குமரித்துறையிடத்தும் சென்று அருவியில் படிந்தும், கடலில் மூழ்கியும் களிப்புறுவதை அறியாதார் இல்லை. அங்கெல்லாம் தங்கும் விடுதிகளும் உணவுச் சாலைகளும்

அமைத்துள்ளமையும் அறிந்ததே. ஆனால், அம்மையார் எவ்விதப் பொருட் செலவுமின்றி இலவசமாகத் தங்கிச் செல்ல ஏற்பாடு செய்திருந்தது போற்றி மகிழ்தற்குரியதன்றோ? அதனாலன்றோ இன்றும் **'தமுக்கம்'** என்ற பெயர் மறைந்து போகாது மக்களிடையே நிலைபெற்று வருகின்றது. தமுக்கம் என்ற சொல்லின் பொருளை யறிந்தோர் மிகச் சிலரே. அதன் பொருள் **'கோடைக் காலக் கொழு நிழல் மனை'** என்பதாம். 'கோடை வாசஸ்தலம்' என்றும் கூறுவர். ஆங்கிலேயர்கள் ஆட்சிக் காலத்தில் அரசியல் அலுவலகமாக மாற்றிக்கொண்டனர். இன்றைய சுதந்தர காலத்தும் அவ்வாறே பயன்பட்டு வருகின்றன.

மங்கம்மாளின் கணவன் சொக்கநாத நாயக்கர் திருச்சியைத் தலைநகராக அமைத்து ஆட்சி புரிந்து வந்தார் என்பதை முன்பு கண்டோம். அவர் இறந்த பிறகு அம்மையார் நினைவுச் சின்னம் ஒன்றை நிறுவக் கருதினர். கணவனே தெய்வம் என்று மதிக்கும் கற்புடைப் பெண்டிர் தம் கணவரின் உருவப் படத்தை வைத்து வழிபடுவது இக்காலத்து இயல்பு. நினைவு நாளைக் கொண்டாடி அறம் புரிதலும் உண்டு. அவ்வாறே அம்மையாரும் சொக்கநாதர் வாழ்ந்த சிராப்பள்ளி அரண்மனையினுள் ஓர் அழகிய மண்டபம் ஒன்றை அமைத்தார். அம் மண்டபத்தின்கண் அறிஞர்கள் பலரைக் கூடுமாறு செய்து ஆராய்ச்சிப் பணியில் ஊக்கினர். அவ்வறிஞர்கள் தம் ஆராய்ச்சியில் தெளிந்து கண்ட கருத்துக்களைக் கேட்போருக்குப் பயன்படுமாறு சொற்பொழிவாற்றுவர். கல்வியறிவும்,

நல்லொழுக்கமும் வளரும் பொருட்டே அம்மையார் இதனைக் கட்டினார் போலும்! அம் மண்டபத்திற்கு முதலில் வழங்கிய பெயர் **'பிரசங்க மண்டபம்'** என்ப தாம். பிறகு, 'நவாப் மண்டபம்' என அழைக்கப் பட்டது. இவ்வாறு அம்மையார் தம்மையும் மறந்து அளவிலாது செய்த அறச் செயல்கள் அவருக்கு அழியாப் புகழைத் தந்தன! எனினும், சிலர் அவரைக் குறை கூறும் நிலையும் இருந்து வந்தது. அதன் காரணம் யாதென அறிவாம்.

அம்மையார் அளவு கடந்து அறம் செய்வதற்குக் காரணம் என்ன என்பதைக் கற்பனைக் கண்ணுற் பார்த்தனர் சிலர். அவர்கள் அம்மையாருக்கு ஏற்பட்ட பைத்தியம் காரணமாகவே செய்தார் என்றனர். பிறிதொரு சாரார், அம்மையார் வெற்றிலை யுண்ணும் வழக்க முண்டென்றும், இடது கையால் போட்டுக் கொண்ட பாவம் தீர்த்தற் பொருட்டே இத் துணை அறங்கள் செய்தனரென்றும் பிழைபடக் கருதினர். இவர்களின் கருத்துக்கள் முற்றிலும் பொருந்தா என்பதை எவரும் எளிதிலே தெரிந்து கொள்ளுவர். ஆனால், அம்மையார் அவர்கள் 'அறப் பைத்தியம்' உடையவர் என்பதை ஒப்புக் கொள்ளலாம். உலகிலே ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு பைத்தியம் உண்டு. பணப் பைத்தியம், பதவிப் பைத்தியம், கல்விப் பைத்தியம், காதல் பைத்தியம் எனப் பலவாருகச் சொல்லலாம். இவண் 'பைத்தியம்' என்பது தாம் விரும்பிய ஒன்றிலே பிறரெல்லாம் வைத்துள்ள அவாவினைக் காட்டிலும் மிகுதியாகத் தம்மை மறந்து கொள்ளும் அவாவேயாம். சிலர்

தமக்குத் தீமை பயக்கும் பொருள்களிலே மிகுதியாக ஆசை கொள்வர். அதைத்தான் உலகோர் 'பைத்தியக்காரத்தனம்' என இகழ்ந்து தூற்றி நகைப்பர். அஃதாவது, எது வாழ்விற்கு நல்லது தீயது என்று பகுத்துணர வியலாத தன்மையாம். ஆனால், சிலர் தமக்கும் பிறர்க்கும் நலம் பயக்கும் செயல்களிலே மிகுந்த பைத்தியங் கொள்வர். அதனைப் 'பைத்தியம்' என்று சொல்வது சாலாது. தம்மையுங் கடந்து யாவரும் ஒன்றெனக் கருதும் அருட்டன்மையே. அவர்கள் அருளே உருவமானவர்கள்; அறமே கோவிலாகக் கொண்டவர்கள்; எவ்வுயிரும் தம்முயிர் போல் எண்ணி இரங்குபவர். அவர்கள்பால் பொறாமை, பேராசை, வெஞ்சினம், கடுஞ்சொல் முதலிய தீய குணங்களைக் காணவியலாது. தன்னலமில்லாப் பெருந்தகைமை என்ற பண்பையே பார்க்கலாம். அப் பெற்றியார்களையே உலகம் அருளாளர்கள் என்று போற்றுகின்றது. அந்தத் தன்மையில் வாழ்ந்தவர்கள் நம் நாட்டில் எண்ணில்லாதவர். முல்லைக்குத் தேரும், மயிலுக்குப் போர்வையும் அளித்த அருளாளர்கள் யார்? பாரியும் பேகனும் ஆகிய தமிழ் நாட்டு அரசர்களன்றோ? அவர்களும் அறத்திலே பித்துடையவர்களே. அந்த முறையில் மங்கம்மாள் அம்மையும் அருளாளர் வரிசையில் வைத்து மதிக்கத் தக்கவரல்லரோ? இகழ்ந்து பேசுவதற்கு எட்டுணையும் குற்றமுடையவரன்றே. அன்றியும், பெண்கள் அறம் செய்வதற்கே பிறந்தவர்கள். மங்கையராகப் பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும் என்பர் மதிநலம் படைத்தோர்.

அம்மையார் உயிர்களுக்குச் செய்யும் தொண்டே கடவுள் தொண்டு என்று கொண்டனர் என்பதும் அதனால் ஒப்பில்லாத புகழையும் மக்கள் மதிப்பையும் பெற்றுக் கொண்டனர் என்பதும் தெளிவாகிறது. ஆட்சியில் அறம் பல செய்த அம்மையார் அறப்போர் செய்ய வேண்டிய சூழ்நிலைகளும் தாமே வந்து சேர்ந்தன. அவர்தம் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த போர்ச் செயல்களைச் சுருக்கமாக வரைவோம்.

மங்கம்மாள் 1689-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றார் என்பதை முன்னர்க் கண்டோ மன்றோ? அக் காலத்தில் முகம்மதியப் பேரரசராக விளங்கியவர் அவுரங்கசீப் ஆவர். அவர் டெல்லியைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தார். அவரது நோக்கம் என்னவெனில், தென்னாட்டில் விளங்கிய அரசர்களை வென்று தன்னடிப்படுத்த வேண்டுமென்பதே. தம்முடைய படைத் தலைவர்களின் கீழ்ப் பெரும் படைகளை அனுப்பி இடைவிடாமல் இன்னல் விளைத்து வந்தார். அவருடைய அரசியல் தந்திரம் மூன்று வகைப்பட்டது. முதலாவதாக, தம் படைகளைத் தென்னாட்டிற்கு அனுப்பி அரசர்களிடம் சிறிது சிறிதாகச் செல்வம் முழுவதையும் உறிஞ்சுவது; இரண்டாவதாக, அவ்வரசர்களின் நாடுகளைச் சிறிது சிறிதாகக் கைப்பற்றுவது; மூன்றாவதாக, அவர்கள் பதவிகளையே ஒழித்து அரசுரிமையை அகப்படுத்துவது. இம் மூவகைப்பட்ட சூழ்ச்சிகளையும் அம்மையார் எவ்வாறோ அறிந்து கொண்டார். சூழ்ச்சியுடையாரைச் சூழ்ச்சியாலேயே வெல்ல வேண்டும். அவுரங்கசீப்பை வெல்ல முடியாது.

எனினும், தம் நாட்டைச் சூழ்ச்சித் திறனாலே பாது காக்க முடிவு செய்தார். முகம்மதிய மன்னரோடு பகைமை பாராட்டாமலும், போர் புரியாமலும் நாட்டை அமைதியுடன் ஆட்சி புரியக் கருதினார். போர் செய் தால் நாடு முழுமையும் இழப்பதையன்றி வேறு வழி யில்லை. தம் படை வலியையும் அவுரங்கசீப்பின் படை வலியையும் ஒப்பு நோக்கி ஆராய்ந்து அறிந்தார். தம் வலியும் மாற்றான் வலியும் துணைவலியும் தூக்கிச் செயல் என்பது வள்ளுவர் கண்ட அரசியலன்றோ? அதனை விடாது மனத்திலே அமைத்தார் போலும்! சமாதானமே வெற்றி என்று உறுதியுடன் அரசியலை நடத்தி வந்தார். ஆட்சி யேற்ற சில ஆண்டுகளுக் குள்ளேயே நாட்டிற்குப் பல நன்மைகள் செய்து மக்களின் நன்மதிப்பைப் பெற்றார். மங்கம்மாளம்மை யாரால் நாடு நன்னிலையடைந்த அக் காலத்திற்றான் முகம்மதியப் பேரரசர் தென்னாட்டின் மீது ஒரு பெரும் படையை உய்த்தார். அப் படை ஜில்பிர்கான் தலைமையில் எவ்வித எதிர்ப்புமில்லாமல் விரைந்து தமிழகம் புக்கது. மைசூர் மன்னரும் தஞ்சையரசரும் அஞ்சி அடிபணிந்தனர். அப் படையால் தீங்கு நேராத வாறு பொருளையளித்து ஒற்றுமைப்பட்டனர். அவ்விரு அரசர்களும் சென்ற வழியையே மங்கம்மாளும் பின் பற்ற வேண்டியதாயிற்று. தம் நாடு அழிவுறாதபடி வேண்டும் பொருளீந்து சமாதானம் செய்துகொண் டார். இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1693-ஆம் ஆண்டிலேயாம்.

மைசூர், தஞ்சை, மதுரை அரசர்களிடம் பெற்ற பெரும் பொருளை வாரிக்கொண்டு வடதிசை நோக்

கிச் சென்றது முகம்மதியப் படை. தம் அரசர் அவுரங்க சீப் மகிழ்ந்து பாராட்டுமாறு படைத் தலைவன் செல் வங்களை யெல்லாம் குன்றுபோல் குவித்தான். அவுரங்கசீப் அடைந்த மகிழ்ச்சிக்கு எல்லையில்லை. அட்டை உறிஞ்சுவது போல் தென்னாட்டுச் செல்வம் முழுவதையும் கவர எண்ணினான். ஆசைக்கோர் அள வுண்டோ? மறு முறையும் தென்னாடிற்கு ஒரு படை செல்லுமாறு ஆணையிட்டான். 1697-ஆம் ஆண்டில் முன் வந்த படைத் தலைவன் ஜில்பிர்கானே தலைமைபூண்டு தமிழகம் போந்தான். இந்தத் தடவை யும் மைசூர், தஞ்சை மன்னர்கள் பெரும் பொருளைக் கொடுத்துப் பணிந்தனர். மங்கம்மாள் என்ன செய் வார்? அவர்கள் அளித்த பொருளைக் காட்டிலும் மிகுந்த பொருளை முகம்மதியத் தலைவனிடம் கொடுத் தார். தஞ்சையரசர் கைப்பற்றிக் கொண்ட தம் ஊர்கள் சிலவற்றை முகம்மதியப் படை உதவியால் திரும்பப் பெற்றுக் கொண்டார். அதனால் தாம் கொடுத்த திறைப் பொருளை ஈடுசெய்து கொண்டார். முகம்மதியப் படைத் தலைவனிடம் அம்மையார் இவ் வாறு நடந்து கொண்டது அவரது அரசியல் திறமையைக் காட்டுகின்றதன்றோ? தென்னாட் டின் ஒற்றுமைக் குலைவையும் தம் நாட்டின் அர சியல் நிலையையும் அறிந்து, போர் செய்யாமலேயே ஒரு பெண் சமாதானத்தில் வெற்றி பெற்றது மிகவும் போற்றத்தக்கதே.

முகம்மதியப் படையெடுப்பை ஒருவாறு வெற்றி கண்ட அம்மையார், தம் ஆட்சிக் காலத்தில் நான்கு முறை கடும்போர் செய்ய வேண்டிய நிலைமை ஏற்

பட்டது. போர்களிலெல்லாம் வெற்றி பெறுவதற்கு அரசியாருக்கு மிகுந்த துணையாக இருந்தவர் தளபதி நரசப்பையா என்பவர்; அஞ்சா நெஞ்சம் படைத்தவர்; போர்த்திறம் வாய்ந்தவர்; போர்க்களத்திலே தோல்வியையே கண்டறியாதவர்; பகைஞரும் அவர் பெயரைக் கேட்டளவில் நடுக்கமுறும் தனியாற்றல் உடையவர். இத்தகைய பெரு வீரரைத் தமக்குத் தளவாயாக அடையப் பெற்றதை அம்மையார் தம் நல்வினைப் பயனே எனக் கருதி மகிழ்ந்தார். அவர்தம் ஆட்சிக் காலத்தில் நிகழ்ந்த போர்களைச் சுருங்கக் காண்போம்.

திருவிதாங்கூர் அரசர்கள் நாயக்க மன்னர்களுக்குக் கப்பம் கட்டி வரும் வழக்கமிருந்து வந்தது. ஆனால், அவ்வரசர்களில் ஒருவர் நாயக்க மன்னர்களில் புகழ் வாய்ந்த திருமலை நாயக்கரின் ஆட்சிக் காலத்தில் திறை செலுத்த மறுத்துவிட்டார். அதனால் திருமலை நாயக்கர் படையெடுத்துச் செல்லுமாறு ஆணையிட்டார். நாயக்கர் படை பகைவர் நாட்டிற் புக்கதும் அவ் வரசன் மிக்க பொருளைத் திறையாகக் கொடுத்துப் பணிந்து விட்டான். அதன்பின் நாட்டைப் படையெடுப்பிலிருந்து பாதுகாக்கக் கருதிய மலையாள மன்னர் எல்லைப் படை யொன்றை நிறுவினார். திருமலை நாயக்கரின் பேரன் சொக்கநாத நாயக்கர் ஆட்சிக் காலத்திலும் மலையாள அரசர் கப்பப் பொருளைச் செலுத்தவில்லை. பலமுறை நினைவு படுத்தியும் செவி சாய்க்கவில்லை. திறைப் பொருள் நாயக்க அரசருக்கு வந்து சேரவே இல்லை.

அவ்வமயம் நாயக்கர் நாட்டில் அரசியல் குழப்பமும் பகைவர் தொல்லேயும் மிக்கிருந்தன. திருவிதாங்கூர் அரசன் மீது போர் தொடுப்பதற்குரிய சூழ்நிலே இல்லே. ஆகவே, சொக்கநாதர் காலத்தில் மலேயாள மன்னர் கப்பம் கட்டாமலே இருந்து விட்டார். ஆனல், சொக்கநாதர் மகன் ஸ்ரீரங்க கிருஷ்ணமுத்து வீரப்ப நாயக்கர் காலத்தில் மலேயாள அரசர் திறை செலுத்த வேண்டியதாயிற்று. நாயக்கர் பட்டத்திற்கு வந்த சில ஆண்டுகளில் தம் தந்தை சொக்கநாத நாயக்கர் இழந்த நாடுகளேயெல்லாம் தம் திறமையால் மீட்டார். திருநெல்வேலிவரை படையுடன் சென்று தம் ஆட்சியை நிலே நாட்டினர். அதனே அறிந்த மலேயாள மன்னர் தம் நாட்டின் மீது நாயக்கர் படை வரும் என அஞ்சி, விலேமதிக்க வொண்ணுப் பெரும் பரிசில் பொருள்களே எடுத்துக்கொண்டு திருநெல்வேலிக்கு வந்தார். நாயக்கரின் திருவடிக்கண் திறைப் பொருளாக வைத்து வணங்கிச் சென்ருர் என அறியக்கிடக்கின்றது. நாயக்கர் இறந்த பின் மங்கம்மாள் அம்மையார் ஆட்சி உரிமை பூண்டனர். பெண்ணரசுதானே என்ற இகழ்ச்சியால் மலேயாள மன்னர் மீண்டும் வழக்கமாகக் கட்டி வந்த கப்பத் தொகையை நிறுத்திவிட்டார். அதனுல் அம்மையார் பழைய உரிமையை இழக்க விரும்பாது போர் செய்ய வேண்டிய சூழ்நிலே ஏற்பட்டது. இதுவே அம்மையார் மலேயாள அரசரோடு போர் தொடுத்ததற்குரிய அடிப்படைக் காரணமாம். அப்போரினே அம்மையார் விடா முயற்சியோடு நடத்தி வெற்றி எய்தியதை இவண் காண்போம்.

மங்கம்மாள் மதுரையை ஆண்டுவந்த காலத்தில் மலையாள அரசராக விளங்கியவர் இரவி வர்மா என்பவர். அவர் நாயக்க மன்னர்களுக்கு வழக்கமாகச் செலுத்திவந்த கப்பத் தொகையை அனுப்பாது செருக்குற்றிருந்தார். அதற்குக் காரணம் அம்மையார் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற சிறிது காலத்தில் உள்நாட்டுக் குழப்பம் மிகுந்திருந்தது. அன்றியும் பெண்தானே என்ற இழிவு மனப்பான்மை கொண்டிருந்தது. இவற்றைக் கருதித் திறை செலுத்தாது இருந்தார் இரவி வர்மா. ஆனல், அம்மையாரோ எவ்விதக் குழப்பத்தையும் பொருட்படுத்தவில்லை. கப்பத் தொகையை உடனே பெற்று வருமாறு ஒரு படையினை அனுப்பினார். அப்படை மலையாள நாடு சென்றதும் அரசன் தானே முன்வந்து திறைப் பொருளைக் கொடுத்துவிடுவான். இவ்வாறு ஒவ்வொரு ஆண்டும் படை சென்றே திறைப் பொருளைப் பெற்றுவர வேண்டியதாயிற்று. மலையாள மன்னர் கப்பங் கட்டுவதை நிறுத்த எண்ணங் கொண்டார். நாயக்கர் படையினைத் தம் நாட்டில் நுழையா வண்ணம் தம் நாட்டெல்லையாகிய ஆரல்வாய்மொழிக் கணவாயினிடத்தில் ஒரு நிலைப் படையை அமைத்தார். அதே சமயத்தில் எதிர்பாராத முறையில் மலையாள அரசர் இரவி வர்மாவிற்கும் அவருடைய மந்திரிகளுக்கும் அதிகார ஆசை காரணமாகப் பகைமை யுண்டாகியது. அரசனைக் கவிழ்க்கவும் அரசியலைக் கைப்பற்றவும் சதி செய்தனர். அமைச்சர் எண்மரும் ஒன்றுபட்டனர். அரசன் அதனையறிந்து அவர்களை ஒழித்துவிடத் தக்க காலத்தை நாடியிருந்தான். இந்த மாறுபட்ட நிலைமையை மங்கம்மாள்

நன்கு பயன்படுத்த எண்ணினர். தம் படைகளை இடைவிடாது அனுப்பி மிகுந்த தொல்லை கொடுத்து வந்தார். அந் நாட்டு மக்கள் பகைமையால் நேர்ந்த தீங்கினை எண்ணி வருத்தமுற்றனர். மக்களின் துன்பத்தைப் போக்க வழியறியாது மலையாள மன்னன் மயங்கினன். கவலைக் கடலுள் ஆழ்ந்தனன. ஒரு புறம் நாயக்கப் படையும் மற்றொரு புறம் தம் அமைச்சர்களும் நாட்டை அலைத்து வருத்துவதைக் கண்டான். அமைச்சர்கள் எண்மரும் அரசியல் முட்டுக்கட்டைகளாக இருப்பதையும் அறிந்தான். சிந்தனை செய்து ஒரு முடிவிற்கு வந்தான். ஒரே கல்லில் இரண்டு காய்களை வீழ்த்துவதுபோல இருவகைப் பகையையும் ஒரே சூழ்ச்சியால் வென்று முறியடிக்கத் திட்டமிட்டான். அத்திட்டமும் வெற்றியே பயந்தது எனினும், அச் சூழ்ச்சி அவனுக்கே வினையாகியது! அம்மையாருக்குச் செய்த சூழ்ச்சி அவனையே சென்று சுட்டது. 'தன் வினை தன்னைச் சுடும்' என்ற பழமொழி பொய்த்துவிடுமோ? மதுரை நாயக்கப் படை திறைப் பொருளைப் பெற்றுவரத் திருவிதாங்கூர் சென்றது. எவ்விதத் தடையுமின்றித் தலைநகரை அண்மியது. இன்னது செய்வதென்று அறியாது திகைத்த இரவி வர்மா உடனே பணிந்துவிட்டார். நாயக்கப் படைத் தலைவரிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். தமக்கு இன்னல் விளைத்து வரும் 'எட்டு வீட்டுப் பிள்ளைமார்' என்ற மந்திரிகள் எண்மரையும் ஒழிப்பதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அவ்வாறு செய்யும் உதவிக்குக் கைம்மாருகத் தம் நாட்டின் ஒரு பகுதியையும், பெரிய கோட்டை ஒன்றையும்

தருவதாக வாக்களித்தார். நாயக்கப் படைத் தலைவன் அதற்கு இசைந்தான். படை தலைநகருக்குள் புகுந்தது. அரசியல் அதிகாரங்களைக் கைப்பற்றிய எட்டு மந்திரிகளிற் சிலர் கொல்லப்பட்டனர். தாமே தற்கொலை செய்து கொண்டவரும், உயிர் தப்பியோடி ஒளிந்தவரும் சிலர். நாயக்கப் படை வீரர்களின் உதவியால் எட்டு வீட்டுப் பிள்ளைமார் பகையை அறவே ஒழித்த இரவி வர்மா அடுத்த திட்டத்தைக் கையாளத் தொடங்கினார். தம் பெரும் படையைத் தலைநகருக்குள் வருமாறு செய்தார். நாயக்கப் படை வீரர்களைத் தாக்குமாறு கட்டளையிட்டார். படைவீரர்கள் இசைந்து தாக்கினர். எதிர்பாராத செயலைக் கண்ட நாயக்கப் படை இரிந்தோடியது. பெரும்பான்மையான வீரர்கள் கொல்லப்பட்டனர். சிலர் விரட்டியடிக்கப்பட்டனர். சுருங்கக்கூறின், மதுரைப் படை முழுமையும் அழிந்துவிட்ட தென்றே சொல்லலாம். உயிர் தப்பி ஓடிய வீரர் சிலர் இந்தச் சோக நிகழ்ச்சியை அரசியார்பால் விளங்க உரைத்தனர். அப்பொழுது அம்மையார் அடைந்த சீற்றத்திற்கு அளவுண்டோ? இரவிவர்மன் இழைத்த நச்சினும் கொடிய செயலை நினைந்து மனம் துடித்தார். பழிக்குப் பழி வாங்க வேண்டுமென்பது அறமன்று; உரிமையைப் பாதுகாப்பதும் வஞ்சகனை ஒறுப்பதும் தம் கடன் என்பதை எண்ணினார். தளவாய் நரசப்பையாவே அச்செயலை முடிக்கும் திறலுடையார் எனத் துணிந்தார். உடனே படை புறப்படட்டும் எனத் தளவாய்க்கு ஆணையிட்டார். போரெனில் உள்ளங் களிப்புறும் பெரு வீரரல்லரோ அவர்?

உடனே ஒரு பெரும் படைக்குத் தலைமை தாங்கிச் சென்றார். மலையாள அரசன் இழைத்த மானக் கேட்டை மனத்திலே கருதி விரைந்து சென்றார். படை நாட்டில் புகுந்ததும் இரவி வர்மா ஒரு பெரும் படையுடன் வந்து எதிர்த்தார். இரு பெரும் படைகளும் சந்தித்துக் கடும் போரிட்டன. இறுதியில் தளவாய் வெற்றி முரசு கொட்டினார். அவர் சொல்லிய திட்டத்திற்கெல்லாம் இணங்கினான் பகையரசன். பழைய கப்பத் தொகையெல்லாம் கணக்கிட்டுப் பாக்கியில்லாமல் வாங்கினார். படைச் செலவும் பரிசுத் தொகையும் பெற்றார். தளவாய் கொண்டுவந்த பொருள்களில் மிகவும் குறிப்பிடத்தக்கது, மலையாள நாட்டிலிருந்து எடுத்துவந்த சில பீரங்கிகளாம். அவை மதுரை அரண்மனையிடத்தும், திருச்சிக் கோட்டையிடத்தும் அழகு பெறப் பாதுகாத்து வைக்கப்பெற்றிருந்தனவாம். நரசப்பையாவின் வெற்றிச் செயலைப் பாராட்டிய அம்மையார் தளவாய்மீது மிகுந்த நம்பிக்கை கொண்டு போற்றி வருவாராயினர். முதற் போரிலே அம்மையார் பெற்ற போர் அனுபவமே பிற போர்களின் வெற்றிக்கும் காரணமாயிருந்தது என்னலாம்.

1700-ஆம் ஆண்டில் மங்கம்மா ளம்மையார் மகாராஷ்டிர மன்னருடன் போர் தொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. ஷாஜி என்ற மகாராஷ்டிர மன்னர் தஞ்சை நாட்டை ஆண்டு கொண்டிருந்தார். தஞ்சையரசர்களுக்கும் நாயச்க மன்னர்களுக்கும் பழம் பகை இருந்தே வந்ததன்றோ? அதனை மனத்திலே கருதியே தஞ்சையரசர் நாயக்கநாட்டின் சிறந்த நகரங்கள்

சிலவற்றைக் கைப்பற்றிக் கொண்டார். அன்றியும் நாயக்க நாடு முழுவதையும் தம் நாட்டோடு சேர்க்கவும் எண்ணியிருந்தார். இந்த எண்ணம் அம்மையாருக்கு எவ்வாறோ தெரிந்தது. இனி வாளாவிருப்பதில் பயனில்லை எனக் கூறினார். இம்முறையும் தம் புகழ்மிக்க தளவாய் நரசப்பையாவைப் படைத் தலைமை பூணுமாறு பணித்தார். தளவாயும் தக்க படை வீரர்களுடன் சோணாட்டெல்லையை அடைந்தார். காவிரியின் வடகரையிலே நாயக்கப் படை பாசறை அமைத்தது. தஞ்சைப் படையும் முன்னரே அறிந்து வடகரையில் தங்கியது. இருவகைப் படைகளும் ஒரே இடத்திலே இருந்தன. தளவாய் தம் படையினைவிட தஞ்சைப் படை பரந்து விளங்குவதைப் பார்த்தார். எதிர்த்து வெற்றிபெற இயலாது எனக் கண்டார். சூழ்ச்சியினாலேதான் வெல்ல முடியும் என்று உணர்ந்தார். அவருடைய உள்ளத்தில் ஒரு சூழ்ச்சி உருவாகியது. தஞ்சை நகரைத் தாக்கப் போவதுபோல் நடித்துக் காவிரியாற்றைப் படையுடன் கடந்து சென்றார். அதனை அறிந்த தஞ்சைப் படை தம் தலைநகருக்கு அழிவுண்டாகும் என்று அஞ்சித் தாமும் ஆற்றினைக் கடக்க விரைந்தது. நாயக்கப் படை கரை ஏறியது. ஆனால், தஞ்சைப் படை வெள்ளத்தால் அடித்துக் கொண்டு போகப்பட்டது. காரணமென்னவெனில், தஞ்சைப் படை வீரர்கள் கடந்து சென்ற வழி மிகவும் ஆழமும் நீர்வேகமும் உடையது. நீரும் எதிர்பாராமல் பெருகி வந்ததுமாகும். சில வீரர்கள் நீந்திக் கரையேறியும் நாயக்க வீரர்களிடமிருந்து தப்ப முடியாது போயிற்று. ஆகவே, தஞ்சைப் படை முழுவதும்

அழிந்தொழிந்தது. தளவாய் நரசப்பையா எவ்வித எதிர்ப்புமின்றிப் படையுடன் தஞ்சையைக் கைப்பற்ற விரைந்தார். தஞ்சையைச் சூறையாடினர். தஞ்சையரசர் திடுக்குற்றார்; தம் படை முழுவதும் அழிந்த அவலச் செய்தியைக் கேள்வியுற்றார்; அளவிலா வருத்தங் கொண்டார். இவ்வளவு அழிவிற்கும் காரணம் மந்திரி வாகோஜி பண்டிதர்தான் என்று சினந்தார். அவரைத் தூக்கிலிட்டுக் கொல்வதே தக்கது என்று முடிவு செய்தார். வாகோஜிக்கு இந்தச் செய்தி எட்டியது; உள்ளம் பதைத்தது; உடல் துடித்தது; ஓடோடி வந்து தம் மன்னனைப் பணிந்தார். 'பகைவரை ஒருவார காலத்திற்குள் சமாதானப்படுத்தி விடுவேன். அவ்வாறில்லையாயின் என் உயிரைப் போக்கி விடுங்கள்' என்று இறைஞ்சினர் வாகோஜி. அரசரும் உள்ளம் உருகுமாறு சொன்ன வார்த்தைகளைச் செவியேற்று இசைந்தார். அரசர் கருணை காட்டியதும் அமைச்சர் மகிழ்ந்தார். தம் அதிகாரிகளைப் பொருள் சேர்த்துக் கொணரும் பொருட்டு வணிகர் பெருமக்களிடம் உய்த்தார். தாமும் பெருஞ் செல்வர்கள்பால் மிகுந்த செல்வத்தைக் கடனாகப் பெற்றார். தொகுத்த பொருளையெல்லாம் எடுத்துக்கொண்டு மதுரையை அடைந்தார். நாயக்கரின் அமைச்சர்களுக்கும், தளவாய் நரசப்பையாவின் தந்தையாருக்கும் கையூட்டு வழங்கிச் சமாதானம் செய்துகொண்டார். மதுரை நாயக்கருடன் சமாதானம் செய்து திரும்பியதும் தம் அரசர் ஷாஜியைக் கண்டார். தாம் சென்று வந்ததைப் பணிவுடன் தெரிவித்தார். அரசர் மகிழ்ந்து பாராட்டினர். இத்தகைய திறமையாளரை

வாளாவிடுதல் சாலாது என எண்ணினர் போலும்! மீண்டும் தமக்கு முதன் மந்திரியாகவே அமர்த்திக் கொண்டார். இப் போரால் அம்மையாரின் புகழ் விஞ்சிற்று. தளவாயின் போர்த் திறமும் பல்லோராலும் போற்றிப் புகழப்பட்டது. போர் வெற்றி பெறுவதற்குத் தெய்வமே துணை நின்றது என எண்ணி மகிழ்ந்தார். 'தம் வினை தம்மைச் சுடும்' என்ற மொழி வீண் போகாததைக் கண்டார். அம்மையார் ஆட்சி மாட்சியுற்றதற்கு இப்போர் வெற்றியும் ஒரு காரணம் எனச் சொல்லலாம். அம்மையார் வெற்றி கண்ட ஏனைய அரசர்கள் பொருமை கொள்வது இயல்பன்றே? அது பொய்யாகாமல் மைசூர் மன்னரோடு போர் செய்யும் நிலைமை ஏற்பட்டது. அப் போரும் மங்கம்மாள் அம்மைக்கு நன்மையாகவே முடிந்தது என்பது குறிப்பிடத் தக்கது.

மங்கம்மாள் ஆட்சிப் பொறுப்பை மேற்கொண்டிருந்த காலத்தில் மைசூர் அரசராக விளங்கியவர் சிக்கதேவராயர் என்பவர்; மிக்க வீரம் படைத்தவர்; அரசியல் நுட்பம் உடையவர்; சூழ்ச்சியில் அவரை விஞ்சுவார் எவரும் இலர். அதே காலத்தில் டெல்லியைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்த அவுரங்கசீப் தென்னாட்டின்மீது ஒரு பெரும்படையை அனுப்பி வைத்தார். மைசூர் மன்னரும் தென்னாட்டின்மீது படையெடுத்துச் சேலம், கோயம்புத்தூர் முதலிய சிறந்த இடங்களைக் கைப்பற்றுமாறு தம் தளவாயை அனுப்பினர். இருதலைக் கொள்ளி எறும்பின் நிலை மங்கம்மாளுக்கு நேர்ந்தது! முகம்மதியப் பெரும்

படையோடு எதிர்த்துப் போர்புரிய வியலாதென்பதை உணர்ந்தார்; உடன்பாடு செய்துகொள்ள விழைந்தார். இந்தச் சமயத்திலேதான் மைசூர்ப்படை சேலம், கோயம்புத்தூர் ஆகிய இரு ஊர்களையும் கைப்பற்றியது. தளவாய் குமாரையா திருச்சியை முற்றுகையிட விரைந்தார். 'திருச்சியை அகப்படுத்தாமல் தாய் நாடு திரும்பேன்' என்று வஞ்சினம் மொழிந்தார். மங்கம்மாளுக்குச் செய்தி எட்டியது. மைசூர்ப்படையை எதிர்ப்பதும் இயலாது; என்செய்வது என அறியாது திகைத்திருந்தார். அந்த நேரத்தில் தஞ்சை மன்னர் உய்த்த மகாராஷ்டிரப் படை மைசூர் நாட்டைத் தாக்க விரைந்து சென்றது தளவாய்க்குத் தெரிந்தது. ஆகவே, திருச்சியைத் தாக்கச் சென்ற தளவாய் தம் நாட்டைக்காக்கும் பொருட்டுப் படையுடன் மீண்டார். மங்கம்மாளுக்கு வந்த தீங்கு பகலவனைக் கண்ட பனி போல் நீங்கியது. போர் செய்ய வேண்டிய நிலை இல்லாதொழிந்தது. அம்மையார் மட்டிலா மகிழ்வெய்தினர். இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1695-ஆம் ஆண்டிலாகும். மைசூர் அரசர் வருத்தமுற்றவராய் அரிய வாய்ப்பை எதிர் நோக்கிக்கொண்டே இருந்தார். அவருக்கு எதிர்பார்த்த வாய்ப்பு எளிதிலே கிடைக்கவில்லை. 1700-ஆம் ஆண்டிலே மீண்டும் போர் தொடுக்க எண்ணினர். ஆனல், தஞ்சை யரசரும் அம்மையாரும் ஒற்றுமைப்பட்டு வாழ்ந்தனர். மங்கம்மாள் ஆட்சியும் சிறந்து விளங்குவதைக் கண்டார். தாம் படையெடுத்துச் சென்ருல் வெற்றிபெற முடியாது எனத் துணிந்தார். அவ்விருவரது நாட்டின் விளைவைத் தடுக்கும் திட்டம் ஒன்றை வகுத்தார்.

அதுவே, காவிரியாற்றிற்கு நீர் செல்லாதவாறு பேரணை கட்டுவதாம். அவ்வணை கட்டிவிட்டால் தாமே பணிந்து விடுவர் என மனப்பால் குடித்தார். அணையைக் கட்டப் பெரும் பொருள் செலவிட்டார். அணையும் கட்டி முடிந்தது. காவிரியில் நீர் பெருகிச் செல்ல முடியாமல் தடுத்துவிட்டார். ஆகவே, கழனிக ளெல்லாம் காய்ந்து கிடந்தன. நாட்டில் விளைவின் மையால் பஞ்சமும் பசியும் மிகுந்தன. மக்களின் துன் பந் துடைக்கத் தஞ்சை மன்னர் முன்வந்தார். மங்கம் மாளும் மனம் வருந்தித் தஞ்சை யரசருக்குத் துணை புரிய விரைந்தார். நாட்டின் இன்னல் போக்குவதற் குரிய ஒரே வழி மைசூர் நாட்டின்மீது படை யெடுப்பதே என ஒருமனதாக முடிவு செய்தனர். சிக்கதேவராயருக்கு நல்ல பாடங் கற்பிக்க எண் ணினார்கள். பெரும் படையைத் திரட்டும் முயற்சி யில் இருவரும் முனைந்தனர். அந்த வேளையில் பெருமழை பெய்து, வெள்ளம் பெருக்கெடுத்து, அணைக்கட்டு உடைந்த செய்தி கிடைத்தது. மங்கம் மாள் படையெடுக்கும் முயற்சியைக் கைவிட்டார். ஈண்டும் இயற்கையன்னை அருள்புரிந்த தன்மையைக் காண்கின்றோமன்றோ? அம்மையோ எல்லாம் அவன் செயல் என அகமகிழ்ந்தார். எண்ணியபடி எதுவும் நடக்காது என்பதை நினைந்து ஏங்கினான் மைசூர் மன்னன். ஒவ்வொரு போரிலும் வெற்றியே கிடைத்து வந்ததால் அம்மையின் புகழ் பரவி வரலாயிற்று. அவர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் செய்த போரொன்றே வெற்றி பயக்கவில்லை. அதனால் அம்மையாரின் புகழுக்கு எவ்விதக் குறையும் ஏற்படவில்லை என்பது

குறிப்பிடத்தக்கது. அப்போரின் தன்மையைச் சுருங்கக் கூறுவோம்.

மங்கம்மாள் அரசோச்சிய காலத்தில், மறவ நாட்டு அரசராக இருந்தவர் இரகுநாத சேதுபதி ஆவர். சேதுபதிகளுக்குள்ளே நீண்டகால ஆட்சியும் திறமையும் ஒருங்கே பெற்ருர் இவர் போன்று ஒருவருமிலர். அதனுலேயே இவர் 'கிழவன் சேதுபதி' என்ற புனைபெயருடன் புகழப்பட்டு வந்தார். நாயக்க அரசர்களுக்குக் கப்பம் செலுத்திவரும் வழக்கமிருந்து வந்தது. கிழவன் சேதுபதி தம் ஆட்சிக் காலத்தில் நாயக்க அரசர்களுக்கு உற்றவிடத்து உதவி வந்தார். அதனுல் அவருக்குத் தனிமதிப்புக் கொடுத்து வந்தனர். அதனையே காரணமாகக் கொண்டு திறை செலுத்துவதை நிறுத்தினர். ஸ்ரீரங்ககிருஷ்ண முத்து வீரப்ப நாயக்கரோ சேதுபதியிடம் திறைப் பொருளைப் பெறும் ஆற்றலில்லாதவராக இருந்தார். அவ்வரசர் இறந்தபின், சேதுபதி மதுரையையும் கைப்பற்றி ஆட்சிபுரிந்து வந்தார். சிலகாலம் அவரே உரிமை பாராட்டி வந்தார். சேதுபதியின் பொருந்தாச் செயலை அறிந்து வருந்திஞர் அம்மையார். தளவாய் நரசப்பையாவின்பால் சென்று ஆராய்ந்தார். முடிவாக, மறவநாட்டைத் தாக்க வேண்டும் என்று உறுதி செய்தனர். தளவாய் நரசப்பையா பெரும் படையை நடத்திச் சென்ருர்; சேதுநாட்டு வீரர்களைப் புறமுதுகிடச் செய்தார்; மதுரையை மீண்டும் பெற்றுத் தம் நாட்டோடு சேர்த்தார். இந்த நிகழ்ச்சி நடைபெற்றது 1698-ஆம் ஆண்டிலாம். இப்

போரிலே மறவ வீரர்கள் பலர் மாண்டனர். சேது பதியும் தோல்வியுற்றதற்கு மனம் வருந்தினர்; தம் பெருமை குன்றியது எனக் கருதிப் பழிவாங்கும் எண்ணங்கொண்டார். மறவ வீரர்கள் மாற்ருனிடம் தோற்பதா என்ற மானவுணர்ச்சி மீதூரப் பெற்ருர். மறக்குலத்தின் பண்பை நிலைநாட்ட விரும்பி நின்ருர். அந்தச் சமயத்தில் தஞ்சையரசருக்கும் மங்கம்மாளுக்கும் போர் மூண்டது. நாயக்க அரசுக்கு எதிர்ப்பக்கத்தில் சேர்ந்து பழிவாங்க வாய்ப்புக் கிடைத்தது என மகிழ்ந்தார். தஞ்சையரசருக்கு மறவநாட்டுப் படை சென்று போரில் உதவியது. எனினும், வெற்றி, அம்மையாரையே தேடி அடைந்தது. சேதுபதிக்கோ தாங்க முடியாத வருத்தமும் மானக்குறைவும் உண்டாயிற்று. அம்மையார் வெற்றி பெற்றபின் வாளாவிருக்கவில்லை. எந்த நேரத்திலும் சேதுபதி பகைவர்களுக்குத் துணைநின்று தம் நாட்டிற்கு அழிவு செய்வார் என்று உணர்ந்தார். மறவ நாட்டின்மீது படையெடுக்க முடிவு செய்தார். இந்தத் தடவையும் தளவாய் நரசப்பையாவே படைத் தலைமை பூண்டார். நாயக்கப் பெரும்படை மறவநாட்டை நெருங்குவதை அறிந்தார் சேதுபதி. சேதுபதியோ தம் மறவவீரர்களையெல்லாம் நாட்டுப்பற்றை யூட்டிப் போர்செய்ய அழைத்தார். ஏழுநாட்களுக்குள் எண்ணற்ற வீரர்கள் திரண்டனர். ஒரே குலத்தினராதலாலும், நாட்டுப்பற்றுக் காரணத்தாலும் ஒற்றுமைப்பட்டனர். உயிரைப் பெரிதாகக் கருதவில்லை. போர்க்களம் புகுந்தனர். நாயக்கர் படைமீது பாய்ந்தனர். இரு படைகளுக்கும் கடுமையான போர் நடந்தது.

எனினும், மாவீரன் தளவாய் போர்க்களத்திலேயே மாண்டார். மதுரைப்படை மனமுடைந்து சிதறியது. மறவ வீரர் விடாது மறக்கள வேள்வி செய்தனர். 1702-ஆம் ஆண்டில் கிழவன் சேதுபதி தனியாட்சி நிறுவினர். அதன்பின் தஞ்சையரசரை வென்று அவருக்குச் சொந்தமான அறந்தாங்கிக் கோட்டையைக் கைப்பற்றினர். மங்கம்மாள் மீண்டும் சேதுபதியை வெல்லவே முடியவில்லை. அம்மையார் காலத்திற்றான் சேதுநாடு தனியரசாகியது. தளவாய் இறந்துபட்டது வருந்துவதற்குரியதே. ஆனால், மறவ வீரர்களின் குலப்பற்றும் நாட்டன்பும் புகழ்தற்குரியன வல்லவா? அச்சையா என்பவரை அம்மையார் தளவாயாகத் தேர்ந்துகொண்டு ஆட்சி நடத்துவாராயினர். அவர் பதவிக்கு வந்த பின்னர்க் குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் எதுவும் நடைபெறவில்லை.

அம்மையார் அறப்பணியிலும் அரசியல் திறமையிலும் சிறந்து விளங்கியமை கண்டோம். போர்களில் பெற்ற வெற்றியைவிட அவருடைய குணத்தால் பெற்ற வெற்றியே என்றும் நின்று நிலவும் தன்மையதாகும். அங்ஙனம் போற்றுமாறு அம்மையாரிடத்துக் குடிகொண்டிருந்த அருங்குணங்களை ஆராய்ந்து காண்போம்.

# 7. அம்மையாரின் அருங்குணங்கள்

ஒரு நாட்டிலே பிறந்த ஒருவர் இறந்த பின்னும் அவரைப் பற்றிப் பின் வரும் மக்களும் புகழ்ந்து கூறுவது அவர் செய்த அருஞ் செயல்களாலேயாம். அச் செயல்களையும் கடமை உணர்ச்சியோடும் பண்பு வழுவுவாமலும் செய்வதாலேயே அவர்தம் பெயர் என்றைக்கும் அழியாது நிலைத்துள்ளது. இதனால் அறியப்படும் உண்மை யாது? பண்புடையவர்களாலேயே இந்த உலகம் அழியாது நிலைத்து நிற்கின்றது; அவர்களே அழியா உடம்பைப் பெறுகிறார்கள் என்பதாம். இப் பண்புடையாளர் இனத்துள் வைத்து மதிக்கத் தக்க பெண்பாலாருள் நாயக்க மாதேவியாக விளங்கிய மங்கம்மாள் அம்மையும் ஒருவர். அவ்வம்மையாரிடத்து அமைந்து நின்ற அரும் பண்புகளை முறையாக வரைவோம்.

சொக்கநாத நாயக்கரைக் கணவனாக அடையும் பேறு மங்கம்மாளுக்குக் கிடைத்ததன்றோ? இருவரும் பொருந்தி வாழ்ந்த இல்லற வாழ்வில் இன்பங்கண்டு, அதன் சின்னமாக மகவொன்றையும் எய்தப் பெற்றனர். முற்பகுதியில் நாயகன் நாட்டைச் சிறப்புற ஆண்டுவந்தமையும் பிற்பகுதியில் நாடு அல்லலுற்று வந்தமையும் நன்கு அறிந்திருந்தார். கணவன் உயிர் நீத்ததும் அவருடன் ஒருங்கு உயிர் போக்குவது அக்காலப் பெண்மணிகள் வழக்கம். ஆனால் மங்கம்மாள் கணவன் இறந்த பின்னும் இறவாது

வாழ முற்பட்டார். மைந்தனை வளர்த்து வரவும், நாட்டின் பழம்பெருமையை நிலைநாட்டவும் கொண்ட உணர்ச்சியே அதற்குக் காரணமாம். நாட்டுப்பற்று மிகுதியாக உடையவர்களுக்கு வேறொன்றிலும் பற்றுச் செல்லாதன்றோ? அம்மையாருக்கு நாட்டுணர்ச்சி கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருந்தது. கணவன் மாண்ட பின்னரும் நாட்டிலே குழப்பம் மல்கியிருந்தது. பகையரசர்கள் நாயக்க நாட்டின் பல பகுதிகளைத் தமக்கு உரிமையாக்கிக்கொண்டனர். இந்த நிலைமையிலும் தம் மைந்தனுக்கு நாட்டுணர்ச்சியை வளர்த்து மீண்டும் நாயக்க அரசின் பெருமையை நிலைபெறச் செய்தார். சில ஆண்டுகள் வாழ்ந்து தம் மகன் இறந்ததும், மருமகள் பனிநீர் குடித்து மடிந்ததும், தம் பேரன் குழந்தைப் பருவத்தில் விடப்பட்டதும் ஆகிய அடுக்கி வந்த இடுக்கண்களைக் கண்டு நடுங்கினாரில்லை. நாட்டுப்பற்று மிகுந்திருந்த காரணத்தால் அம்மையார் மீண்டும் உயிர் வாழ்ந்தார். தம் பேரனுக்கு முடிசூட்டிப் பொறுப்புடன் ஆட்சிபுரிந்து வந்தார். செயற்கருஞ் செயல்கள் பல செய்து புகழ்கொண்டார். அனைத்திற்கும் காரணம் அம்மையார் உள்ளத்துப் பொங்கி யெழுந்த நாட்டுப் பற்றேயாம்! பண்டு தொட்டுப் பெண்பாலார் நாட்டுணர்ச்சி மிகுந்தவர்களே. தம் குழந்தைகளுக்குத் தாய்ப்பாலுடன் நாட்டுணர்ச்சியை ஊட்டி வளர்த்தார்கள் என்பது அறிந்ததே. ஒரு தாய் தம் ஒரே மகனை வெள்ளாடையுடுத்து, வேலினைக் கொடுத்து வீரப் போர் புரிய மனமகிழ்ந்து விடுத்தாள் என்ற செய்தி நாட்டுப் பற்றைக்

காட்டுவதன்றே? இந்திய நாட்டிலே இணையிலா ஆண் மகனைப் போன்று உடைதரித்து, வாளேந்திப் படைத் தலைமை தாங்கிப் போர் செய்து உயிர் நீத்த ஜான்ஸி-கி-ராணி நாட்டுணர்ச்சி கொண்டவ ரன்றே? அவ்வாறே மங்கம்மாளம்மை கணவனும் மைந்தனும் இறந்த காலத்தும் கலங்காது நாட்டைக் காக்கவேண்டும் என்ற உணர்ச்சிகொண்டு வாழ்ந் தார் என்பது விளங்குகின்றது. அம்மையாரின் அருங்குணங்களுள்ளே பிறவிக்குணமாக அமைந்தது நாட்டன்பாம். அப் பண்பே ஏனைய பண்புகளுக் கெல்லாம் அடிப்படை என்று கூறுவது மிகை யன்று.

அம்மையார் தம் பேரனுக்குத் தக்க பருவம் வரும்வரை நாட்டை ஆளத் தொடங்கினர் எனக் கண்டோம். அவ்வாறு ஆட்சிப் பொறுப்பை ஏற்ற தும் நாட்டு மக்களுக்கு நன்மை செய்வதிலேயே முனைந்தார். நாட்டுப் பற்றுடையவர்கள் மக்களுக்கு நன்மை புரிவதிலே நாட்டங்கொள்வது இயற்கையே. நாட்டையே தெய்வமாக மதித்த அம்மையார், நாட் டிலே வாழும் உயிர்க் கூட்டங்களை யெல்லாம் தெய் வங்களாகவே கருதினர் போலும்! ஆகவே, நாட்டு மக்களுக்கு வேண்டிய குளங்கள், கால்வாய்கள், சாலை கள், சோலைகள், சாவடிகள், சத்திரங்கள், அறநிலையங் கள், அறிவு மன்றங்கள் அனைத்தும் ஆட்சியேற்ற சில ஆண்டுகளில் அமைத்துக் கொடுத்தார். ஆன்ம விடுதலைக்காக அமைந்துள்ள கோவில்களைச் செப்ப னிட்டு வழிபாடு செய்ய ஆவன செய்தார். மக்கள் இம்மை மறுமை ஆகிய இருமை இன்பத்தையும்

ஒருங்கே பெற்றனர் என்பது புகழுரையன்று. அவற்றிற்குக் காரணம் அம்மையாருக்கு அமைந்த அறவுள்ளமும், கொடைப் பண்பும் ஆகும். அம்மையார் அளவின்றிச் செய்த கொடைத்தன்மையே நாட்டுமக்களனைவரும் புகழ்ந்து பாராட்டக் காரணமாகியது. பிறநாட்டு மக்களும் அம்மையாரின் அறக்கொடை கண்டு வியந்தார்களென்றால் அவர்தம் கொடைமாண்பினை என்னென்று கூறுவது ?

அம்மையாரிடம் மிகவும் போற்றத்தக்க குணம் சமத்துவமாகும். அதாவது, சமய அடிப்படையிலே வேறுபாடு கருதாமல் எல்லாச் சமயங்களையும் ஒன்று போல் எண்ணி நன்மை புரிந்ததாகும். பொதுவாக, நாயக்க மரபினர் பிற மதத்திலே வெறுப்பில்லாதவர்கள். எனினும், மங்கம்மாள் அவர்களைக் காட்டிலும் மதத்துறையில் நடந்துகொண்ட தன்மை மிகவும் விரும்பத் தகுந்ததாகும். அம்மையார் ஆட்சிக் காலத்தில், மறவ நாட்டை அரசு செலுத்தியவர் கிழவன் சேதுபதியாவர். அவர் காலத்தில் கிறிஸ்து சமயம் நாட்டிலே பரவத் தொடங்கியது. 1691-ஆம் ஆண்டில் மெல்லோ என்ற உரோமன் கத்தோலிக்கப் பாதிரியார் கிறிஸ்து சமயக் கொள்கைளைப் பரப்பிக் கொண்டு வருதலைச் சேதுபதி அறிந்தார். அவருடைய பேச்சிலே மக்கள் ஈடுபட்டு மதமாற்றமடைந்து வருதலையும் தெரிந்தார். பாதிரியாரை நாட்டிலே மேலும் உலவவிட்டால் இந்துமதத்திற்குப் பெருந்திங்கு விளையும் என்று எண்ணினார். ஒரு நாள் பாதிரியாரை யாரும் அறியாதவாறு சிறைப்படுத்தினார். கழுவில் ஏற்றப்போவதாகவும் முடிவு செய்தார்.

இந்தச் செய்தி மங்கம்மாளுக்கும் தளவாய் நரசப் பையாவிற்கும் எட்டியது. உடனே சேதுபதிக்கு ஆணையிட்டார். "ஒவ்வொரு சமயத்தவரும் தத்தம் சமயத்தைப் பரப்புவதற்கு உரிமை உண்டு; அதனுல் ஒரு சமயம் மற்ருெரு சமயத்தை அழித்துவிட முடியாது" என்ற அறிவுரையைத் தாங்கிய ஆணை வந்தது. பாதிரியாரை உடனே விடுவிக்கவேண்டும் என்றும் அவ்வாணையில் கூறப்பட்டிருந்தது. சேதுபதியும் அம்மையார் ஆணையைக் கடவாது பாதிரியாரை விடுதலை செய்தார். இந்த நிகழ்ச்சியானது அம்மையாரின் இரக்கப் பண்பையும் சமயப் பொதுமையையும் காட்டுகின்றதல்லவா?

அம்மையாரின் காலத்தே நிகழ்ந்த பிறிதொரு நிகழ்ச்சியும் அவரது அருட்டன்மையைப் புலப்படுத்தும். அம்மையார் ஆட்சி செய்த பொழுது மதுரை கிறிஸ்தவ சபைத் தலைவராக இருந்தவர் பிரிட்டோ என்ற பாதிரியார். அவர் போர்ச்சுகல் நாட்டிற்குச் சென்று சிலகாலம் தங்கிவிட்டு இந்தியாவிற்குத் திரும்பினுர். அதன்பின் மறவநாடு ஏகினுர். கிறிஸ்து சமயத்தை மிக விரைவாகப் பரப்பும் வேலையை ஊக்கத்துடன் செய்துவந்தார். 'தம்முயிர்க்கு இறுதியே வரினும் சமயத்தொண்டைக் கைவிடேன்' என உறுதி கொண்டுழைத்தார். சமயத்தை விரைவாகப் பரவச் செய்ய வேண்டுமானுல் அரச மரபினர் ஒருவர் துணையை எவ்வாருயினும் பெறவேண்டும் என எண்ணினுர். அப்பொழுது மறவநாட்டை ஆண்டுவந்த சேதுபதிக்குப் பின் பட்டமேற்கும் உரிமையுடைய இளவரசர் தடியத் தேவர் என்பவர். சேதுபதி

கிறிஸ்து சமயத்தில் வெறுப்புடன் இருப்பதைப் பாதிரியார் நன்கு அறிந்ததால் அவர் உதவியை நாட வில்லை. ஆகவே தடியத் தேவர் என்பவரிடம் சென்று தம் சமயக் கருத்துக்களை இனிமையுற எடுத்தோதி வந்தார். தேவரும் பாதிரியார் பேச்சில் ஈடுபட்டார். கிறிஸ்து சமயத்தைத் தழுவி விட்டார். இளவரசரே கிறிஸ்து சமயத்தைச் சார்ந்தார் எனக் கருதி அவ ரைச் சூழ்ந்த சுற்றத்தவரும் ஏனைய மக்களும் அச் சமயத்தைச் சார்ந்துவிட்டனர். தடியத் தேவரோ கிறிஸ்து சமய ஒழுக்கத்தைப் பின்பற்ற வேண்டிய தாயிற்று. அம் முறைப்படி தமக்கு விரும்பிய ஒரு மனைவியை வைத்துக்கொண்டு ஏனைய மனைவியரை விலக்கிவிட்டார். அவ்வாறு விலக்கப்பட்ட பெண் களுள் ஒருத்தி சேதுபதிக்கு மருமகள் முறையினள். கணவன் புறச்சமயம் புகுந்ததும் தம்மை இரக்க மின்றி விலக்கியதும் ஆகிய செய்திகளைக் கூறிக் கண் ணீர் பெருகி வழியுமாறு கிழவன் சேதுபதியின் திரு வடியில் வீழ்ந்து முறை வேண்டினாள். பெண் என் றால் பேயுமிரங்கும் என்பார்களன்றோ ? சேதுபதி அவள் துன்பமொழிகளைக் கேட்டு உள்ளம் கொதிப் படைந்தார். உடல் பதறினார். தடியத் தேவரும் அவ ரைச் சார்ந்தோரும் கிறிஸ்து சமயம் புகுந்தமைக்கு மனம் வருந்தினார். இவை யாவற்றிற்கும் காரணம் பாதிரியார் பிரிட்டோ என அறிந்தார். முதலில், தடியத் தேவரையும் ஏனையோரையும் கிறிஸ்து சமயத்தி லிருந்து தம் சமயத்திற்குத் திருப்ப முயன்றார். முயற்சி பயன் தரவில்லை. பின்னர் கிறிஸ்து சமய எதிர்ப் பாளர்கள் அனைவரையும் ஒன்று சேர்த்தார். அனை

வரும் கிறிஸ்து சமயம் பரவினுல் நாட்டிற்கு அழிவே என்று ஒருமனதாகத் தெரிவித்தனர். அதற்குக் கிறிஸ்து சமயப் பாதிரியார் பிரிட்டோவைப் பழி வாங்க வேண்டும் என்று முடிவு செய்தார். பிரிட்டோவையும் அவரைச் சார்ந்தோரையும் சிறைப்படுத்தினுர். பிரிட்டோ சிறைப்பட்டது அறிந்த தடியத் தேவரும் ஏனைய கிறிஸ்துவர்களும் அவரை விடுவிக்குமாறு கிளர்ச்சி செய்தனர். அக் கிளர்ச்சியினை அறிந்த சேதுபதி பிரிட்டோவை நாடு கடத்தினுர். அந் நாடு பாம்பாற்றின் கரையிலுள்ளது. உறையூர் என்ற பெயரை யுடையது. அங்கு வாழ்ந்து வந்தவன் கிழவன் சேதுபதியின் தம்பி. அவனிடத்திற்ருன் பிரிட்டோ என்ற பாதிரியார் மறைவாக ஒப்புவிக்கப்பட்டார். அன்றியும் உடனே கழுவேற்றுமாறு ஆணையும் தந்து விட்டார். உறையூர்த் தேவனே சேதுபதியின் கட்டளையை உடனே நிறைவேற்றவியலாமல் திகைத் தான். அதற்குக் காரணம் அவன் மனைவி கிறிஸ்து சமயத்தைத் தழுவியவள். அவள் அறிந்தால் தடை செய்யவும் செய்தி வெளியே பரவவும் ஏதுவாகும். எனினும், தளவாய் முருகப்பபிள்ளை கிறிஸ்துமதம் என்ற வார்த்தையைக் கேட்டளவிலேயே வெறுப் படையும் உள்ளமுடையவர். அவர் உறையூர்த் தேவனை இடைவிடாது தூண்டினுர். ஆதலால், தேவர் பிரிட்டோவைக் கழுவேற்றிக் கொலைப்படுத் தினுர். கிறிஸ்து மதம், பிரிட்டோவைக் கொன்று விட் டால் அழிந்துவிடுமா? பிரிட்டோ தம்மைத் துறந்த தாலே கிறிஸ்து சமயம் விரைவாகப் பரவலாயிற்று. பிரிட்டோ இறந்த எட்டு ஆண்டுகளில், பகைமை

பாராட்டிய உறையூர்த் தேவரும், தளவாயும் கிறிஸ்து சமயத்தவர்கள்பால் இரக்கம் காட்டினர். சேதுபதியின் முதன் மகனுகிய வடுகநாதத்தேவரும் கிறிஸ்து மக்களிடம் நட்புப் பூண்டு ஒழுகலாயினர். கிறிஸ்து சமயம் சேது நாட்டில் மிகவும் வளர்ந்தோங்கியது. மதத்தின் பொருட்டு உயிர் நீத்த பிரிட்டோவைப் போற்றிப் புகழ்ந்தனர். இந்தக் கொலைச் செய்தியை மங்கம்மாள் அறிந்தார். அறியாமையால் நிகழ்ந்த கொடுமைக்கு மிகவும் வருந்தினுர். தளவாய் நரசப்பையாவும் வெஞ்செயல் கேட்டு நெஞ்சம் புழுங்கினுர். பிரிட்டோவின் கொலைத் தண்டனை முன்னரே தெரிந்திருக்குமாளுல் அம்மையார் எப்படியும் தடுத்தேயிருப்பார். ஆனுல், எவரும் அறியாது இரகசியமாகச் செய்துவிட்ட சேதுபதியை நினைந்து நாணமடைந்தனர்!

கிறிஸ்து சமயம் சேதுநாட்டில் நன்கு பரவி வந்ததன்றே? அப்பொழுது மத போதகர்களும், கிறிஸ்தவ மக்களும் அம்மையார் ஆட்சியில் நன்கு மதிக்கப்பட்டார்கள். அவர்களுக்கு எவ்விதத் தீங்கும் நேராதவாறு உரிமையைக் காத்து வந்தனர். பிறமதம் என்ற வெறுப்பில்லாமல் பொருளுதவியும் செய்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1691-ஆம் ஆண்டில் மெல்லோ என்ற கத்தோலிக்கப் பாதிரியாரைக் கழுவேற்ருதவாறு அம்மையார் காப்பாற்றியதை முன்பு குறிப்பிட்டோமன்ருே? அக்காலத்தே மதுரையிலும் வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களுக்கு இடையூறுகள் ஏற்பட்டன. சிலர் கிறிஸ்தவர்கள் அனைவரையும் நாட்டைவிட்டு ஓட்ட முயன்றனர்.

பல்லாற்ருனும் தொல்லேகள் பல விளேத்து வந்தனர். அப்பொழுது கிறிஸ்தவப் பாதிரியாராக விளங்கியவர் பூச்சே என்பவர். தம் மக்களுக்கு இழைக்கப்படும் இன்னல்களேத் தவிர்க்க வழி என்ன எனச் சிந்தித் தார். அம்மையாரிடம் சென்று முறையிடலே தக்கது என முடிவு செய்தார். சிறிதும் காலந்தாழ்க்காது திருச்சிக்குச் சென்று தளவாய் நரசப்பையாவைச் சந்தித்தார். தளவாய்க்கு உயர்ந்த பொருள்களேப் பரிசாக வழங்கி நிலேமையைத் தெளிவாக விளக்கினர். அப்பொருளே எடுத்துக்கொண்டு பாதிரியாருக்கு ஆவன செய்வதாக வாக்களித்தார். அப்பொருள்களே யெல்லாம் அம்மையாருக்கே அனுப்பிவிட்டார். பாதிரி யாரின் விருப்பத்தை நிறைவேற்றுமாறும் சொல்லி விடுத்தார். அம்மையாரும் தளவாயின் சொல்லுக்கு மதிப்பீந்து அவர் வேண்டுகோளுக்கு இசைந்தார். கிறிஸ்தவர்களுக்கு எல்லாப் பாதுகாப்பும் செய்வதாக உறுதி கூறினர். பாதிரியாரைப் பல்லக்கில் ஏற்றி ஊர்வலம் செய்து சிறப்பித்தார். எம் மதத்தவரும் தம் உரிமையோடு வாழலாம் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தார். இச் செயலும் அம்மையாரின் அருட் குணத்தையும் மத வெறுப்பில்லாப் பண்பையும் உணர்த்துகின்றதன்ருே ?

சேதுபதியின் நாட்டில் கிறிஸ்து சமயம் நன்கு வேரூன்றி விட்டது. அதனல் மற்ற நாடுகளிலும் அச் சமயத்தைப் பரப்பும் முயற்சி நடைபெற்று வந்தது. கிறிஸ்து மதம் பரவினல் இந்துமதக் கோவில்களுக் கும் இந்து அரசர்களுக்கும் அழிவுவரும் என்று தஞ்சையரசர் அஞ்சினர். ஆகவே, தம் நாட்டிலுள்ள

கிறிஸ்தவர்களைத் துன்புறுத்தியும் அவர்களை நாட்டை விட்டு வெளியேற்றியும் வந்தார். தம் நாட்டில் அல்லாமல் ஏனைய மதுரை, உடையார்பாளையம் அரசர்களுக்கும் கிறிஸ்தவர்களை ஒழிக்க முயலுமாறு திருமுகம் விடுத்தார். உடையார்பாளையம் அரசர் தம் நாட்டிலுள்ள நான்கு கிறிஸ்தவத் தலைவர்களைக் கைது செய்யும்படி ஆணை பிறப்பித்தார். அவர்களும் இரகசியமாகத் தப்பிவிட்டனர். தஞ்சையரசன் எழுதியவாறு கிறிஸ்தவர்கள் அனைவரையும் துன்புறுத்தவில்லை. மதம் பரவாதபடி ஒருவாறு தடைசெய்தார். ஆனால், அம்மையாரோ தஞ்சையரசர் கடிதத்தைப் பொருட்படுத்தவே இல்லை. மக்களில் சிலர் சோறு உண்ணுகிறார்கள். சிலர் இறைச்சியுணவு கொள்ளுகிறார்கள். அதுபோல மக்கள் அவரவர் எந்த மதத்தைத் தங்களுக்கு உண்மையென்று நம்புகிறார்களோ அந்த மதத்தைத் தழுவுகிறார்கள். இஃது அவரவர் உரிமையும் இயல்பாயமைந்த பண்புமாம் என யாவரும் அறியச் செய்தார். கிறிஸ்து மதத்தையும் ஒன்றாகக் கருதி உரிமை தந்து புகழ் கொண்டார். ஏனைய அரசர்களெல்லாம் மதத்துறை பற்றிக் கொண்ட கொள்கையினும் அம்மையார் பின்பற்றிய மதக் கொள்கை யாவரும் போற்றுவதாக இருந்தது. இதனினும் அம்மையாரின் சமயப் பொது நோக்கிற்கு ஒரு சான்றுமுளது. அம்மையார் இந்து மதத்தைச் சேர்ந்தவர். அதனால் இந்து மதக் கோவில்களுக்குத் திருப்பணிகள் பல செய்தார். பெரும் பொருளையும் அறக் கட்டளை முட்டாமல் நடைபெறும் பொருட்டு எழுதி வைத்தார்.

கிறிஸ்து மக்கள் சென்று வழிபடும் மாதா கோவில் களுக்கும் பொருளுதவி செய்துள்ளார். அன்றி யும், இஸ்லாமிய மக்களை மறந்தாரிலர். அவர்கள் மிகச் சிறுபான்மையினராக இருந்த போதிலும் வேறு பாடாகக் கருதி இகழாது உதவியதை அறிகின்றோம். 1692-ஆம் ஆண்டிலே எழுந்த செப்புப் பட்டயத்தில் இஸ்லாமியர்கள் தொழுகின்ற மசூதிக்குத் தம் பேரன் விஜயரங்க சொக்கநாத நாயக்கர் பெயரால் பொருள் உதவி செய்ததைக் காணலாம். 1701-ஆம் ஆண்டில் திருச்சியின் பக்கத்திலேயுள்ள சில சிற்றூர்களை முகம் மதியர் தர்காவிற்கு நன்கொடை யளித்துள்ளமை அறியலாம். இவையெல்லாம் அம்மையாரின் சமயப் பொதுமையை வலியுறுத்தும் சான்றுகளல்லவா? இப் பண்பு எல்லாருக்கும் அமைவது அரிது. ஆனால், பெண்ணரசியாகிய மங்கம்மாளம்மைக்குச் சிறப்புற அமைந்துள்ள தொன்றே அவர் பெருமைக்கு எடுத் துக் காட்டாகும். சமத்துவம் என்று முழங்கும் இந்தக் காலமெங்கே? சமத்துவப் பண்பிற் சிறிதும் பிறழாது அரசோச்சிய அம்மையார் எங்கே? ஆகவே, அம்மை யார் கண்ட வழிநின்று சமத்துவம் காண அனைவரும் முயல்தல் கடனன்றோ!

அடுத்தாற் போன்று அம்மையார்பால் அமைந்த சிறந்த குணம் கடமையுணர்ச்சி என்பதாம். மக்கள் தம் குறையை முறையிட்டபோதே இரக்கத்தோடு கேட்பர். எம் மதத்தவராயினும், எவ்வினத்தவராயி னும் ஒரு தன்மையாக எண்ணுவதும் நீதி வழங்கு வதும் அம்மையாரிடத்துண்டு. ஒருமுறை மெல்லோ என்ற பாதிரியாரைச் சிறையிலிட்டுப் பின் தூக்கிலிட

முயன்ற சேதுபதிக்கு விடுதலை செய்யுமாறு ஆணை யிட்டது அவரது கடமையுணர்ச்சியே அன்றோ? பூச்சே என்ற பாதிரியார் கிறிஸ்தவ மக்களுக்கு ஏற் பட்ட இன்னலைப் போக்குமாறு முறையிட்டபோது பாதுகாத்துத் தம் கடமை வழுவாது ஒழுகினரன்றோ? அன்றியும், ஒரு முறை அம்மையார் சௌராஷ்டிர வகுப்பினர்களுக்கு ஏற்பட்ட மனக் குறையைத் தீர்த்து மகிழ்வித்த தன்மை மிகப் பாராட்டுதற் குரிய தாம். நாயக்க மன்னர்கள் விஜய நகர ஆட்சிக்குட் பட்டு ஆண்டுவந்த காலத்தில் வந்து குடியேறியவர் கள் சௌராஷ்டிர வகுப்பினர். தம் சொந்த நாடாகிய சௌராஷ்டிரத்தை விட்டு முதன் முதலில் சோழ நாட் டிற்குப் போந்தனர். அதன் பின் நாயக்கவரசர்கள் காலத்தில் ஒரு பகுதியினர் மதுரையில் வந்து வாழ்ந் தனர். நெசவுத் தொழிலை மேற்கொண்டு சிறந்த செல்வாக்குப் பெற்றனர். வணிகத்திலும் கைத் தொழிலிலும் நல்ல வளர்ச்சி அடைந்தனர். அரசர் களின் அன்பும் ஆதரவும் கிடைக்கப் பெற்றுச் செல் வத்தாலும், புகழாலும் உயர்ந்தனர். அந்தணர்களைப் போன்று வாழ்க்கை முறைகளை வகுத்து ஒழுகி வந் தனர். சௌராஷ்டிரர்கள் ஆசாரமும் அந்தணர்கள் ஆசாரமும் ஒன்ருகவே காணப்பட்டன. அந்தணர்கள் தம் ஒழுக்கத்தைக் கவர்ந்து கொண்டதாக எண்ணி வெறுக்கத் தலைப்பட்டனர். சௌராஷ்டிரர்களோ தாங்கள் கொண்டுள்ள ஒழுக்க முறைகள் அந்தண ருடையதன்று என்று கூறி வன்மையாக எதிர்க்கத் தொடங்கினர். அப்பொழுது மங்கம்மாளிடம் மதுரைக் கோட்டை அதிகாரியா யிருந்தவர் சோதிடம் வேங்கட

ரங்க ஐயர் என்பார். அவர் அந்தண மரபைச் சார்ந்தவர். சௌராஷ்டிரர்களைப் பற்றி அந்தணர்கள் அவரிடம் குறை கூறினர். ஆதலால், அவர் தம் அதிகாரத்தின் செல்வாக்கால் சௌராஷ்டிரர்களில் குறிப்பிட்ட சிலரைச் சிறையிலடைத்தார். அவர்களை மதுரையிலடைத்தால் குழப்பம் ஏற்படும் என்று கருதி இரகசியமாகத் திருச்சிக்கு அனுப்பிச் சிறைப்படுத்தினார். இச் செயலால் அந்தணர்கள் மிகவும் மகிழ்ந்தனர். எதிரிகள் தம் இனத்தவரை விடுவித்தருளுமாறு அம்மையாரிடம் விண்ணப்பித்தனர். அம்மையார் உண்மையைத் தெரிந்து அனைவரையும் உடனே விடுதலை செய்தார். அன்றியும் அவர்கள் எவ்விதத் துன்பமுமின்றி வாழ ஓர் அறிக்கையும் வெளிப்படுத்தினார். திருவரங்கத்திலுள்ள ஆசிரியர்களையும் முதிர்ந்த அறிஞர்களையும் அழைத்து இருசாராருடைய ஒழுக்கங்களையும் ஆராயும்படி செய்ததாகவும், அவர்கள் சாத்திர முறைப்படி ஆய்ந்து சௌராஷ்டிரர்களுக்கும் அவ்வொழுக்கம் உண்டென்றும், அவர்கள் முன்னோர் மொழிப்படியே கையாண்டு வர வேண்டுமென்றும் கூறியதாகவும், அவர்கள் சொல்லிய முறைப்படியே அரண்மனைக்கண்ணிருந்து எழுதி அறிவிக்கப்பட்டது. அவ் வாணையை அறிந்த சௌராஷ்டிர மரபினர் அம்மையாரின் கடமையுணர்ச்சியையும் நீதி மாண்பையும் மனமாரப் புகழ்ந்து வாழ்த்தினர். ஈண்டு அம்மையார் சௌராஷ்டிரர்களைப் பிற நாட்டிலிருந்து வந்து குடியேறியவர்கள் என்று கருதாமல், மதுரையிலுள்ள தம் அதிகாரி செய்ததாயினும், நீதிக்கு மாறுபட்டதென அறிந்து

அவர் நாணுமாறு அவர்களனைவரையும் விடுவித்ததும் களங்கமில்லாக் கருணைப் பண்பைக் காட்டுகின்ற தன்றோ? 'ஓர்ந்து கண்ணோடாது இறை புரிந்து யார் மாட்டும் தேர்ந்து செய்வஃதே முறை' என்ற வள்ளுவப் பெருந்தகையின் மொழியைச் சுட்டுவது இவண் இன்றியமையாததாம். அம்மையார் தாமே அவ் வழக்கை முடிவு செய்யாது அதனை நன்கு அறிந்த பெருமக்களைக்கொண்டு ஆராய்ந்து அறிக்கை வெளியிட்ட அரசியல் அறிவை என்னென்பது! நாட்டை ஆள்பவர் முறையாக நடந்து காட்டினால் மக்கள் ஒரு நாளும் முறை தவறமாட்டாரன்றோ? அம்மையாரும் 'அரசன் எவ்வழிக் குடிகள் அவ்வழி' என்ற அமுத மொழியை அறிந்தனர் போலும்!

இனி, அம்மையாரிடம் காணப்பட்ட அருங் குணங்களுள் அருளுணர்வும் ஒன்றாகும். அருளே உலகை ஆளவேண்டும் என்று எண்ணும் அருளாளர்கள் சிலர். அவர்களுள் ஒருவராக மதிக்கத் தகுந்த பெருமையுடையவர் மங்கம்மாளாவார். இந்திய நாட்டின் அருட்சுடர் அசோக மன்னனை அறியாதவர் ஒருவரும் இரார். கலிங்கப்போர்தான் அம் மன்னனை உலகறியச் செய்தது. போர்க்களத்திலே அருள் அரும்பியது. கலிங்கப் போரிலே எண்ணற்ற வீரர்கள் இறந்து குருதி ஆறுபோலப் பெருகிப் பரந்து செல்வதைக் கண்டார். பிணமலை குவிவதையும் பார்த்தார். 'ஓர் அரசனின் தன்னலத்திற்காக ஆயிரக் கணக்கான உயிர்கள் பலியாவதா? வாழப் பிறந்தவர்கள் பாழாவதா? இது நீதியுமன்று; அருளுமன்று'

என மனம் நைந்தார். அன்றே தோன்றியது அவருள்ளத்தில் அருளுணர்ச்சி. அன்று முதல் தம் வாழ்நாளில் போர் செய்வதில்லை எனச் சூளுரை செய்தார்; அருள் நெறியைப் பரப்பி அழியாப் புகழைப் பெற்றார். இந்நிகழ்ச்சி அசோகர் போரை வெறுத்ததையும் உலகில் அமைதி நிலைபெறுவதற்கு ஒரே வழி அருளுணர்வே என்று விரும்பியதையும் உணர்த்துகின்றதன்றோ?

அடுத்தாற்போன்று சங்க காலத் தமிழகத்தில் போரை ஒழிக்கப் புலவர் பெருமக்கள் பாடுபட்டதைக் காண முடிகின்றது. போர் என்ற சொல்லைக் கேட்டவுடனே மக்கள் இன்று கலக்கமடைவதைப் பார்க்கின்றோம். ஏன்? போரினால் உண்டாகும் பேரழிவை நன்கு அறிந்ததனாலேயாம். ஆக்கமின்றி அழிவைத் தரும் போரை எவர்தாம் விரும்புவர்? கடந்த இரண்டு பெரிய உலகப் போர்களே போரால் விளையும் தீங்கிற்குச் சான்றாம். ஹிரோசிமா, நாகசாகி என்ற பெரு நகரங்கள் அணுக்குண்டால் அழிந்து மண்ணோடு மண்ணாகப் போய்விட்டதை மக்கள் இன்னும் மறந்துவிடவில்லை. அதனைத் தொடர்ந்து கொரியா போர் வெறியால் சுடுகாடாகியதை யாரே அறிந்து வருந்தாதார்? ஒவ்வொரு தடவையும் பேரழிவைக் கண்டு உலகப் பெருந் தலைவர்கள் கூடுவதும், உலக சமாதானத்திற்கு வழி தேடுவதும் கண்கூடு. ஆனால், ஐக்கிய நாடுகள் சபையின் தோற்றமும் வளர்ச்சியும் போரை முற்றிலும் நிறுத்திவிடவில்லை. அதன்கண் பங்கு கொண்ட நாடுகள் உண்மையான சமாதானத்திற்கு

ஒன்றுபட்டிருப்பதாகவும் கூறமுடியாது. இன்று ஐக்கிய நாடுகள் சபையின் தலைமை இந்தியாவிற்குக் கிடைக்கும் பேறு ஏற்பட்டுள்ளது. இந்தியா உண்மையான சமாதானத்தையே விரும்புகின்றது. அணுக் குண்டு, நீர்வாயுக் குண்டு முதலியவற்றைத் தடைப் படுத்தியும் உள்ளது. மக்கள் சீரைவிற்குத் தக்க இடம் தரும்படி எடுத்துக் கூறியது. அமெரிக்கா-பாகிஸ்தான் இராணுவ ஒப்பந்தத்தை வன்மையாகக் கண்டித்தது; ஒரு நாடு மாத்திரம் தன் உண்மை உழைப்பைச் சமாதானத்திற்கு அளித்தால் போதுமா? அனைத்து நாடுகளுக்கும் அந்த எண்ணம் தோன்ற வேண்டுமன்றோ? அன்றுதான் உலக சமாதானம் உருவாக முடியும். இன்றேல் மக்களனைவருடைய உள்ளத்திலும் அந்த எண்ணம் உருவாகிச் செயல் பட வேண்டும். நாகரிகம் வளரக் காரணமாக இருந்த இந்த விஞ்ஞான காலத்தில் யாவரும் விரும்பும் சமாதான வாழ்வைப் பழந்தமிழ்ப் புலவர் கோவூர் கிழார் விரும்பினார். அரசர்களுக்குள்ளே பகைமை உண்டாகின்றபொழுது போரால் விளையும் அழிவை விளங்கக் கூறிச் சந்து செய்விப்பது வழக்கம். இரக்க முண்டாகுமாறு அவர் கூறிய அறிவுரைகள் படிப்பார் உள்ளத்தை நெகிழ்விக்கும் பான்மையவாம். அந்தக் காலத்தில் கொள்ளையிடுதலும் எரியூட்டுதலும் நிகழ்ந்தன. போர்க்களத்தில் வீரர்கள் மடிவதை விரும்பியதும், அவர்கள் இறப்பதை வீர சுவர்க்க வாழ்விற்கு வழி என்று கருதியதும் காண்கின்றோம். ஓர் அரசன் பகை நாட்டு மகளிரின் கூந்தலை அரிவதும் அவர்களை இரங்கியழுமாறு சிறைப்படுத்துவதும்

உண்டு. அரசர்களின் கண்களைப் பிடுங்குவதும், பற்களைப் பிடுங்கி வாயிற் கதவிலே பதிப்பதும் ஆகிய கொடுஞ் செயல்களும் போரால் நிகழ்ந்தன. இன்னும் எத்தனையோ அறமல்லாத செயல்கள் நடந்ததாக அறிகின்றபோது போரின் கொடுமை புலனுகின்றது. இத்துணைத் தீமை பயக்கும் போரை யார்தாம் விரும்புவார்? அதற்கு மாருக என்றும் இன்ப வாழ்வளிக்கும் சமாதான வாழ்வையன்றே எவரும் விரும்புவர்? இந்த எண்ணம் அம்மையாருக்கு இயல்பாகவே அமைந்ததோ என நினைக்குமாறு இருந்தது. ஒருமுறை அவுரங்கசீப் ஆட்சிக் காலத்தில் தென்னுட்டின் மீது ஏவிய முகம்மதிய வீரர்களால் அழிவு நேராமல் சமாதானம் செய்துகொண்டார் அம்மையார். அவர்தம் உள்ளத்தில் எண்ணியது போர் இல்லாமலே இறுதிவரையிலும் ஆட்சி செலுத்தவேண்டும் என்பதாம். அதற்கும் ஒரு சிறந்த காரணமுண்டு. ஆட்சியேற்றதும் அம்மையார் உள்ளம் அறப்பணியிலே மூழ்கிக் கிடந்தது. அவ்வறப் பணிக்குச் செலவிட்ட தொகையோ கணக்கிலடங்காதது. பொதுவாக அறத்திலே நாட்டங்கொண்டவர்கள் அழிவுண்டாக்கும் போரை விரும்புவரோ? அம்மையார் ஆட்சியில் நிகழ்ந்த போர்களும் தவிர்க்க முடியாதனவேயாம். அன்றியும், தளவாய் நரசப்பையா அரசியல் பாதுகாப்பிற்கு இன்றியமையாது என அறிவுறுத்தியதுமாம். அம்மையார் தனிப்பட்ட உயிருக்கோ அன்றி ஓர் இனத்தவருக்கோ தீமை செய்ய விரும்பினுரில்லை. அவ்வாறிருக்க ஆயிரக்கணக்கான மக்களைப் பலி வாங்கும் போரினை எவ்வாறு விரும்புவார்? பிற

அரசர்கள் இரக்கமின்றி ஒரு தனிப்பட்டவர்க்குத் தீங்கு செய்ய நினைந்து முனைந்தகாலை அம்மையார் தடுத்து நிறுத்திச் சமாதானப்படுத்தியதை அறிய லாம். மெல்லோ என்ற பாதிரியார் சேதுபதியால் கழுவேற்றப்பட இருந்தபோது தடுத்துக் காத்தவர் அம்மையாரன்றோ? ஆகவே, அம்மையார் போரை விரும்பவில்லை என்பதும், சமாதானமே வெற்றி என்ப தில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும் அறியக் கிடக்கின்றன. நாட்டில் அருளுணர்வைப் பரவச் செய்தால் போர் ஒழிந்துபோம். அதனைப் பரப்புவ தற்குப் பொருளை மிகுதியாக வழங்க வேண்டும். அப் பொழுதுதான் அறம் பெருகி அருள் மலரும். அமைதி யும் இன்பமும் பொங்கிப் பொழியும். இவை வளர வேண்டுமாயின் எல்லா உயிர்களையும் இறைவன் திருவுருவமாகவே கருதி அன்பு செலுத்த வேண்டும் என்று அம்மையார் தெளிந்தார். அம்முறையில் தவறாது ஒழுகிவந்தார். 'அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும் செல்வச் செவிலியாலுண்டு' எனும் இலக்கிற்கு இலக்கியமாக நின்றார். அதனால் அம்மையார் நாட்டிலே மறம் மடிந்து அறம் மிகுந்தது; அருள் தழைத்து மருளை வென்றது. இன்று சான் றோர் எழுப்பும் சமாதானக் குரல் அன்றே ஒலித்தது என்று கூறின் மிகையாகாதன்றோ?

மங்கம்மாள்பால் அமைந்த குணங்களுள் வியந்து பாராட்டத் தகுந்தது புகழ் விரும்பாமை என்பதாம். அதற்குக் காரணம் அவர்பால் நிலைத்திருந்த அறவுள்ளமேயாகும். அறம் செய்கின்ற காலத்தில் புகழை விரும்பிச் செய்யவில்லை. தாம் செய்த அறச்

செயல் பற்றிப் பல்லோரும் புகழ்கின்றபோது அதற்காக மகிழ்ச்சி கொள்ளவுமில்லை. மக்கள் யாவராயினும் அவர்களிடம் அன்பு காட்டுவதும் நல்லன புரிவதும் தம் கடமை எனக் கொண்டிருந்தார். புகழ் என்ற போதையிலே அம்மையார் மூழ்கியிருப்பரேல் அவர்பால் இத்துணை வியத்தகு குணங்களைக் காணுதல் முடியாது. அவரோ, அறப் பணியால் வந்த புகழ் மொழிகளையும், போர் வெற்றியால் பெற்ற புகழுரைகளையும் மனத்திலே கொள்ளவில்லை; புகழ் என்பதைக் கருதின் செருக்கு ஒருவருக்கு எளிதிலே குடிகொள்ளும். செருக்கு இடம்பெற்றபின் அழிவு வருமே தவிர நன்மை சிறிதும் வருவதில்லை. அம்மையாரோ அத்தீய பண்பிற்குத் தம் உள்ளத்தில் இடமே கொடுக்கவில்லை. அறம் குடிகொண்ட மனத்திலே ஆணவம் இடம் பெறுவது அருமையே. இந்த உண்மையை அம்மையார் நன்கு அறிந்தவர் என்பது தெளிவாகின்றது. உலகத்தில் புகழை விரும்பாதவர் இல்லை. அப்புகழை அடைவதற்கு ஒவ்வொருவரும் ஒவ்வொரு துறையை நாடுகின்றனர். மக்கள் பலர் இம்முயற்சியில் வெற்றிபெறுவதில்லை. சிலர் வெற்றி பெற்று விடுகின்றனர். அறத்தால் வெற்றி பெறுவோரும், போரால் வெற்றிபெறுவோரும், அறிவால் வெற்றி பெறுவோரும், பொருளால் வெற்றி பெறுவோரும், பட்டம் பதவியால் வெற்றி பெறுவோரும் எனப் பல திறத்தினர். அவர்கள் புகழேணியின் உச்சியை அடைகின்றனர். அவர்கள் மறைந்த பின்னரும் புகழ் இறவாது நிற்கின்றது. புகழ் பெறுதவர்களும் தத்தம் வாழ்நாள் முடிந்து இறந்த பின்னர் மண்ணிலே

புதைக்கப்படுகின்றனர். இல்லாவிட்டால் ஈமத்தீயின் கண் வைத்து எரிக்கப்படுகின்றனர். இம்முறைப் படியே புகழ்பெற்றவர்களும் தத்தம் வாழ்நாள் முடிந் ததும் மண்ணிலே புதைக்கப்படுகின்றனர். இறந்த பின் யாவரும் சமமே என்ற உண்மை விளங்கக் காண் கின்றோமன்றோ ? இங்கே ஏழை செல்வன், கற்றவன் கல்லாதவன், உயர்ந்தவன் தாழ்ந்தவன், புகழுடை யன், புகழிலான் என்ற வேறுபாடுகளும் புதைபடுகின் றன. அனைவரும் இறைவனின் மக்கள் என்ற உயர்ந்த மனநிலை தோன்றுகின்றது. செருக்கு என் பதும் மாய்ந்து விடுகின்றது. ஒன்றே குலம் என்ற பொதுநிலை அங்குச் சுடர்விட்டு மிளிர்கின்றது. இந்த ஆழ்ந்தகன்ற நுட்பமான தத்துவம் அம்மையார் உள் ளத்தில் உறைந்துவிட்டது போலும்! அதனால்தான் அம்மையார் புகழுக்கு அடிமையாகாமல் அறவரசியாக விளங்க முடிந்தது. புகழை விரும்பாத புனிதவதி என்று புவியோர் போற்றிப் புகழ்ந்ததும் பொருத்தமே யன்றோ ?

இத்தகைய சிறந்த குணங்களையும் ஒருங்கே கொண்ட அம்மையாரின் ஆட்சியில் எல்லாவித நன் மைகளும் நிரம்பியிருந்தன. உழைப்பே பெருஞ் செல்வம்என்று ஒவ்வொருவரும் எண்ணிவாழ்ந்தனர். நாட்டு மக்களின் உழைப்பால் விளைவு மிகுந் திருந்தது. விளைவு மிகுதியால் அனைவரும் உண்டு பசி நீங்கி இன்ப வாழ்வு நடத்தினர். இன்பமாக வாழ்ந்ததால் உடல் உரம்பெற்றுப் பிணியின்றி இருந்தனர். உழைத்து உண்டது போக எஞ்சிய பொருளெல்லாம் செல்வமாக நாட்டிற்குப் பயன்

பட்டன. பொருளை வேண்டிய அளவு வீரர்களுக்கு ஊதியமாக வழங்கியதால் படைவலிமை சிறந்தது. படைவலிமையால் பகைவர் அணுகாது நாடு நன்னிலையுற்றது. எல்லோரும் ஓர் நிறை என்ற உரிமை வாழ்வு நிலைத்தது. ஒரு நாட்டிற்கு அணிகலமாக வேண்டிய ஐந்தும் அம்மையார் ஆட்சியில் பொருந்தியிருந்தன. அவைதாம் பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம் என்பன. அந்த நாடே வேறு எந்த நாட்டிற்கும் தலை தாழ்த்தாது நிமிர்ந்து நிற்கும் தன்மையது ஆகும். இதனை நம் வள்ளுவர் பெருமான், "பிணியின்மை செல்வம் விளை வின்பம் ஏமம் அணியென்ப நாட்டிற்கிவ் வைந்து" என அழகுபடக் கூறியுள்ளமை நினைக்கத்தக்கது.

அம்மையார் நாட்டை நன்னிலைப் படுத்தித் தாமும் அரண்மனையில் அமைதியுற வாழ்ந்தனர். அவருடைய அரண்மனைக் கட்டிடங்களாகக் கருதப்படுபவை இன்றும் மதுரையில் அரசாங்க அலுவலகங்களாகப் பயன்படுகின்றன. 'மங்கம்மாள் சத்திரம்' என்பது அம்மையார் பெயராலேயே வெளிப்படையாக விளங்கு கின்றது. அம்மையாரின் உருவம் ஒன்று மதுரைக் கோவிலின் பொற்றாமரைக் குளத்தின் சுற்றுப் புறத்தேயுள்ள மண்டபத்தில் ஓவியமாகத் தீட்டப் பெற்றுள்ளது. அவ்வோவியத்தில் அமைச்சர் அச்சை யாவும் பேரன் விஜயரங்க சொக்கநாதனும் உடனிருப் பதாகக் காட்டப்பட்டுள்ளது. அம்மையார் புகழை விரும்பியிருந்தால், நாட்டிலே எத்தனையோ நினைவுச் சின்னங்கள் எழுப்பியிருக்கலாம்; கற்சிலைகள் அமைத் திருக்கலாம். ஆனால், அவர் சிறிதும் புகழ் விரும்பாத

*தால், மக்களும் அம்மையாரின் அழியாப் புகழைக் குறிக்கும் நினைவுச் சின்னங்கள் ஏற்படுத்தவில்லை என்று தெரிகின்றது. எனினும், மங்கம்மாள் பெயரைச் சொல்லி வாழ்த்தாதவர் ஒருவரும் இல்லை எனலாம். வரலாற்றுப் பேராசிரியர்கள் வரைந்துள்ள பொன் மொழிகளே அம்மையின் அழியாப் பெருமைக்குப் போதிய சான்றாகும். அவ்வருமை மொழிகளைக் கீழே குறிப்போம்:*

**“மதுரை நாயக்க மன்னர்களில் விசுவநாத நாயக்கரும், திருமலை நாயக்கரும் தவிர மங்கம்மாளைப் போன்று மக்கள் நினைவில் என்றும் அழியாத இடத்தைப் பெற்றவர்கள் வேறு ஒருவரும் இல்லை.”**

# 8. அம்மையார் மறைவு

**1689**-ஆம் ஆண்டில் ஆட்சிப் பொறுப்பை ஏற்று அளவிலாப் பெருமை பெற்ற மங்கம்மாளம்மையார் தம் பேரன் விஜயரங்க சொக்கநாதனுக்குப் பருவம் வந்ததும் ஆட்சியை ஒப்புவித்தார். அதன்பிறகு தம் அரண்மனையில் தங்கி இறைபணி செய்து இன்பமாக வாழ்ந்து வந்தார். அவ்வாறு ஐம்பத்தைந்து ஆண்டுகள் குறைவின்றி உயிர் வாழ்ந்த அம்மையார் நோய்வாய்ப்பட்டுத் துன்புறவில்லை. 1706-ஆம் ஆண்டில் எவ்வித இன்னலுமின்றி இறைவன் திருவடி எய்தினார். அவர் பிரிவைக் கேட்ட மக்களின் மன நிலையைச் சொல்லுதல் எளிதோ? அறம் வளர்த்த அன்னை அகன்று விட்டனரே என அழுதார் சிலர். இனி என்று காண்போம் என ஏங்கினர் சிலர். அமரர் தங்கட்கு அறம் புரிய அழைத்தார் போலும் என ஆறினர் சிலர். அம்மையார் ஆன்மா நன்னிலை எய்த வாழ்த்தித் தம் துன்பம் தணித்தனர். அன்று தொட்டு அம்மையைத் தெய்வமாகக் கருதி வழிபட்டுத் தம் நன்றியைப் புலப்படுத்தினர்.

மண்ணுலகில் பெண்ணினத்திற்கு மதிப்பு வழங்கியது தமிழகம் அன்றோ? இதன்கண் பெண் குலம் ஈன்ற முத்தாயர் பெருமைக்குரியவர்கள். **அறிவால பெண்ணுலகிற்குப் பெருமை அளித்தவர் ஔவை மூதாட்டியார். அவ்வம்மையை அறிவுத்**

**தாய் என அழைத்து மகிழ்கின்றனர் மக்கள். கற்பால் பெண்ணுலகிற்குப் பெருமை நல்கியவர் கண்ணகியார். அவ்வம்மையைக் கற்புத் தாய் என அழைத்து மகிழ்கின்றனர் மக்கள். அறத்தால் பெண்ணுலகிற்குப் பெருமை தந்தவர் மங்கம்மாள். அவ்வம்மையை அறத் தாய் என அழைத்து மகிழ் கின்றனர் மக்கள்.** *அறத் தாயாக மாத்திரமன்றி நாயக்க மரபின் பேரரசியாக விளங்கிப் பெருமை யளித்த அம்மையாரை* **''நாயக்க மாதேவி''** *என அழைத்து மகிழ்வதும் பொருத்தமே யன்றோ ?*

MADURAI UNIVERSITY LIBRARY
4 AUG 1970
MADURAI